# சான்றோர் வாக்கு

அ. மு. ப.

# சான்றோர் வாக்கு

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்
தமிழ்க்கலை இல்லம், சென்னை-30

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

முதற்பதிப்பு : 1993

வள்ளியம்மாள் கல்வி அறத்தின்
வெள்ளிவிழா வெளியீடு
12-3-1993

விலை : பதினேழு ரூபாய்

இதன் வருவாய் அனைத்தும்
வள்ளியம்மாள் கல்வி அறத்துக்கே உரியது.

---

அச்சிட்டோர் :
கவின் கலை அச்சகம்,
கந்தசாமி நகர், பாலவாக்கம்,
சென்னை-600 041.
தொலைபேசி : 41 71 41

வெள்ளிவிழா வெளியீடு

# முன்னுரை

உயிரினங்களில் உயர்ந்தவன் மனிதன். ஆறறிவு பெற்ற அவன் வாழ்வுப்பாதை நேராக அமைவதில்லை. குறுக்கும் நெடுக்கும், வளைவும் முடுக்கும், மேடும் பள்ளமும், வழுக்கவும் இழுக்கமும் உள்ளதாக அது அமைகின்றது. ஆயினும் அவற்றை யெல்லாம் கடந்து—வென்று அவன் நேரிய வழியில் நடந்து 'மனிதனா'கத் தன்னைக் காட்டிக் கொள்ளக் கடமைப்பட்டவனாகின்றான். அத்தகைய வாழ்வின் நெடும் பயணத்தில் வழித்துணையாக — உதவியாக — உற்ற நண்ப னாகஉதவுவன சான்றோர் வாய்மொழிகளே! இதையே வள்ளுவர்,

'இழுக்கல் உடையுழீஇ ஊற்றுக் கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்'

என்கிறார், இத்தகைய ஒழுக்கசீலர்—சான்றோர் கூறிய வாய்மொழிகளை வாழும் சமுதாயத்துக்கு அன்றாடம் நினைவூட்டிக் கொண்டிருக்கும் வகையில், காலை நிகழ்ச்சி யினை நாள்தோறும் 'சான்றோர் வாக்கு'டன் சென்னை வானொலி தொடங்குகின்றது. பல ஆண்டுகளாக நான் அதில் பங்கு கொண்டு பேசிய நிலையில், அவற்றுள் ஒரு சிலவற்றை இந்நூலில் பெய்துள்ளேன். எனவே இந்நூலுக்குச் 'சான்றோர் வாக்கு' எனவே பெயரிட்டேன். நான் வானொலியில் பேசிய வேறு சிலவற்றை முன்னமே 'சிறுவர்களுக்கு' 'வானொலி வழியே', 'நாலும் இரண்டும்' என்பன போன்ற நூல்களாக வெளியிட்டுள்ளேன். அவற்றின் தொடர்பாக இது அமை கின்றது.

என்வாழ்வில் பத்துத்திங்கள் (1958-59) மதுரை வாழ்வாக அமைந்தது. தியாகராஜர் கல்லூரியில் முதுகலைப் பேராசிரியனாகப் பணியாற்றிய அந்தநாளில் அங்குள்ள திருவள்ளுவர் கழகத்தார் என்னைப் பிணித்தார். திரு. பொன்னம்பலத் தியாகராசன் (P.T. Rajan) அவர்கள் தலைவராகவும் விவேகானந்த அச்சக உரிமையாளர் திரு. பழநியப்பர் செயலாளராகவும் அமைய, அக்கழகம் தொடங்கப் பெற்று, சொக்கர் திருக்கோயிலின் ஓரங்கமாக உள்ள 'வடக்கு ஆடி வீதியில்' நிலைத்து அன்று தொட்டு இன்று வரை பணியாற்றி வருகின்றது. இன்று அதன் தலைவராகப் பழநியப்பர் உள்ளனர். மதுரையில் மற்றொரு தமிழ்ச்சங்கமே என அது பல புலவர்களுடன் பொலிவுறுகின்றது. நான் அங்கு இருந்தபோது ஏழ்தொடர் சொற்பொழிவுகளாக ஏழுவாரம் பத்துப்பாட்டினைப் பற்றிப் பேசினேன். அவை அப்போதே சில ஆண்டுகள் கழித்துப் 'பாட்டும் பயனும்' என்ற நூலாக வெளிவந்தது, அப்போதும் அதற்கடுத்தும் திருக்குறளில் சில அதிகாரங்களை வரிசைப் படுத்தி முறையாக நாள் தோறும் நான் பேசிய, குறள்பற்றிய பேச்சுக்களின் சுருக்கங்களும் இதில் இடம்பெறுகின்றன.

முதல் கட்டுரை ஓய்வு பெற்ற உயர்வாளர்—முதியோர் தம் உலகளாவிய மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அதற்கென எழுதப் பெற்றது. இவையன்றி வேறு இரண்டொரு கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு பல்வேறு வேளைகளில் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து, அன்பர்களான— மாணவர்கள் நூலாக வெளிக்கொணர விரும்பினர். அதன் வழியே இந்நூலும் 'நல்லவை ஆற்றுமின்' என்ற நூலும் இப்போது வெளிவருகின்றன.

என்னைப் பெற்று, பெயரிட்டு, வளர்த்து உலகில் மனிதனாக உலவச் செய்த என் அன்னையின் பெயரால்

அமைந்த வள்ளியம்மாள் கல்வி அறம் (அரசாங்க விதிப்படி பதிவு செய்யப் பெற்றது) கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சென்னையில் செனாய்நகர், அண்ணாநகர்ப் பகுதிகளில் தொண்டு செய்துவருகிறது. குழந்தைகள் வகுப்பு முதல் கல்லூரி முதுநிலை வகுப்புவரையில் பயில வாய்ப்பாகக் கல்வி நிலையங்கள் உள்ளன. அத்தகைய அறத்தின் வெள்ளிவிழா இவ்வாண்டு இப்போது (மார்ச்சு 1993) நடைபெறுகின்றது. இந்த வெள்ளிவிழா வெளியீடாகவே இந்த இருநூல்களும் அமைகின்றன. இரு, நூல்களும் தக்கார் தலைமையில் தக்கார் வழியே வெளியிடப் பெற்று தக்கார் பெற அமைகின்றன என்று எண்ண மகிழ்ச்சி பிறக்கின்றது.

இந்நூலின் கட்டுரைகள் சான்றோர் வாக்குகளாக, பெரும்பாலும் குறட்பாக்களின்—அதிகாரங்களின் விளக்கங்களாக அமைகின்றமையால் மக்கள் வாழ்வுக்கு ஓரளவு வழிகாட்டியாக இருக்க வழி உண்டு என எண்ணுகின்றேன். நாடு ஏற்று நலம் காணும் எனும் துணிபுடையேன்.

இக்கட்டுரைகளைத் தொகுத்து, அச்சிடும் போது பிழை திருத்தி, செம்மையாக வெளிவர உதவிய பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் சா. வளவன் அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

வாழ்க வள்ளுவம்! வளர்க தமிழ்!

அன்புடன்

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30
12-3-1993

**அ. மு. பரமசிவானந்தம்**
(நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்)

# உள்ளே


| எண் | தலைப்பு | நாள் | பக்கம் |
|---|---|---|---|
| | முத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் | | 9 |
| 1 | வினைசெயல் வகை | 7-2-77 | 16 |
| 2 | ,, | 8-2-77 | 18 |
| 3 | ,, | 9-2-77 | 21 |
| 4 | ஈகை | 5-2-81 | 24 |
| 5 | புகழ் | 6-2-81 | 29 |
| 6 | அருளுடைமை | 7-2-81 | 34 |
| 7 | புலால் மறுத்தல் | 8-2-81 | 39 |
| 8 | தவம் | 9-2-81 | 44 |
| 9 | கூடா ஒழுக்கம் | 10-2-81 | 49 |
| 10 | கள்ளாமை | 11-2-81 | 54 |
| 11 | பயனில சொல்லாமை | 16-10-76 | 60 |
| 12 | புறங்கூறாமை | 17-10-76 | 63 |
| 13 | சுற்றம் பேணுதல் | 18-10-76 | 66 |
| 14 | உழவு I | 20-4-77 | 73 |
| 15 | ,, II | 21-4-77 | 76 |
| 16 | ,, III | 22-4-77 | 78 |

| | | | |
|---|---|---|---|
| 17 | அறம் | 27-8-86 | 81 |
| 18 | அறிவு | 26-8-86 | 84 |
| 19 | அறிவுடையோர் செயல் | 4-7-88 | 86 |
| 20 | நூலும் அறிவும் | 29-10-72 | 89 |
| 21 | கல்வி | 28-8-86 | 94 |
| 22 | எந்நாளும் இன்பமே | 1-6-80 | 100 |
| 23 | உள்ளத்தால் ஒன்றுக | 17-3-78 | 103 |
| 24 | அல்லது செய்தல் ஓம்புமின் | — | 105 |
| 25 | முயற்சி ஆக்கம் தரும் | — | 108 |
| 26 | சிறுகாலையே செய்க | 20-8-76 | 110 |
| 27 | புல்லறிவு புகவேண்டா | 21-8-76 | 113 |
| 28 | கொன்னே கழியீர் | 22-8-76 | 115 |
| 29 | முதுரை | 5-9-90 | 118 |
| 30 | வெஞ்சொலும் பொய்மையும் வேண்டா | 4-8-77 | 124 |
| 31 | தாயுமானவர் | 11-2-91 | 126 |
| 32 | ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் | 12-2-91 | 129 |
| 33 | உயிர்களை ஒத்து நோக்குக | | 132 |
| 34 | நலம் செழிக்க நல்லவழி | 13-2-91 | 134 |

# மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

எண்ணரிய பிறவிகளுள் ஏற்றமுடையது மானுடப் பிறவியே. இம்மானுடப் பிறவி மற்றைய பிறவிகள் அனைத்திலும்—தெய்வப் பிறவி உட்பட—மேம்பட்ட ஒன்று என்பதைத் தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் நன்கு விளக்குகின்றன. அத்தகைய மனிதப் பிறவியில் பெரியோர் எனப்படுபவர் உலக அனுபவம் நிறைந்தவர்ளே ஆவர். ஒருவனை முழு மனிதனாக்குவது அவனுடைய ஆழ்ந்த அனுபவ முதிர்ச்சியேயாகும். உலகில் உள்ள உயிரின—சமுதாய வாழ்வில் பெறும் அனுபவம் மிகப்பெரியது. அதனால்தான் கடவுளர்கூடச் சில வேளைகளில்—தீமை நீக்கி நன்மை பயக்கும் நிலைகளில் மனித உரு எய்துகின்றனர். கம்பன் 'வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற தன்றே' என அதன் சிறப்பினைப் பாராட்டுவான்.

இந்த அனுபவம் வாய்ந்த மனிதரை வள்ளுவர் 'அறனறிந்த மூத்த அறிவுடையார்' (441) என்கின்றார். உலக வாழ்க்கையில் பட்டறிவு பெற்று, பலவகையில் பெற்ற அனுபவத்தால் தெளிந்த அறிவுடையராகி அறவழியில் நிற்பவர் மூத்தவராவர். வயதில் மூத்தவர்கள் இந்த உலக அறிவு பெறுதல் கல்வி கற்றலினும் மேம்பட்டது என்ற உண்மையினை 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார், பல கற்றும், அறிவிலாதார்' (140) என்று இல்லற இயலில் ஒழுக்க முடைமையின் இறுதியாக விளக்குகிறார் வள்ளுவர். உலகில் குடும்பத்தொடு ஒன்றி வாழ்ந்து உலக அறிவினைப் பெற்று, நலம் தீங்குகளில் பட்டு உழன்று பண்பட்ட பெரியவர்களைத் தான் 'மூத்தோர்' என்றும் 'பெரியவர்' என்றும் உலகம்

கூறுகின்றது. இவர்தம் வாக்கினை அமிர்தமாகப் போற்றி அவர்வழி ஒழுக வேண்டும் என்பதை ஔவையார் 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' எனக் காட்டிவிட்டார். எனவே இத்தகைய மூத்தோர் துணை கொண்டு வாழும் யாரும்—எந்தச் சமுதாயமும் சிறக்க வாழும் என்பது உறுதி. வள்ளுவர் இதை விளக்கவே 'பெரியாரைத் துணைக்கோடல்' (அரசியல்) 'பெரியாரைப் பிழையாமை' (அங்கவியல்) என இரண்டு அதிகாரங்களை அமைத்துள்ளார்.

இளையவர்கள் முதலில் தம் பெற்றோராகிய தாய் தந்தையரைப் போற்றி, அவர் சொற்படி நடக்க வேண்டும். ஔவையார் அவர்களையே முதல் தெய்வமாகக் காட்டி, பின் இறைவன் கோயிலைச் சுட்டுகிறார்.

> 'அன்னையும் பிதாவும் முன்அறி தெய்வம்
> ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

எனக் காட்டுவர். மேலும் அவரே 'தந்தை தாய்ப்பேண்' என்றும் 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் கூறுவார். எனவே முதலில் முதிர்ந்தவராகிய பெற்றோரை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பின் 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்றதனால் பிற பெரியோர்களை—வயதில் மூத்தோர் களை—உலக வாழ்வில் உழன்று அனுபவம் பெற்றவர்களை மதித்து, அவர்தம் வார்த்தையினை அமிர்தமெனப் போற்றிப் பின்பற்ற வேண்டும். இன்றைய உலகம் இந்த வகையில் மூத்தோரைப் பின்பற்றாத காரணத்தினால்தான், உலகில் பல சிக்கல்களும் வீடுதொறும் பூசல்களும் போராட்டங்களும் நிகழ்கின்றன. நாடும் ஊரும் உலகும் அமைதியாக வாழ வேண்டுமானால் மூத்தோர் சொல் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். அதிலும் சிறப்பாக நாடாளும் நல்லவர்கள் இதனைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே 'பெரி

யாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தை அரசியலில் வைத்தார். அரசியலில் உள்ளதால் மற்றவர்களுக்கு இல்லை என்பது இல்லை. சிறப்பாக உள்ள நிலையை முன்கூறி, அதன்வழி உலகில் வாழ் மக்கள் அனைவருக்குமே வள்ளுவர் இந்த நெறியினைக் கையாளுவர். 'கல்வி அரசியலில் உள்ளது' எனவே அரசர் தவிர மற்றவர் படிக்க வேண்டாம்' என்று யாராவது சொல்லுவார்களா! எனவே 'தம்மிற் பெரியார் தமராய் ஒழுகுதல் வன்மையுள எல்லாம் தலை' (குறள் 444) என்று கூறியபடி பெரியவரைத் தழுவி அவரொடு இயைந்து ஒழுகுதலே வாழ்வாகும் எனத் தெளிதல் வேண்டும்.

முற்காலத்தில் மூன்று, நான்கு வகுப்புகளில் இருந்த ஒரு பாடம் நினைவுக்கு வருகிறது, ஒருவர் தன் தந்தையைத் தெருத் திண்ணையில் இருக்க வைத்து, அவருக்கு ஒரு திரு ஓடும் கொடுத்து, நாள் தோறும் வெறும் கஞ்சியினை ஊற்று வாராம். தானும் தன் மனைவி மக்களும் நன்கு உண்டு மகிழ, பெற்ற தந்தைக்கு இத்தகைய கொடுமையினை நாள் தொறும் செய்து வந்தாராம். பல நாட்களாயின, ஒருநாள் அந்த ஓடு காணாமற் போய்விட்டது. தந்தையை அவர் மிகவும் கடிந்து கொண்டு, அன்று கஞ்சியும் கிடையாது என்று கூறிவிட்டாராம். உடனே அவர் பக்கத்தில் இருந்த அவர் மகன் வந்து 'அப்பா அந்த ஓட்டினை நான்தான் எடுத்து வைத்திருக்கிறேன். உனக்கு வயதான பிறகு நான் இவ்வாறு உனக்குக் கஞ்சி ஊற்ற வேண்டுமல்லவா! அதற்காகவே எடுத்து வைத்திருக்கிறேன்' என்றானாம். கேட்ட அவன் தந்தை திடுக்கிட்டான். வருங்காலத் தன் நிலையை உணர்ந்தான்; வருந்தினான். பிள்ளையின் உபதேசம் அவனைத் திருத்தியது. அப்பாவை வீட்டுக்குள் அழைத்து பிறரைப் போலவே அவரையும் வாழ வைத்தானாம். இப்படி நீதி பொதிந்த பாடங்களையெல்லாம் ஏழு எட்டு வயது நிரம்பிய பிள்ளை உள்ளங்களில் பதிய அன்று பாட

நூல்கள் எழுதினார்கள். இன்று இப்படி இல்லையே. எதை எதையோ பற்றி எழுதி—நீதி இன்னதென அறியா வகையில் கல்வி செல்ல, அவற்றைப் படிக்கும் பிள்ளைகள் பின் எப்படிப் பெரியவர்களை மதிப்பர்? வளர்ந்தபின் மாணவர்—பிள்ளைகள்—மனம் மாறுகிறார்கள், போதைக்கும் பேதையாகிறார்கள் என்று அரசாங்கமும் பெற்றோரும் அவலக்குரல் எழுப்பினால் பயன் என்ன? 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற ஔவை நீதியே அரசாங்கப் பாட நூல்களில் ஒருகால் அகற்றப்பட்டதே—பின் வாழ்வது எங்கனம்?

நம்நாட்டில் மட்டுமன்றி உலகெங்கிலும் மூத்தோர் அல்லது பெற்றோருடன் கலந்து வாழும் சமுதாய நிலை மாறியே உள்ளது. பெற்ற தாயும் தந்தையும் தனித்து வாழும் நிலையே பெரும்பாலும் காணப் பெறுகின்றது. பெற்றோரும் மற்றைய பெரியோரும் கூறும் அறிவுரைகளைக் கேட்டு, அவற்றின் வழி நடக்கும் பிள்ளைகள் அருகியே வருகின்றனர். சமுதாயப் பிணைப்பு அல்லது குடும்பப் பிணைப்பு என்பது வெறும் சொல்லளவிலே நிற்கும் நிலை உருவாகி வருகின்றது. இதனாலேயே உலகில் முதிர்ந்தோர் தங்குவதற்கெனத் தனித்தனி இல்லங்கள் பல இடங்களில் அமைக்கப் பெறுகின்றன. பிள்ளைகளிடமோ பிற இளைஞர்களிடமோ இருந்து அவல வாழ்வு வாழ்வதைக் காட்டிலும் வசதிகள் அளவறுக்கப் பெற்றதாயினும் முதியோர் இல்லங்களில் அமைதியாக வாழவே பல பெற்றோர்கள் நினைக்கின்றனர். தாய் தந்தை அற்று, வாழ வழியற்ற குழந்தைகளுக்கு அனாதை இல்லங்கள் அமைவன போன்று, ஊர் தொறும் முதியோர் இல்லங்கள் தோன்றுகின்றன. பொதுத் தொண்டு நிறுவனங்களும் அரசாங்கமும் இந்த வகையில் அண்மையில் கருத்திருத்திச் செயலாற்றத் தொடங்கி இருப்பது வயது வந்தோருக்கு ஆறுதலாக உள்ளது. மக்கள் வாழ்க்கை சராசரி வயது வளர வளர (இன்று 62 என்

கின்றனர்) முதியவர் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. இந்தியாவில் இன்று ஐந்து கோடி பேர் முதியவர்களாக எண்ணப் பெறுகின்றனர். செயலாற்றல் வல்லவர்களாக இருப்பினும் வயது வரம்பு உள்ளமையின் பலர் வேலைகளை விட வேண்டியுள்ளது. அவர்களுக்கு ஓய்வு ஊதியம் பெற வழி உண்டு. அரசாங்கம் வயதான மற்றவர்களுக்கும் ஓய்வு ஊதியம் தரவும் ஏற்பாடு செய்துள்ளது. குடும்பத்தின் வருவாய் காரணமாக இருந்தவர் மறைந்தால், அவரைச் சார்ந்தவருக்கும் குடும்ப ஓய்வு ஊதியம் என்னும் பெயரால் உதவி செய்கிறது.

இத்தனை ஏற்பாடுகளுக்கும் அடிப்படைக் காரணம் மக்கள் வயதான காலத்தில் வாட்டமில்லாமல் வாழ்வதற் கெனவேயாகும், இந்த ஏற்பாடுகளை வற்புறுத்தி, அரசாங்கத் திடம் எடுத்துக் கூறிக் குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டி குறை நீக்கம் செய்வதற்கெனவே அனைத்திந்திய ஓய்வு ஊதியப் பெருமன்றம் (Federation of Indian Pensioner's Associations) செயலாற்றி வருகின்றது. அதன் தலைமை நிலையம் சென்னையில் உள்ளது. தமிழகத்திலிருந்து சென்று, இந்த ஓய்வு ஊதிய முறைக்கு அமைச்சராக இருந்த மாண்புடை திரு. சிதம்பரம் அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில் பல புதிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். இன்றும் அரசாங்கம் புதுப்புது வழி வகைகளை ஆய்ந்து கொண்டிருக் கிறது. இந்திய ஓய்வு ஊதியப் பெருமன்றமும் இந்த ஆண்டு அனைத்துலக ஓய்வு ஊதியர் மாநாட்டைச் சென்னையில் (1992) நடத்துகிறது. இப்பெருமன்றத்தின் தலைவர் அவர்களும் பிறரும் அல்லும் பகலும் மூத்தோர் அல்லல் நீக்கப் பாடுபடும் செயல் எண்ணிப் போற்றுதற்குரியது. அவர் களும் ஓய்வு பெற்றவர்களே. அவர்கள் செயல் சிறக்க என வாழ்த்துகின்றேன்.

சமுதாயத்துக்கு ஒரு வார்த்தை. எவ்வளவுதான் செல்வச் செழிப்புடன் இன்றைய சமுதாயம் வாழ்கிறது என நினைத்தாலும் மனிதத்தன்மை அற்றதாகவே அது இருக்கிறது. மனிதனாக வாழ வேண்டியவன், மிருகமாகவோ வேறாகவோ மாறி, 'தான்' 'தான்' என்ற தனி நிலையில் செழிக்க நினைக்கிறான். அதனாலேயே வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு போரும் பிணக்கமும் நிகழ்கின்றன. அண்ணன் தம்பி, கணவன் மனைவி, தாய் மகன் என்ற உறவும் இல்லாமல் வெறும் மிருக வாழ்வாக அவன் வாழ்வு அமைகின்றது. 'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்' என்று பாரதிதாசன் கூறியபடி ஒவ்வொரு மனிதனும் பேதப்பட்டு வாழ்கின்றான். தான் எப்படி வாழ்வது என்பதை மறந்து, மற்றவரை எப்படித் தாழ்த்தலாம்—வதைக்கலாம்—மாய்க்கலாம் என்றே திட்ட மிடுகிறான். இதனாலேயே நாடுதொறும் குமுறலும் குழப்பமும் உண்டாகின்றன. நாடாளுகின்றவர்களும் நல்ல முறையில் மக்களைச் செலுத்த வழிவகுப்பதில்லை. தனி மனிதன் ஆதிக்கம்தானே எந்த நாட்டிலும் தலை தூக்கி நிற்கின்றது. எனவே மிருக உணர்வு கொண்ட தனி மனித ஆட்சியைத்தானே காண முடியும். 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்ற பழமொழிப்படி மக்களும் நிலை கெடுகின்றனர். வாழ்வில் எப்படியாவது தான் மட்டும் முன்னேற வேண்டும் என் ஒவ்வொருவனும் முயல்கிறான். அதனால் தகாத வழியில் இலஞ்சமும் பிற கொடுமைகளும் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. 'பாரத நாட்டில் பழைய ஆட்சியே மேல்' எனப் பலர் நினைத்துப் பேசும் அளவிற்குப் பூசல், பொறாமை, கொலை, இலஞ்சம், கொள்ளை பிற எல்லாக் கொடுமைகளும் நிகழக் காண்கிறோம். உலக நாடுகள் முழுவதிலும் இந்நிலைதான். இந்த அவல நிலையைப் போக்க வழியில்லையா! ஏன் இல்லை?

வீடுதோறும் பெரியவர்களை இணைந்து வாழ விட்டு, அவர் தம் சொற்படி, பின் உள்ளவர் கேட்டு நடக்க வேண்டியது முதற்படி. அப்படியே நாடுகளும். அதனாலே தான் வள்ளுவர் பெரியாரைத் துணைக்கோடலை அரசிய லுடன் சார்த்தினார். தனி மனிதன் கெட்டால் அவலம் சிறிதாகும். அரசு கெட்டால் நாடே அழியுமல்லவா! எனவே, முதிர்ச்சி பெற்ற சான்றோரைத் துணைக்கோடலில் உண்டாகும் நன்மையினையும் அல்லா விட்டால் விளையும் தீமையினையும் இருபது குறட்பாக்களால் விளக்குகிறார் வள்ளுவர்.

> ''மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்
> இனநலம் ஏமாப் புடைத்து'' (குறள் 485)

என்றும்,

> ''அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
> திறனறிந்து தேர்ந்து கொளல்'' (குறள் 441)

என்றும்,

நல்ல முதியவர்தம் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை யினை வற்புறுத்தி,

> ''பல்லார் பகைகொளினும் பத்தடுத்த தீமைத்தே
> நல்லார் தொடர்கை விடல்'' (குறள் 450)

என்றும்,

> ''எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
> பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார்'' (குறள் 896)

என்றும் அத்தகைய மூத்தோர் தொடர்பு இன்றேல் உண்டாகும் தீமையினையும் சுட்டிக் காட்டுகின்றார்.

வையத்துவாழும் மக்கள் அனைவரும், அரசுகளும் இந்த உண்மைகளை உணர்ந்து, தம்மிற் பெரியார் தமராய் ஒழுகி, அவர்களை ஆதரித்து, அவர்கள் வழி ஒழுகின் நாடும் உலகும் நலமுறும். மக்கள் மாசு நீங்கப் பெறுவர். அந்த

நன்னாளுக்கு அடிகோலி, ஆக்க நெறி வகுத்து—நாட்டையும் உலகையும் நல்லதாகும் நெறி வகுத்து, இந்த அனைத்துலக ஓய்வாளர் பெருமாநாடு வழி காட்டுவதாக! இத்தகைய பெரியார் வழி அறிந்து வாய்மொழி போற்றி வையம் வளம் பெற்று வாழ்வதாக!

# வினை செயல் வகை

உலகில் தோன்றும் உயிர்கள் அனைத்தும் வினைவயப் பட்டவையே. ஒவ்வோர் உயிரும் ஏதேனும் வினையைச் செய்து கொண்டேதான் இருக்கும். அறிவறிந்த மனிதன் தான் செய்யும் வினைகளுக்குக் காரண காரியங்களைக் கற்பித்துக் கொள்வான். பிற உயிர்கள் ஆற்றும் வினை களுக்கும் காரணங்கள் இல்லாமல் இரா. மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு வினையினையும் எண்ணி, ஆய்ந்து செய்யக் கடமைப்பட்டவனாகின்றான். ஒவ்வொரு வினையும் மனித சமுதாயத்தை மட்டுமன்றி உயிரினத்தையே பாதித்துக் கட்டுப்படுத்துமாதலால், அவ்வினை செய்யுமுன் எண்ணல் இன்றியமையாதது.

வினை என்பது தொழிற் பெயர். வள்ளுவர் இவ்வினை பற்றிய கருத்தினை மூன்று இடங்களில் சிறப்பாகவும் பிற விடங்களில் குறிப்பாகவும் காட்டியுள்ளார். இல்லற இயலில் 'தீவினை அச்சம்' (21) என்ற அதிகாரத்தாலும், அரசியலில் 'தெரிந்து செயல் வகை' (47) 'தெரிந்து வினையாடல்' (52) 'ஆள்வினை உடைமை' (62) என்ற அதிகாரங்களாலும் அங்கவியலில் 'வினைத்தூய்மை' (66), 'வினைத்திட்பம்' (67). வினை செயல்வகை' (68) என்ற அதிகாரங்களாலும் வினை பற்றிக் காட்டியுள்ளார். இந்த மூன்று இயல்களில் அமைந் தாலும் வினையும் அதனால் விளையும் பயனும் எல்லாருக்

கும்—எல்லா உயிர்களுக்கும் இயைந்தனவேயாம். உலகம் உள்ளளவும் வினை நிகழும் ஆதலின் அதன் செயல் முறையும் பயன்களும் என்றென்றும் எண்ணத்தக்கனவே யாம்.

வினை (கருமம்) என்ற சொல்லுக்கு அரசகாரியம், செய்கை, செயல், செய்து போந்த செயல், முயற்சி, பொருள் செய்தல், இன்பச் செயல், போர், பயன் முதலிய பொருள்கள் உள்ளன. செய்யப்படுவது செயலாகின்றது. செயலே உலக நிகழ்ச்சிகள் பலவுக்கும் மூலமாகின்றது. வள்ளுவர் பல குறட்பாக்களில் இத்தகைய பொருளமைதிகளையும் கருத்துக் களையும் எடுத்து ஆளுகிறார். அவர் எதை நினைப்பினும் சமுதாயத்தை—உயிரினத்தை ஒன்றாகக் கருதியே நினைப் பார். இவ்வினைசெயல் வகையும் அந்த நெறியினதே. இக் கருத்துக்கள் யாருக்கும்—யாண்டும்—எப்பொழுதும் ஏற்புடை யனவே.

திருக்குறள் அதிகாரங்களின் தலைப்புக்களை நோக்கும் போதே பல உண்மைகள் விளங்கும். நல்வினை, தீவினை இரண்டிலும் மனிதன், தீவினையை நீக்கி, நல்வினையே செய்யக் கடமைப்பட்டவன் என்பதையும் தீவினையைச் செய்ய நினைக்கவும் அஞ்சி விலக வேண்டும் எனவும் 'தீவினை அச்சம்' என்ற அதிகாரத்தின் வழியே காட்டுகிறார். எனவே சமுதாய வாழ்வில் வாய்ப்பு நேர்ந்தாலும்—வறுமையுற்று வாடினாலும் அல்லது மாற்றாரால் மாறுபாடுற்ற கொடுமை செய்யப் பெற்றாலும், மனிதனாக வாழ நினைக்கின்ற ஒருவன் மறந்தும் தீமை செய்யாது—தீமை செய்ய நினையாது, கூடுமாயின் நல்லது செய்தலே உலக வாழ்வுக்கு இன்றியமை யாதது என உணர்தல் வேண்டும். தீவினையின் கொடுமை யினையும் அதுசெய்யாதார் உயர் நிலையினையும் காரணம் காட்டி, செய்வார் பெறும் பயனையும் முறையாக விளக்கு கின்றார் வள்ளுவர். 'தீயவை தீய பயத்தலால்' (202),

'அறிவினுள் எல்லாம் தலை என்ப' (203) 'இலன் என்று தீயவை செய்யற்க' (205) 'எனைப்பகை உற்றாரும் உய்வர்' (207) என்ற குறட்பாக்களால் பல வாழ்வியல் கருத்துக்களை வள்ளுவர் காட்டியுள்ளார். ஆம்! 'இல்லை என்ற கொடுமையால் தீவினை செய்கிறேன்' என்று தீவினை செய்வார் மேலும் இல்லாதவராவர்; தீயினால் பொசுக்கப் பெறுவர்; இத் தீவினையாம் பகையை வெல்லுவது யார்க்கும் இயலாது; வென்றவரே அறிவுடையார்.

உலகில் வாழும் நாம் இன்று எத்தனையோ வகையான சூழல்களுக்கு உட்பட்டு ஏதேதோ செய்ய நினைக்கிறோம்; செய்கிறோம். ஆனால் ஆய்ந்து நோக்கின் அவ்வாறு தீயன செய்யும் வகையால் பயன்விளையாத நிலையினையே அனுபவத்தில் காண்கிறோம். எனவே நாம் வாழவும் நாடு வாழவும் நானிலம் வாழவும் ஒவ்வொருவரும் எந்த நிலையிலும் மனத்தாலும் தீவினை செய்யாதிருக்கும் செம்மை நெறியிலே செல்லப் பழக வேண்டும். அத்தகைய ஆக்க நெறியே வையத்தை வாழ வைப்பதாகும். வள்ளுவர் காட்டிய வழி நின்று நாடும் வீடும் நாமும் நலம் பெற்று உய்யும் வகையில் தீயினும் கொடிய தீவினை நீக்கி கனியென அமையும் நல்வினையைச் செய்வோமாக!

x x x

வள்ளுவர் இல்லறவியலில் காட்டிய வினைபற்றிய கருத்துக்களுள் சிலவற்றை நேற்று எண்ணிப் பார்த்தோம். அவர் பாக்கள் சமுதாய வாழ்வுக்கு வழிகாட்டியாக உள்ள நிலையினை இன்று அரசியலில் வரும் பாடல்கள் வழியே எண்ணிக் காணல் நலம் பயப்பதாகும் என எண்ணுகிறேன்.

பிறந்தவர் யாவரும் உலகம் போற்றும் சமுதாய வாழ்வினை வளமாக்கும் நல்ல செயல்களையே செய்ய வேண்டியவர்களாகின்றோம். வாரி வழங்கும் வள்ளன்மையினும் வையத்தை வாழவைக்கும் அஞ்சா ஆள்வினை உடைமை

அவனியில் போற்றப் பெறுவது. மலைகலங்கினும் மனம் கலங்காது, உச்சி மீது வானிடிந்து வீழ்ந்து விட்ட போதிலும் உளங்கலங்காது ஆள் வினை ஆற்றி உயர்வதுவே உயர் மனிதப் பண்பு. ஆம்! அவ்வாறு அஞ்சாநிலையில் நின்று அருஞ்செயலாற்றிய அண்ணல் காந்தி அடிகளை உலகம் என்றென்றும் போற்றும் என்பது உறுதி. இதை எண்ணித் தான் வற்றாத வாழ்வுக்கு வளம் காட்டும் வள்ளுவர்,

'தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு'(113)

என்று நல்வினையைத் 'தாளாண்மை' என்றும் 'தகைமை' என்றும் காட்டி, அதனால் பெறும் உயர்நிலையினை 'வேளாண்மை' என்றும் 'செருக்கு' என்றும் நலம்படப் பாராட்டுகிறார். இத்தகைய செயல் செய்யும் போது எத்தனையோ இடர்ப்பாடுகள் வரலாம். உலக வாழ்விலே—மெய்நெறியிலே வழி காட்டிய நல்லவர் வரலாறுகள் யாவும் இந்த உண்மையை நமக்கு உணர்த்தவில்லையா? இன்னலுக்கு இடைந்து காந்திஅடிகள் வாளா இருந்திருப்பாராயின் நாம் பெற்ற சுதந்திரம் ஏது? அப்படியே சமயத் தலைவர்களெல் லாம் எதிர்ப்பு, தீமைகளுக்கெல்லாம் அஞ்சி ஒதுங்கியிருப் பாராயின் உலகம் உய்தி பெற்றிருக்குமா? எனவே செய லாற்றும் திறனுடன் திண்ணிய உளஉரமும் அச்செயல் சிறக்க இன்றியமையாததாகின்றது. வள்ளுவர் இந்த உண்மையினை ஒருபடி உயர் நிலையில் அமைத்தே விளக்குகிறார். அப்பொழுதாயினும் நாட்டுமக்கள் தளரா உழைப்பின் தலை நின்று பயன்பெறுவார்கள் என்ற காரணத்தால்.

'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்'(119)

என்பது அவர் வாக்கு. ஆம்! பயனைக் 'கூலி' என்றே சொல்லு கிறார். உலகம் அதனையே நோக்கி நிற்கின்றதாதலின்,

இதன் கருத்து மனிதன் தெய்வத்தினும் மேம்பட்டவன் என்பதன்று. மனித முயற்சி உயர்ந்த ஒன்று என்பதேயாகும். இவன் முயற்சி சிறக்குமாயின் மாறுபட நினைக்கும் அத்தெய்வம் கூட, அவன் முயற்சி கண்டு இரங்கி அவனுக்கு உதவும் என்பதைத்தான் மற்றோரிடத்தில் 'தெய்வம் மடிதற்றுத் தான்முந்துறும்' என வள்ளுவரே காட்டுகின்றார்.

உலகில் எத்தனையோ வகையான செயல்கள் உள்ளன. மனிதன் அவற்றை எண்ணி ஆராயக் கடமைப்பட்டவனாகின்றான். உலக வாழ்வின் அமைப்பினை எண்ணுங்கால் சில உண்மைகள் அவனுக்கு விளங்கும். சில செயல்கள் செய்வதால் தீமை உண்டாகும்; சில செயல்கள் செய்யாவிட்டால் தீமை உண்டாகும். ஆறறிவு படைத்த மனிதன் அச்செயல்களை ஆய்ந்து அவற்றால் சமுதாயத்துக்கும் தனக்கும் உண்டாகும் நலக்கேடுகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும். சமுதாயக் குறைபாடுகளைக் களைதல் அரசுக்கு எளிமையாதலால், இந்தத் தெரிந்து வினையாடல், தெரிந்து செயல் வகை, ஆள் வினை உடைமை ஆகியவற்றை அரசியலில் அமைத்தனர் போலும். ஆம்! சமுதாயத்தை அரித்து நின்ற பல தீமைகளையெல்லாம் இன்றைய அரசாங்கம் எண்ணித் துணிந்து செயலாற்றி வெற்றிபெறக் காணவேண்டு மன்றோ! வள்ளுவர் காட்டிய வழியில் செய்தக்க செய்து, அல்லன நீக்கி அறநெறியில் செல்லும் அரசாங்கத்தை அனைவரும் போற்றுவரன்றோ!

இச்செயல்முறை எல்லாருக்கும் இயைவதன்று. சிலர் அஞ்சி அஞ்சிச் சாவர்; சிலர் துஞ்சியேசாவர்; சிலர் சோம்புவர்; சிலர் இடைக்கண் முறப்பட ஓடுவர். எனவே ஒரு சிலரே வினை நிலையறிந்து செயலாற்றுபவர். அரசியல் உயர்மட்டத்தில் இருப்பவர் திட்டம் தீட்டினும் அதைச் செயல்படுத்துபவரால் பல இடுக்கண்கள் உண்டாவதை நாம் காண்பது போன்றே வள்ளுவர் கண்டிருப்பார். அதனாலேயே 'இதனை இதனால்

இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்' (517) என ஆணையிடுகின்றார். இது அரசியல் அதிகாரிகளுக்கு மட்டுமன்றிச் சமுதாய அடித்தளத்தில் உள்ள சாமானிய மக்களுக்கும் பொருந்தும். ஆம்! தேர்தலின்போது யார் யாரோ வந்து வாக்கினைக் கேட்பர். அவர்கள் முன்பும் இக்குறள் தீட்டப்பட வேண்டுவதே, தெளிந்த சமுதாயம் தெளிந்த ஆள்வினை உடைய செயல்வீரனைத் தேர்ந்தெடுப்பின், அவர் வழி நல்லாட்சி அமைந்து நாடு நாடாகும்; நாமும் நலம்பெறுவோம். அதுவே வள்ளுவர் காட்டும் வழி! நாடு இவ்வுண்மையைப் போற்றி நடப்பதாக.

x x x

வாழ்க்கையிலே அனைவரும் நல்ல செயலே செய்ய நினைப்பர்; அதுதான் மனித இயல்பும் கூட. ஆயினும் கொடுமைகள் பல நிகழ்கின்றனவே! காரணம் என்ன? நலம் பெற்று வாழ நினைக்கின்ற மனிதன், தன் எண்ணம் கை கூடாத வேளைகளில், தன்னை மறந்து மிருகமாகிறான். கனி இருப்பக் காய் கவர்கின்றான்; அதன் வழியே பல தீமைகள் நடைபெறுகின்றன. தனி மனிதன் தீவினை ஒருவருக்கோ ஒரு சிலருக்கோ தீமையாக முடியும். அரசாங்கங்கள் அல்லது நாடுகள் இழைக்கும் தீவினைகளோ பல நாடுகளுக்கும்—ஏன்—உலகம் முழுதுக்குமே எஞ்சாத தீமை விளைப்பனவாம். ஆகவே சமுதாயத்தில் தனி மனிதனாயினும் சமூகத் தலைவனாயினும் அரசியல் அரங்கில் உலகை ஆட்டிப் படைப்பவனாயினும் செயல் செய்யுமுன் சிந்திக்க வேண்டியவன் ஆகின்றான். தனக்கே அவலம் நேரினும்,அதற்கு மாறாகத் தான் செய்ய நினைக்கும் கொடுமையினால் நாடும் உலகும் நலிவுறும் நிலையினை எண்ண வேண்டியவனாகின்றான். நின்று, நெடிது நினைப்பின், தன்செயல்தரும் கொடுமை வழி தான் பெற்ற அவலம் நீங்காததோடு சமுதாயமே துன்புறும் நிலையினை அடையும் என்ற உண்மையினை உணர்வான். அப்போது அவன் அவல நிலையும் அகன்றொழியும்.

வள்ளுவர் இந்த உண்மையினை அழகாக விளக்கு கின்றார். ஒருவருக்கு நேரும் கொடுமைகளிலெல்லாம் மிகக் கொடுமை வாய்ந்தது தாய் பட்டினியாக இருப்பதைக் காண் பதாகும். எங்கோ ஒரு சிலர் இம்மரபுக்கு மாறுபடினும் இதுவே உலக நியதியாகும். அவ்வாறு தாயே பசித்திருக்கும் கொடுமை உற்றாலும், யாரும் தீவினையைச் செய்ய வேண் டாம் என வழி காட்டுகின்றார். அதைத் தீவினை என்று கூடச் சொல்லாது 'சான்றோர் பழிக்கும் வினை' என்கிறார். இதோ அவர் வாக்கு;

**'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும்; செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை'** (656)

அப்படி அல்லன செய்து ஆக்கம் பெறுவதினும் நல்லவன் என்ற பெயரோடு நல்லன செய்து நல்குரவில் வாழ்வது மேல் என்பது அவர் உள்ளக் கிடக்கை. இவ்வுண்மை வீட்டுக்கு மட்டு மன்றி நாட்டுக்கும் பொருந்தும். ஆம்! இதை உணர்ந்தால் இன்று உலகை அல்லலில் ஆழ்த்தும் கோடிக்கணக்கான அல்லலும் அவதியும் இல்லையாகி இன்பம் பொங்குமே!

உலகில் பிறந்தார் நல்ல பயன்பெற விரும்புகின்றனர். நல்ல வினைவழிச் சார விரும்புகின்றனர்; தமக்கு நடப்பன வெல்லாம் நல்வினையாக அமைய வேண்டிப் பாடு படுகின்றனர். இதுதான் இயற்கை. ஆனால் அந்தப் பயன், செயல், சேரும்வினை எப்படி நம்மை அடையும் என எண்ணிப் பார்ப்பதில்லை. வள்ளுவர் எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறார். அவரே எண்ணிப் பார்த்து அதை ஓர் உவமை வாயிலாக விளக்குகிறார்.

காட்டில் யானைபிடிப்பார் செயலை யாவரும் அறிவர். பழகிய யானையினை விட்டு மதம் பிடித்த காட்டு யானை யைப் பிடிப்பது தானே மரபு. ஆம்! அந்தச் செயலை வினைக்கு உவமையாக்குகிறார். 'நீ நல்வினையும் பயனும்

பெறவேண்டுமாயின்—நீயே அந்த நல்வினையினை மற்றவருக்குச் செய்து வழிகாட்டவேண்டும். உன் வினையின் தன்மை உணர்ந்த நாடும் உலகும் உன்னைப் போற்றும். ''வினை விளைத்தவன் வினையை அறுப்பான்'' என்ற பழமொழியும் உண்டே! நீ செய்யும் நல்வினையே உனக்கு இயைந்த நல்வினையையும் பயனையும் தேடித்தரும்'' என்கிறார்.

**'வினையால் வினையாக்கிக் கோடல் நினைகவுள்**
**யானையால் யானை யாத்தற்று'** (678)

என்பது அவர் வாக்கு. மனிதன் நல்வினை செய்யும்போது, நாம் முன்னே கண்டபடி, பல துன்பங்கள் சாரும். அவற்றால் உளையாது, 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' என வழி காட்டுகிறார் வள்ளுவர். எனவே வையம் வாழ—சமுதாயம் செழிக்க ஒவ்வொருவரும் தீவினைக்கு அஞ்சி ஒதுங்கி, நல்வினையினையே இடரினும் தளரினும் எத்துணைத் துன்பம் வரினும் அஞ்சாது செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் கட்டளை. அவர்தம் கட்டளைக்குச் சான்றாக அண்ணல் காந்தி அடிகள் போன்றார் அவ்வப்போது தோன்றி வாழ்ந்து வழிகாட்டிய காரணத்தால் தான் உலகம் இன்றளவும் மண்புக்கு மாயாது வாழ்கின்றது. நாமும் மன உணர்வோடு வாழ வேண்டிய காரணத்தால் நல்வினையாற்றி நாடும் நானிலமும் நலம்பெற ஆக்கவழி வகுப்போமாக!

**'வலியே காலம் வினைவயிற்றால்**
**மாற்றான் தனக்கும் உனக்குமுள**
**பலவா நிலையும் வினைதொடங்கும்**
**பண்பும் அதற்காம் இடையூறும்**

விலகாததனை விலக்குவதும்
வெல்லுமாறும் வென்றதனால்
உலவாப் பயனும் முதலனைத்தும்
ஓர்ந்து தெளிந்தே வினைசெய்க'

என்ற பெரியோரின் அறக்கட்டளையை உங்கள் முன்வைத்து அமைகின்றேன். வணக்கம்.

## ஈகை

வள்ளுவர் திருக்குறள் வையம் உள்ள வரையில் வாழத் தக்க ஒப்பற்ற பெருநூல்; காலந்தோறும் வாழும் மக்களுக்குப் பொருந்திய நல்லறங்களை வரையறுத்துக் காட்டுவது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதிய அவர்தம் வாய்மொழி இன்றும் நமக்கும் இனிவருவோருக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது. அத்தகைய பெருநூலிலிருந்து நான் இன்றும் தொடங்கி, ஏழு அதிகாரங்களில் அவர் நாம் வாழக் காட்டிய வழிநெறிகளைப் பற்றி ஓரளவு விளக்க முன் நிற்கின்றேன். இன்று ஈகை என்னும் அதிகாரத்தின் விளக்கம் அமையும்.

உலக வாழ்வே ஒருவரொடு ஒருவர் பற்றி நிற்பதாலும் பலவற்றைப் பரிமாறிக் கொள்வதாலும் நடைபெறுகின்ற ஒன்றல்லவா! அதில் உள்ளார், இல்லார் என்ற வேறுபாடு நிலைத்துள்ளமை நாமறிந்த ஒன்று. இந்த ஏற்றத்தாழ்வு மக்கள் மனத்தில் இல்லாது நீங்க வேண்டுமானால் வாழ்கின்ற வளமுள்ள மனிதன், அவ்வளவு இல்லாத மற்றவரை நோக்கி ஈதல் அறத்தினை மேற்கொள்ள வேண்டும். இல்லாதவன் அந்த இல்லாமையின் காரணத்தால் உள்ளவனை நாடி உற்ற வாழ்வுக்கு வேண்டியவற்றை இரந்து நிற்றல் இயல்பு. அந்த வேளையில் உள்ளவன் 'இல்லை' என்னாது, தன்னால் கூடிய

வரையில் அந்த இல்லாதவனுக்கு உதவக் கடமைப்பட்டவனா கின்றான். இந்தக் கடமை உணர்வை வற்புறுத்தவே வள்ளுவர் பத்துக் குறட்பாக்கள் இங்கே அமைத்துள்ளார். உள்ளவன் வாரிக் கொடுத்துக் கொண்டே இருந்தால் அவன் பொருள் வற்றி அவனும் இல்லாதவனாகி விடுவானோ என்று ஐயப்படவேண்டியதில்லை எனவும் வள்ளுவர் காட்டு கின்றார். 'பாத்தூண்மரீஇ யவனைப் பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது' (7) என்ற குறள்வழி கொடுத்துக் கொடுத்து குறைவார் இலர் என்று காட்டி, இல்லாமையால் நேரும் பசிப்பிணி அவரை அணுகாது எனச் சுட்டுகிறார்.

உலகில் எத்தனையோ வகையான இன்பங்கள் உள்ளன. வள்ளுவர் அவற்றுள் பலவற்றைச் சுட்டுகிறார். அவற்றுடன் ஈத்துவக்கும் இன்பத்தையும் இணைத்துப் பார்க்கின்றார். 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது உண்மை யானும், அப்பொருள் தனக்கு மட்டும் உரியதன்று என்பதைப் பலவகையில் சுட்டிக்காட்டும் வள்ளுவர்—அதனால் பெறும் இன்பம் பலவகை என்பதை உணர்த்தும் வள்ளுவர்— கொடுத்து மகிழும் இன்பமும் அதனால் பெறுவதாகும் எனச் சுட்டுகிறார். 'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம் உடைமை வைத்திழக்கும் வன்கண்ணவர்' என்பது அவர் வாக்கு, ஆம். செய்யவேண்டிய கடமையைச் செய்யாதவர் களை நினைக்கும் போதெல்லாம் வள்ளுவர் கொஞ்சம் கடுமையாகவே பேசுவார். செல்வர், உள்ளதை மற்றவர் களுக்கு — வறியார்க்குக் கொடுக்கக் கடமைப்பட்டவர். அப்படிக் கொடாதவர் கொடியவர்தாமே! எனவே அவர் களை 'வன்கணவர்' என்கின்றார். பாவம், அவர்கள் கொடுத்து அதனால் பெறும் இன்பத்தை அறியாதவரன்றோ; இக்குறளில் மற்றொன்றையும் வள்ளுவர் குறிப்பிடத்தவற வில்லை. அவ்வாறு கொடுக்காது வைத்திருக்கும் பொருள்

அவ்வன்கண்ணவரிடமும் தங்காது இல்லையாகும் என்பதை, 'வைத்துப் பின் இழக்கும்' எனச் சுட்டுகிறார். இவ்வாறு இழந்து அதனால் வாடுவதைக் காட்டிலும், கொடுத்து அதைப் பெற்ற வறியர் கொள்ளும் பெருமகிழ்ச்சியினைக் கண்டு, தாம் இன்புறுதல் எத்துணை சிறந்த ஒன்றாகின்றது. இதை எண்ணி, கண்டு, செயலாற்றுபவர் எத்துணையர்? இந்த நிலையை எண்ணிச் செயலாற்றின் நாட்டில் நலிவு குறையுமே—நலம் பெருகுமே.

வள்ளுவர் இந்த ஈகையினைப் பற்றி மற்றொன்றும் சொல்ல நினைக்கிறார். இந்தக் காலத்தில் சிறிதளவு கொடுத்துப் பெரிதளவு புகழ் பெற நினைக்கின்ற மக்கள் வாழ்வதைக் காண்கின்றோம். ஒரு சிறு உதவி செய்தாலும் அதைக் கல்லிலேயோ வேறு சொல்லிலேயோ அன்றி நூலிலேயோ எழுதித் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள் கின்றவர் நாட்டில் பலர். அன்றும் அத்தகையோர் பலர் வாழ்ந்திருக்கக்கூடும். எனவேதான் வள்ளுவர் கொடுத்த லாகிய ஈகை எவ்வாறு அமையவேண்டும் எனத் திட்டவட்ட மாகச் சுட்டிக்காட்டிவிடுகின்றார். அவர்தம் 'இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல், குலன் உடையான் கண்ணே உள' என்ற குறள் கொடுப்பது எவ்வாறு அமையவேண்டும்என்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. இதற்குப் பலவகையில் பொருள் காண்பர். 'உதவி நாடிவருபவர் இல்லை என்று கேட்பதற்குமுன் குறிப்பறிந்து கொடுப்பது' எனவும், 'அவர் மற்றொருவரிடம் சென்று மறுபடியும் கேளாத அளவுக்கு மிகுதியாகக் கொடுப்பது' எனவும், 'தான் உடையவனா யிருந்தும், 'இல்லை' என்று பதில் சொல்லாது கொடுப்பது' எனவும், இன்னும் பலவகையிலும் பொருள் கொள்ளுவர். பரிமேலழகர் இவற்றிலும் சிறந்ததாகிய ஒருபொருளை நமக்கு விளங்க வைக்கிறார். 'பொருள் கேட்கவருவர் இல்லை என்று சொன்னார்; அவருக்கு நான் நிரம்பக் கொடுத்தேன்' என்று

தன் கொடையைப் பறைசாற்றிக் கொள்ளாது கொடுப்பது என்பதே அவர்கண்ட பொருள். அவ்வாறு கொடுப்பவனையே 'குலனுடையாளன்' என வள்ளுவர் குறிக்கின்றார். ஆம் இன்று வீண் பெருமையில் வாழும் பலருக்கு இந்த உரை தேவையானதாகும். 'உன் வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாதிருக்கட்டும்' என்ற விவிலிய நூலின் வாய் மொழியும் ஈண்டு எண்ணத்தக்கது. வள்ளுவர் கருத்து ஈதல் கடமை வழியாக அமைவதேயன்றி வெறும் புகழுக்காகவும் பிறவற்றிற்காகவும் அமைவதன்று என்பதே. எனினும் இந்தப் புகழ்ப்பயித்தியம் பிடித்தலையும் மனிதனைக் கட்டுப் படுத்த முடியாநிலையில், 'சரி கொடு, அப்படியாயினும் புகழுக்காகக் கொடு' என்று வள்ளுவர் அடுத்து புகழ் என்னும் அதிகாரத்தின் முதலிரு குறட்பாக்களாலே சுட்டுகிறார். 'மிக உயர்ந்த பண்பாளன் தான் செய்வது பிறர் அறியா வகையில் ஈவான். மற்றவர் எப்படியாயினும் கொடுக்கக் கடவர்' என அறுதியிட்டு, அந்த ஈகையின் இன்றியமையா நிலையினையும் அதனால் உலகில் ஒரு சிலரிடம் பதுங்கி நிற்கும் பெருஞ்செல்வம் பரந்து பலருக்கும் பயன்படுநிலை யினையும் அதனால் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒருவாறு சரிசெய்யப்பெறும் தன்மையினையும் வள்ளுவர் விளக்கிக் காட்டுகின்றார். இத்தனையும் படித்தும் அறிந்தும் விளங்கிக் கொண்டும் பலர் இன்றும் வேறுவழியில் செல்லுவதை எண்ணி வள்ளுவர் வருந்தி வேறு சில உண்மைகளையும் உணர்த்துகிறார்.

இரத்தல் கொடியதுதான். அதை யாரும் மறுப்பார் இல்லை. அந்த இரக்கும் தன்மையாளன் தன் இழிநிலை யெல்லாம் சொல்லிக் காட்டி, விளக்கி ஏதேனும் பெற ஏங்கி நிற்பதைக் காண்கின்றோம். ஆனால் வள்ளுவர் அதனினும் கொடியது ஒன்றையும் இனியது ஒன்றையும் காட்டி, கட்டிக் காக்கும் பொருளை மற்றவர்களுக்கு வழங்குமாறு வேண்டு

கிறார். 'இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய தாமே தமியர் உணல்' என்ற குறள்வழியே உணர்த்தி, உள்ளான் மிக்க கொடுமைக்கு உள்ளாவன் என்று காட்டவும் அக் கொடுமையின் மிகுதிகுறிக்கவும் ஒருதலையாக உணர்த்தவும் 'மன்ற' சொல்லையும் எடுத்தாளுகிறார். உள்ளவன் மேலும் மேலும் சேர்க்க, எண்ணி எண்ணிக் கணக்கிட்டு, தான் எண்ணிய எண்ணிக்கை நிறைவுறும் வரையில் ஏங்கி, பிறரை வருத்திப் பொருள் பெருக்குவதை இன்றும் காண்கிறோமே! 'பெரிய கள்ளச் சந்தைகளும் கறுப்புப்பணமும் பெருஞ் செல்வர்தம் உடைமையாகவன்றோ உள்ளன! அவர்களுக்கு நல்ல உணவுண்டா? உறக்கம் உண்டா? உண்ட உணவு சீரணிக்காமல் உண்ணும் மருந்துதான் எத்தனை! உளத்தடு மாற்றத்தால் வாடும் நிலைதான் பலவகையன்றோ.

இவ்வாறு உளத்துன்பமும் உடற்றுன்பமும் பெறும் பொருளாளனைக் காட்டிலும் உணவில்லாத தேவைகிட்டாத அந்த ஒரு வேளையில் வாடும் ஏழை எத்துணையோ மேலா னவன்றோ!

இத்துடன் நிற்காது வள்ளுவர் மற்றொன்றினையும் செல்வனுக்கு உணர்த்துகிறார். சாவு பற்றி அனைவரும் அஞ்சி நிற்பர்; செல்வன் மிக அஞ்சுவான். அவனை விளித்து வள்ளுவர், 'தம்பி! சாவும் இனிமையாகும். எப்போது தெரி யுமா? அதனினும் மிகக் கொடுமையாகிய, நீ வைத்துக் கொண்டிருப்பதை—உன்னிடம் மிகுதியாக உள்ளதை மற்ற வருக்கும் கொடுக்காது மறைக்கும்போது' என விளக்குகிறார், 'சாதலின் இன்னாதது இல்லை, இனிது அதூஉம் ஈதல் இயையாக் கடை' என்பது அவர் வாக்கு. ஆம்! சாதல் கொடுமையானதுதான். அதற்கு அஞ்சும் வன்கணாளன் அதனினும் கொடுமையான மற்றொன்றில் புகுந்து தன்னை யும் கெடுத்து, சமுதாயத்தையும் அழித்து, கடைசியில் அந்த மரணவாயிலிலும் வேதனையோடு புக வேண்டிய மிகக்

கொடிய நிலையைச் சுட்டி, எனவே இல்லையென்றுரைப் போர்க்கு இல்லை என்றுரையா இதயத்தோடு வாரி வழங்கிப் பொருளாதாரச் சமத்துவத்தை நாட்டில் நிலைநாட்டச் சொல்லுகிறார் வள்ளுவர். இந்த உண்மை மக்களால் உணரப் பெறின் பதுக்கலும் கொள்ளையும் கறுப்புச் சந்தையும் கள்ளச் சந்தையும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் நாட்டில் நீங்கி, எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற, தனி மனித வாழ்வும் சமுதாய வாழ்வும் மலர்ந்து, நாடும் உலகமும் நலமுற்று ஓங்குமன்றோ!

# புகழ்

சமுதாயம் சிறந்து வாழ 'ஈகையினை' அறத்தாறு வற்புறுத்திய வள்ளுவர், அறவழி நிற்க மறுப்பவரை நோக்கி, 'தம்பி உன் புகழுக்காக வாயினும் கொடு' என்று குறிப்பது போன்று இங்கே புகழ் என்னும் அதிகாரத்தின் முதல் இரண்டு குறட்பாக்களையும் அமைத்துள்ளார். 'ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு' என்ற முதற்பாவிலேயே கொடுத்தலையும் அதன் வழியே புகழ் பெறுதலையும் சுட்டி, அந்தப் புகழாகிய ஊதியம் பெறுதலே உயிர்க்கு உயர்ந்தது என விளக்குகிறார் வள்ளுவர். எப்படியாவது உள்ளவன் மற்றவருக்கு வழங்கினால் போதும் என்ற மனமுடையவ ரன்றோ வள்ளுவர்.

உலகில் ஊதியம் பெற விரும்புவோரே அனைவரும். செய்த பணிக்கு ஊதியம் பெறுநிலை ஒரு புறம் இருக்க, செய்யாத பணிக்கும் பெரு ஊதியம் வேண்டி நிற்கும் மக்களிடை வாழும் நமக்கு இந்த வள்ளுவர் காட்டும் ஊதியம் புதிய ஒன்றுதான். தான் சேர்த்து வைப்பதை ஊதியம்

பெறுதல் என எண்ணும் நிலையில், உள்ளதை மற்றவர்களுக்கும் கொடுத்து அதனால் பெறும் புகழே ஊதியம் என அவர் காட்டுகிறார். உண்மையும் அதுதானே. நாம் பெறுகின்ற பொருளாகிய ஊதியம் நம்மைவிட்டுச் 'செல்வோம்' 'செல்வோம்' என்று சென்று கொண்டே இருக்க, இப்புகழாகிய ஊதியம் நாம் மறைந்த பின்பும் என்றும் நிலைத்து நம்மை வாழ வைக்கின்றதல்லவா! உள்ளதை இல்லவருக்குக் கொடுப்பவர் என்றும் வற்றாத புகழ் பெறுவது ஊதியமன்றோ. ஆம்! பிற அனைத்தும் உலகில் நில்லாது மறைய இந்தப் புகழ் ஒன்றே மனிதனை என்றும் வாழ வைப்பதாகும். இதைத்தான் வள்ளுவர் 'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்று இல்' என மற்றொரு குறள் வழியே காட்டுகிறார். நில்லா வாழ்வுடைய உலகத்தை 'ஒன்றா உலக'மே எனக்காட்டி, இந்த நிலையில்லாத உலகத்தில் என்றும் நிலைப்பது புகழ் ஒன்றே என்பதை இக்குறள் வழி வள்ளுவர் விளக்கி, என்றும் எப்படியும் வாழ நினைக்கும் மனிதன், இத்தகைய புகழ் பெறவாவது 'நல்லன செய்து அல்லன கடிந்து' அறமாற்றி ஓங்கமாட்டானா என ஏங்குகின்றார். எனவே, நிலைபெற்ற புகழைப் பெற, நிலையற்ற மனிதன் தன் நிலையற்ற பொருள் முதலியவற்றால் சிறக்க அறமாற்ற வேண்டும் என அறிதல் வேண்டும்.

அதிகார வைப்பு முறையும், இயல்வகையும் வள்ளுவரே செய்தாரா அன்றி வேறு யாரேனும் பின் செய்தனரா என்ற விவாதம் இன்னும் முடியவில்லை. எப்படியாயினும், இப் 'புகழ்' என்னும் அதிகாரம் இல்லற இயலின் கடைசியாக அமைய, அடுத்துத் துறவறவியல் தொடங்குகிறது. எனவே, புகழ், இல்லறத்தான் இதற்கு முன் அவன் வாழ்வாங்கு வாழ வகுத்த நெறியில் நிற்பானாயின் அவனைத் தானே வந்து அடையும் என்பதும் பெறப்படும். அன்றி, அந்த இல்வாழ்வான்தன் சுற்றம், நிலை, சுற்றுச் சார்பு முதலியன கருதி

ஈதல் முதலியன மேற்கொண்டு புகழ் ஈட்டினும் தவறில்லை எனவும் அறிய முடிகின்றது. ஆனால், துறவறத்தாரோ தம்மை மறந்த தெய்வ நெறியில், வெறும் புகழ்ச்சிக்காகவோ வேறு உயர்வுக்காகவோ ஆசைப்பட்டு எதையும் செய்ய லாகாது என்பதையும் ஈண்டு பெற வைத்துள்ளார் வள்ளுவர். மணிவாசகரும் 'உற்றாரையான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், எனக் கூறியிருப்பது ஈண்டு நோக்கற்பாலது. எனவே, இல்லறத்தான் புகழ் ஈட்டுவதில் தவறில்லையாம்.

இப்புகழினை வள்ளுவர் பல தொடர்களால் விளக்கிக் காட்டுகின்றார். 'உயர்ந்த புகழ்'(3), 'நீள் புகழ்' (4) இசை என்னும் எச்சம் (8) என்று புகழ் விளக்கப் பெறுகின்றது. 'தனக்கு இணையின்றாக ஓங்கிய புகழ்' என முன்னதற்கு உரை கூறுகின்றார் பரிமேலழகர். 'மற்றுள்ள பொருள்கள் போலன்றி அழியாது நிற்கும் புகழ்' என்பவர் மணக்குடவர். பிறரும் இவ்வாறு உரை காண்பர். அப்படி நீள் புகழுக்கும் பொருள்விளக்கம் பெறுகின்றோம். 'இசை என்னும் எச்சம்' என்று புகழைப் போற்றுவது பற்றியும் உரையாசிரியர்கள் நன்கு விளக்குகின்றனர். 'செய்தவர் இறந்து போகத் தான் இறவாது நிற்கும்' என அதன் பெருமையைப் பரிமேலழகர் குறிப்பர். ஆம். ஒருவன் தேடிய பிற செல்வங்களெல்லாம் இல்லையாகவும்—ஏன்?—செய்த அவனே இல்லையாகவும் அவனுக்கு அவன் நற்செயல்களால் வந்த புகழ் மட்டும் என்றென்றும் நிலைத்து நிற்கும் நிலை நாம் காணும் ஒன்றல்லவா! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்த வள்ளுவரும் பிற பெரியவர்களும், நம்முடன் வாழ்ந்து செயற்கரும் செயல் செய்து மறைந்த அண்ணல் காந்தியடிகளும் இத்தகைய உயர்ந்த, நீள்புகழ் பெற்றவர்களன்றோ! ஆம். நம்மை அத்தகைய புகழ்தரும் நற்செயல்களைச் செய்யுமாறு ஆற்றுப்படுத்துகின்றார் வள்ளுவர்.

உலகில் பிறக்கின்றோம் நாம். வளர்கின்றோம்; வாழ்கின்றோம்; வாழ்நாள் கழிகின்றது. கடைசியில் இறக்கின்றோம். இது மனிதனுக்கு மட்டுமன்றி, எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான நியதி. ஓரறிவுடைய மரம் தொடங்கி எல்லா உயிர்களும் பிறந்து, இருந்து, வாழ்ந்து மறைகின்றன. ஆனால், ஆறு அறிவுடைய மனிதன் பிறவற்றினும் மேம்பட்ட காரணத்தினால், தான் என்றும் நிலைக்க வழி காணவேண்டாமா? எனக் கேட்கிறார் வள்ளுவர். 'அப்பா' மனிதா; நீ, உலகில் பிறந்தாயே, எப்படியும் மறையப் போகிறாயே; நீ மறைந்தபின் உன் பிறந்து வாழ்ந்த நிலை—நினைவு, உலகில் என்றும் இருக்க நீ என்ன செய்தாய்? ஒன்றும் செய்யவில்லையா? வெட்கம். நீ ஏன் பிறந்தாய்? பிறவாதிருந்தாலும் நலமாக இருந்திருக்குமே?' எனக்கேட்டு, அத்தகைய புகழில்லாதவர் பிறத்தலினும் பிறவாமை நன்று என விளக்குகிறார் வள்ளுவர். 'தோன்றிற் புகழொடு' தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று; என்பது அவர் வாக்கு. இவ்வாறு மக்களாகப் பிறந்து அறமாற்றாது பயனின்றிக் கழிவதோடு, மாறாகப் பல கொடுமைகளைச் செய்து இகழ்ச்சி உறுவார்களே என்ற இரக்க உணர்வினாலேயே வள்ளுவர் 'பிறவாமை நன்று' என்று கூறுகின்றார். ஆம். பலர் சமுதாய நெறிக்கு மாறுபட்ட, சமுதாயத்தின் நிலைகெடுத்தக்க பல கொடுமைகளைச் செய்து இகழ்ச்சியுற்றுத் தாமும் கெட்டுச் சமுதாயத்தையும் சீர்குலைக்கும் கொடுமையை எண்ணிய அவர் நல்ல உள்ளம் வருந்தி 'பிறவாமை நன்று' எனக் கூற வைத்தது. உண்மைதான். இத்தகைய வன்கணாளர் பலர் தோன்றாதிருந்திருப்பின்—நல்லவை செய்து நீள் புகழ் பெறுவார் பலர் பிறந்திருப்பின் இன்று உலகில் எத்துணையோ கொடுமைகள் இல்லாதிருக்குமல்லவா.

இக்கருத்தினை வள்ளுவர் மற்றொரு குறள் வழித் தெளிவாகவே விளக்கிக்காட்டுகின்றார், இததகைய நல்லன

செய்து நீள்புகழ் பெறாத மக்களைப் பெற்று அவர்களைத் தாங்கும் நிலத்தை எண்ணுகிறார் வள்ளுவர். 'நிலம் என்னும் நல்லாள்' என்று நிலத்துக்கு நல்ல பெயர் சூட்டிய வள்ளுவர். அந்த நலத்துக்குரிய, இசை ஒழிய அந்த நிலம் வாழவேண்டிவருமே என அவர் நல்லுள்ளம் வருந்துகின்றது. அந்த நல்ல நிலம், வசைவுற்று, வளமற்றுப் போகும் என்பதை விளக்கத் தவறவில்லை அவர். 'வசைஇலா வண்பயன் குன்றும், இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' என்பது அவர் வாக்கு. புகழால் அமைந்த நல்லுயிர் இன்றி வெற்றுடம்பினராகிய 'யாக்கை'யை இந்த உலகம் தாங்க வேண்டுமா எனக் கேட்கிறார். தாங்க வேண்டாம் என்பது அவர் கருத்து. அவ்வாறு நல்லன செய்யாது, அல்லல் விளைவிப்பவர் வாழ்வதால் நாடு 'நாடு என்ப நாடா வளத்தன' என்ற நிலையிலிருந்து மாறி, தன் வண்பயனாகிய வளமெல்லாம் அழிய, மக்கள் பசியும் பிணியும் பகையும் பற்றி வாடுவார்கள் என்பதை இக்குறள் வழி வள்ளுவர் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றார். இன்று நாம் கண்முன் காணு கின்ற காட்சி தானே இது. ஆம். நாட்டில் எல்லா வளங்களும் நிறைந்திருந்தும், இல்லாத—பற்றாத கொடுமை இந்த உயிரோடு யாக்கை பெற்றும் உயிர் உணர்வற்ற மாக்க ளால் தானே நிகழ்கின்றது. உலகம் வாழ வேண்டுமாயின் இத்தகைய கொடுமையாளர்கள் இல்லாது ஒழியவேண்டும் என்பதையே 'உலகம் அவர்களைத் தாங்கக் கூடாது' எனச் சுட்டுகிறார். ஆம். இப்புகழ் என்னும் அதிகாரத்தால் வள்ளுவர் தனிமனிதன் புகழ் எப்படித் தரணியையே உயர்த்தும் என்பதையும் அத்தகைய அறமாற்றிப் புகழ் பெறாத வசையாளர் வழியே வையமும் சமுதாயமும் எப்படி மாறும் என்பதையும் காட்டுகின்றார்,

என்றென்றும் புகழொடு வாழ விரும்பும் மக்களினம் இந்த வள்ளுவர் காட்டிய கடமை உணர்வைக் கருத்திருத்தி

நல்லன ஆற்றி, நாட்டு வளமும் உலக உயர்வும் சிறக்கச் செயல் பட வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன்.

## அருளுடைமை

உலகில் பிறந்து மனைவி மக்களொடு வாழ்ந்து சுற்றம் தழுவி அவர்கள் மாட்டெல்லாம் அன்பைப் பொழிந்து வாழும் மனிதன், பிற எல்லா உயிர்களையும் ஒத்து நோக்கி, அவர் களிடத்தும், அவற்றினிடத்தும் கருணை உள்ளம் படைத் தவனாய் வாழும் நிலையில் நிற்பதையே 'அருளுடைமை' என்கிறோம். திருக்குறளில் இல்லறம், துறவறம் என்ற இரு நிலையாக வாழ்க்கையினைப் பாகுபடுத்தி, முதலில் இல்லற நெறிக்கு வேண்டிய அறங்களையெல்லாம் வரிசைப்படுத்திக் காட்டிய வள்ளுவர், துறவறநெறிக்கு முதலாவதாய் 'அருளுடைமை'யினை இங்கே காட்டுகின்றார் என்று இது துறவறத்தின் முதல் அதிகாரமாக வைக்கப்பெற்றமைக்குரிய காரணத்தை, உரையாசிரியர்களும், பிறரும் காட்டுவர். எனினும் இவ்வருளுடைமையும் துறவறத்தின்பால் சார்த்தப் பெறினும் மக்களாகப்பிறந்த அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றே எனக்கொள்ளல் வேண்டும். அன்புடைமையின் எல்லை விரிவே அருளுடைமை. தான் கொண்ட மனைவி, பெற்ற மக்கள், உற்ற சுற்றத்தார், தொடர்புள்ள பிற சார்பாளர்கள் இவர்களிடம் செல்லும் உணர்வினை—பற்றினை—பாசத்தை 'அன்பு' எனக் கொண்டு, அந்த எல்லைக்கு அப்பாற்பட்ட எல்லையற்று விரிந்து யாண்டும் யாவர் மாட்டும்—தொடர் பல்லாத எல்லா உயிர்களிடத்தும் காட்டும் கருணையினை 'அருள்' என்றும் ஏற்பது முறையாகும். இதைத்தான் வள்ளுவரும் 'அருளென்னும் அன்பீன் குழவி' என்று பின் பொருட்பாலில் விளக்கிக்காட்டுவர். எனவே இந்த 'அருள் நிலை' உலக உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை ஆகும்.

வள்ளுவர் பல்வேறு வகைப்பட்ட செல்வங்கள் உலக வாழ்வின் இன்றியமையா நிலையில் உள்ளதைப் பல இடங்களில் விளக்கிக் காட்டுகிறார். கல்விச் செல்வம், பொருட் செல்வம், செவிச்செல்வம் போன்ற பிற செல்வங்களையெல்லாம் விளக்கிய நிலையில் நின்ற வள்ளுவர் இவற்றுக்கெல்லாம் மேலானது அருள்செல்வம் என்று காட்டுகிறார். பின்னர், 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்' என்று குறளில் கேள்விச் செல்வத்தைப் பெரிதாக காட்டும் நிலையில் அது உயர்ந்ததாகத் தெரியினும், அக்கேள்விச் செல்வமும் இந்த அருட்செல்வம் பெறுதற்கு வழியாக அமையும் ஒன்றாகலின், அதனினும் இது மேம்பட்டது என்பதும் இதன் வழியே உலக உயிர்கள் அனைத்தும் இன்ப நெறியில் வாழ வழிவகுக்கப்பெறுகிறது என்பதும் உணர்தல் வேண்டும். 'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள' என்ற இந்த அதிகாரத்தின் முதற் குறளின் பின்பகுதிக்குப் 'பொருளான் வரும் செல்வங்கள்' என மேலாகப் பொருள் கொள்ளாது பின் பொருட்பாலில் வரும் செல்வங்கள் அல்லது 'பொருள் பற்றி வரும் செல்வங்கள்' எனப் பொருள் கொள்ளின் இந்த அருள் செல்வத்தின் ஏற்றம் நன்கு விளங்கும். பின் ஒரு குறளில் பொருட் செல்வத்தை அருட் செல்வத்தோடு தனியாக ஒப்பிடுகின்றமையின் (8) இங்கே இந்த உரையே ஏற்புடைத்ததாகவும் அமையும்.

உலகில் பிறந்த மனிதன் எத்தனையோ வகையில் ஓடி, யார் யார் துணையையோ பற்ற நினைக்கிறான். அப்படியே எதை எதையோ பிடித்து, எப்படி எப்படியோ கட்டி ஆள நினைக்கின்றான். வள்ளுவர் இந்த 'ஆளுமை'யையும் துணையையும் ஒரே குறளில் பிணைத்து உயர்ந்த உண்மையினை உலகுக்கு உணர்த்துகிறார். உலகம் நல்ல வழியில் வாழ எத்தனையோ நெறிகள் வகுக்கப்பெற்றுள்ளன. அவற்றின் வழியே வாழ்ந்தால் நிச்சயம் அவன் அருளானவன் ஆவான்.

அந்த அருள் அவனை அடையும். ஆம்! அவன் அந்த அருளை ஆள்வான் என்று சொல்கிறார் வள்ளுவர்! ‘நல்லாற்றான் நாடி அருள் ஆள்க, பல்லாற்றான் தேரினும் அஃதே துணை’ என்பது குறள். ஆம்! மனிதன் அருளை ஆளக் கடமைப் பட்டவன்; அருள் அவனை ஆளக் கூடாது. உணர்வின் வழி மனிதன் செல்வானாயின் ஒரு வேளை அவன் தன்னை மறந்து. மயங்கி, வழுக்கி விழவும் கூடும். ஆனால், அவன் அவ்வுணர்வை ஆள்வானாயின் அவன் பெருமிதத்தோடு கட்டுப்பாட்டுக்குள் நின்று வாழ முடியும். எனவேதான், ‘அருள் ஆள்க’ என்கின்றார். அந்த அருளை ஆளும் நிலை பெற்றபின் அந்த அருளே அவனுக்குத் துணையாக நின்று அவனுக்கும் அவனைச் சார்ந்தோருக்கும் அல்லாத மற்ற வருக்கும் நலம் பயக்கும் என்பது துணிவு. எனவே, பிறரை ஆள நினைக்கின்றவர்கள், உலகை ஆள நினைக்கின்றவர்கள், அருளை ஆள முதலில் பயில்வதோடு, பிறவற்றை ஆள வேறு படை முதலிய துணையை நாடாது, அந்த அருளையே துணையாக நாடவேண்டும் என்ற உண்மையினை வற்புறுத்தி அந்த அருளே வளி வழங்கும் மல்லன்மா ஞாலத்தை இருள் நீக்கி, வாழவைக்கும் என விளக்குகின்றார். அந்த அருள் பெறின் —அருளை ஆளப்பெறின் அவருக்கு அல்லல் இல்லை எனக்குறித்து, அக்குறிப்பின் வழியே அவனிக்கும் அல்லல் இல்லை என்றும் அதனால் உலகம் உயரும் என்றும் தெளிவாக்குகின்றார். அருளாளனுடைய செயல் எப்படி அமையவேண்டும் என்பதையும் வள்ளுவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இங்கே அருள் ஆள்வதாக அவர் குறிக் கின்றார். ‘‘மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கில் என்ப தன்உயிர் அஞ்சும் வினை’’. ஆம்! அந்த அருளாள னுக்கு புறத் தோற்றங்கள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. இன்னார், இனியார் என்ற வேறுபாடு இல்லை! உற்றார், மற்றவர் என்ற வேறுபாடு இல்லை. எந்நாட்டான், பிற

நாட்டான் என்ற மாறுபாடு இல்லை. கறுப்பன் சிவப்பன் எனக் காழ்ப்பு நிலை இல்லை; அவற்றுக்கு மேலே உயர் திணை அஃறிணை என்ற வேறுபாடும் இல்லை. இந்த நிலையியே அருளாளன் நிலை. இதையே சமயத் தலைவர்கள் 'எவ்வுயிரும் பராபரம் சந்நிதியதாகும்' எனப் பாடிச் சென்றனர். வள்ளுவர் 'மன்னுயிர் ஓம்பி' என்கின்றார். ஆம்! அவர் புறத் தோற்றமாகிய உடலைச் சொல்லவில்லை. அகத்தில் காணா நிலையில் உள்ள உயிரைச் சொல்லுகின்றார். அவ்வுயிர் என்றும் நிலை பெற்றுள்ளமையின் 'மன்னுயிர்' என்றார். மேலும் உலக நலக் கேடுகள் அனைத்தையும், உயிரையும் அதனொடு சார்ந்த உளத்தையும் பாதிக்கின்ற மையின் உயிரை இங்கே சுட்டினார். அந்த உயிரை 'ஓம்பு' மாறு ஆணை இடுகின்றார் வள்ளுவர். 'ஓம்பு'தல் உயர்ந்த சொல். 'விருந்தோம்பி' 'பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்' என்ற இந்த அறத்துப்பாலினும் பிறவிடங்களிலும் வள்ளுவர் உயர்ந்து பரந்து போற்ற வேண்டிய பண்பினையே போற்றிப் பாதுகாக்கும் பொருளில், 'ஓம்பி' என்ற சொல்லில் சுட்டுவ தறிகிறோம். எனவே, 'மன்னுயிர் ஓம்பி' என்ற தொடரால் உயிர்களை ஓம்பிப் பாதுகாக்கும் அருளாட்சியைப் பாராட்டு கிறார். அவ்வாறு மன்னுயிர் ஓம்பின் தன் உயிர்க்கும் ஏதம் இல்லை என்பதையும் உடன் காட்டுகிறார் அவர். முல்லைக்குத் தேர் ஈந்த பாரியும் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய' வள்ளலாரும் இந்த அருளாட்சியாளர் வரிசையில் சேர்ந்தவர்களன்றோ. ஆம்! அத்தகைய நல்லரு ளாளர்கள் இடையிடையே வாழ்ந்து அருள் பாலித்த காரணத் தாலேயே உலகம் கெடாது வாழ்கின்றது இதை எண்ணியே வள்ளுவர் பின் ஒரு குறளில் 'மல்லல்மா ஞாலம் கரி' என்று கூறுகிறார். எனவே துறவறவியலின் இந்த முதல் அதிகார மாகிய 'அருளுடைமை' என்பதன் வழியே உலகில் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டிய நல்ல ஆக்கநெறிக்கு வழிகோலுகிறார் வள்ளுவர்.

இந்த அருள் உடமை—உயிர்கள் மாட்டு இரக்கம் எல்லாருக்கும் வரவேண்டிய ஒன்றாயினும், இது எல்லாருக்கும் இயைவதில்லை என்ற எண்ணம் வள்ளுவருக்கு உண்டாகின்றது. அதற்குக் காரணம் என்ன என்று காண நினைக்கிறது; அவர் உள்ளம் காண்கின்றது. அதை மாற்றும் வழியும் கண்டு கொள்ளுகிறது. வாய் பாடுகிறது. 'வலியார் முன் தன்னை நினைக்கத் தான் தன்னின் மெலியார் மேல் செல்லுமிடத்து' எனப் பாடுகிறது அவர் வாய்.

உலகில் வலியாரும், மெலியாரும் என்றுமே உள்ளனர். தன்னின் மெலியாரைச் சாடி, உழக்கி, வருத்தித் தன் வாழ்வைப் பெருக்கிக் கொள்ள நினைப்பது மனித நிலை. தனி மனிதனாயினும் சமூகமாயினும் நாடுகளாயினும் இந்த நியதிக்கு விலக்கு இல்லை. எனவேதான் இந்தக் கொடுமைக்கு மருந்தாக — மாற்றாக — அருளுடைமையின் கடைசிக் குறளாக இதை அமைத்து நம்மைத் தெருட்டுகிறார் வள்ளுவர். 'தம்பி! நீ உன்னினும் வலிகுன்றியவனைப் புடைத்து உன் வாழ்வை வளமாக்க நினைக்கிறாயே, சற்றே நில்! திரும்பிப்பார்! அதோ அந்தப் பக்கம் உன்னினும் வலியவன் ஒருவன் உன்னைத் தாக்கி, புடைத்து, அழித்துத் தன் வாழ்வை வளமாக்கிக் கொள்ளத் திட்டமிடுகிறானே! அது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா? 'மடவனை அடித்த கோலும் வலியனை அடிக்கும் கண்டாய்' என்ற பழமொழி நீ படிக்கவில்லையா?' என்று கேட்டு அவனுக்கு வரும் பேராபத்தினை நினைவூட்டுகிறார். இதை எண்ணினால் யார்தான் மற்றவருக்குக் கொடுமை இழைப்பர்? உண்மையில் திருந்தத்தான் வேண்டும். ஆனாலும், இதை உணராது உலகம் அருளற்ற அவல வாழ்வில் செல்கிறது. வள்ளுவர் இக்குறளின் வழியே 'வலியார், மெலியார்' என்ற வேறுபாடு இல்லாத சமுதாய வாழ்வு என்று நாட்டிலும் உலகிலும் மலருகிறதோ அன்றே நாமும், உலகமும் நாடும் நலமுடை

வோம் என்பதையும் சுட்டாமல் சுட்டுகிறார். எனவே, நாமெல்லாம் வல்லாராயினும் அல்லாராயினும் இந்த உண்மையினை உணர்ந்து 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியா' அருள்நெறி பற்றி அருளாளராக—அருளாட்சி உடையவராக வாழ முயல்வோமாக!

# புலான் மறுத்தல்

மேலே அருளுடைமையைப் பற்றி விளக்கிய வள்ளுவர் அதை அடுத்து, அந்த அருள் உள்ளம் வாய்ந்தவர்கள் புலாலை மறுப்பார்கள் என்ற உறுதியின் அடிப்படையிலே இந்த அதிகாரத்தை அமைத்துள்ளார். ஆயினும் இதற்கு, பிற கொல்லாமை, பொய்யாமை போன்ற தலைப்பு இல்லாமல் 'புலான் மறுத்தல்' என அமைவதைக் காண்கின்றோம். உலகில் பல பாகங்களில் வாழும் மக்கள் எத்தனை எத்தனையோ வகையான உணவுகளை உட்கொள்ளு கின்றனர். நிலத்தின் நடுக்கோட்டு எல்லையிலும் அதனை அடுத்த இடங்களிலும் மரக்கறி உணவு மிகுதியாகக் கிடைக்கும். ஆனால் வட, தென் துருவங்களில் ஒருவகை புலால் உணவாகிய உயிர்ப் பொருளே கிடைக்கும். அவர்கள் அதை உண்ணாமல் எப்படி வாழமுடியும், என்று கேள்வி எழுவது இயற்கை. அதற்கும் விடை காட்டுவான் போன்று தான் 'புலால் உண்ணாமை' என்னாது, 'புலால் மறுத்தல்' என்று தலைப்பிடப் பெற்றிருக்கின்றது என எண்ண வேண்டி யுள்ளது. வேறு உணவு உண்ண வாய்ப்பிருக்கும்போது அதை ஒதுக்கி, புலால் உண்ணல் வாழ்வுக்குப் பொருந்தாதது என உணர்கின்றார்; உணர்ந்ததை உலகுக்கும் உணர்த்து கிறார்.

இதன் கடைசிக் குறளில் இந்தத் தலைப்பே வருகிறது. 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்ற குறளே அது. இந்த ஈரடிகளால் வள்ளுவர் பல உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றார். முதலில் கொல்லாமையினைச் சொல்லுகிறார். பின் 'கொல்லாமை' என்றே இதே துறவறத்தைச் சார்த்தி ஓரதிகாரத்தில் பத்துக் குறளைப் பாடி இருக்கும் வள்ளுவர், இங்குப் புலாலை மறுத்தலையே வற்புறுத்துகிறார். இங்கே பத்தாவது குறளில் 'எல்லா உயிரும் தொழும்' என்பது போன்றே, அங்கும் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்கின்றார். எனவே, வள்ளுவர் உயிர் ஓம்பும் அறத்தை நூல் முற்றும் கைப்பற்றியவராதலின் இங்கே இந்த அறத்தையும் கடைப்பிடிக்க வற்புறுத்துகிறார். அத்துடன் அதற்கு அவர் அறநெறியினை மட்டுமன்றிப் பிற வாழ்வு நெறிகளையும் சுட்டிக் காட்டுகின்றார். இந்த இறுதிக் குறளில் முதலில் கொல்லாமையினை வற்புறுத்தி, அடுத்து 'புலாலை மறுத்தானை' எனச் சுட்டுகின்றார். இதற்கு உரை கூறும் ஆசிரியர் அனைவரும் இரண்டினையும் தனித்தனியே பிரித்துக் காட்டியுள்ளனர். எனவே கொல்லுதலும், புலால் உண்ணலும் அறநெறிக்கு மாறுபட்டன என்பது வள்ளுவர் கருத்து. 'உயிர் ஓம்பும்' அறத்துக்குக் கொல்லாமை மாறுபட்ட தன்றே! எனவே, கொலை கருதி வாழாத ஒருவனை உலகில் 'எல்லா உயிரும் தொழுவதில்' வியப்பில்லை அல்லவா ! உலகில் எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று நினைக்கின்ற எந்த உள்ளமும் ஓர் உயிரைக் கொல்ல நினைக்குமா? நினைக்காதே. மாறாக, அந்த உயிர்களின் வளர்ச்சியினையும், இன்பத்தினையுமே நினைக்கக் கடமைப் பட்டவர் எனச் சுட்டிக்காட்டி, மேலே வேறு வகையிலே பிற உயிர்களின் புலாலினை உண்ண நேரினும் அதையும் மறுக்க வேண்டும் என விளக்குகிறார். அவ்வாறு இரண்டு வகை

யான—ஓரே உணர்வில் அரும்பிய பேரறத்தினைக் கைப் பற்றிய ஒருவரை எல்லா உயிரும் தொழுது வழிபடுவதன்றி வேறு என் செய்யும்? அங்கேயும் வெறும் தொழுகையினைக் கூறாது 'கைகூப்பி' என்ற தொடரையும் பெய்கின்றார். ஆம்! கையும் காலும் மெய்யும் பிற உறுப்புக்களும் கொண்டவற்றின் மாமிசத்தைத்தானே நாம் 'புலால்' என்கின்றோம். அவற்றைக் கொல்வதைத்தானே கொலை என்கிறோம். எனவே, தம்மிடம் கருணை காட்டும் அந்தத் தயவாளனை 'எல்லா உயிரும் தொழும்' என்று வள்ளுவர் கூறுவதில் வியப்பில்லை அல்லவா! 'சிறப்பு வகையால் 'கைகூப்பி' என்பதும் எல்லா உயிர்களும் என்று கூறுவதும் பொருந்துவ தாம்.

இனி, இந்த அதிகாரத்திலே வள்ளுவர் வேறொரு கொள்கையினையும் வன்மையாகக் கண்டிக்கிறார். உயிர் களை அவிப்பலி இட்டு வேட்டல் செய்யும் முறை நாட்டில் தொன்மையான மரபாகும். அந்த மரபு இன்று இல்லையாக மறைந்து வருகிறது. சட்டத்தின்படியும் அத்தகைய யாகங் களை இன்று செய்ய முடியாது. எனவே, வள்ளுவர் அன்றே 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என இந்த அதிகாரத்திலேயே சொல்லு கிறார். இதில் புலாலை மறுப்பதை மட்டுமன்றிக் கொலை யினையும் சேர்த்து 'உயிர் செகுத்து உண்ணாமை' என்று குறிக்கின்றார். வேட்டல் ஒருசிலரால் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாயினும், உலக நியதிக்கு அது பொருந்தாது என்பது இன்றும் பலவகையில் நன்கு விளக்கப் பெறுகின்றது. அதன் பொருட்டால் செய்யும் உயிர்க் கொலையும் தவறு என மக்களாலும், சட்டங்களாலும் கண்டித்து ஒதுக்கப் பெற்றுள்ளது. வள்ளுவர் இவற்றையெல்லாம் எண்ணித் தான் போலும் அந்த நல்ல உயிர் செகுத்துண்ணாத

அறத்தினை 'நன்று' என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டிவிடுகிறார். எனவே மேலே கண்ட இரண்டு குறட் பாக்களாலும் வள்ளுவர் கொலையும் புலாலையும் தவிர்க்க வேண்டியன என்றும் அந்த நல்ல அறநெறியைப் பின்பற்றிய வர்கள் என்றும் உயர்ந்து உலக உயிர்கள் அனைத்தாலும் போற்றும் வகையில் சிறப்பார்கள் என்றும் சுட்டி, அவற்றின் வழியே சமுதாயத்தில் நடைபெறும் பெருங்கொடுமையாகிய கொலையை நீக்க வற்புறுத்துகின்றார்.

புலாலை மறுக்க வள்ளுவர் காட்டும் வேறு காரணங் களும் ஈண்டு எண்ணத்தக்கனவாம். மற்றொரு குறட்பாவி லேயேயும் அருளுடையார் இக் கொல்லாமையினையும், ஊன் தின்னாமையினையும் போக்க வேண்டும் எனவும், அவ்வாறு போக்கா விடின் அவர் அருளுடையராகார் எனவும் குறிக்கிறார் வள்ளுவர். 'அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல் பொருளல்லது அவ்வூன் தினல்' என்பது அவர் வாக்கு. இங்கே அருள் நீங்குவதோடு மட்டுமன்றி, ஊன் தின்பதனால் யாதொரு பயனும் இல்லை என்பதையும் வற்புறுத்துவதாக மணக்குடவர் குறிப்பார்.

உலக வாழ்வொடு பொருந்திய இருகாரணங்களையும் வள்ளுவர் காட்டத்தவறவில்லை. உடம்பில் புண் உண்டாயின் எத்தனை அறுவறுப்புற்று அப்புண்ணை நீக்க நாம் முயல்கின் றோம். புறத்தே காணும் புண்களைத்தான் துப்புரவு செய்து தூய்மைப் படுத்துகின்றோம். ஆனால் உடலுக்கு உள்ளே இருக்கும் புண்களையும் அவற்றை உண்டாக்கும் லட்சக்கணக் கான கிருமிகளையும் யாரே தெளிந்து அறிவார்? எங்கேனும் வீக்கமோ அன்றி நோயோ உண்டான பிறகே மருத்துவரை நாடுகிறோம். அவர் உள்ளீடு காணும் கருவியால் ('X' ray) படம் எடுத்து, பிறகு அங்கங்கே உண்டாகி இருக்கும் புண் களைக் கண்டு அறுத்தோ வேறு வகையிலோ ஆற்றிக் குணப் படுத்துவர். அறிவுடைய மனிதன்—நல்லதை ஆய்ந்து

உண்ணும் மனிதன்—வருமுன் காக்கும் மனிதன் செயலே இவ்வாறு அமையுமாயின் வாயற்ற— விளக்கிக் காட்ட முடியாத—என்னவென்று சொல்லமுடியாத விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் வயிற்றிலும் பிற உறுப்புக்களிலும் என்னென்ன புண்கள் இருக்கும் என்று யாரால் கணித்தறிய முடியும்? புலால் விற்பனையாளர்கள் இவற்றையெல்லாம் கண்டா உயிர்க்கொலை செய்து விற்கின்றனர். இல்லையே; எனவே புலால் வாங்கியோ அல்லது அறுத்தோ உண்ணுபவர் இவற்றையெல்லாம் பாராது அவற்றின் புண்ணோடு உண்டு தங்கள் வயிற்றிலும் வாயிலும் பிறவிடங்களிலும் புண்ணை உண்டாக்கிக் கொண்டு மருந்தகத்தை நாடிச் செல்ல மாட்டார்களா? எனவேதான், இதை உணராத பலர் புலால் உண்டு தம்மைக் கெடுத்துக் கொள்ளுகிறார்களே என அவர் அருளுள்ளம் வருந்த, 'உணர்வார் பெறின்' என உரைக்கின்றார். 'உண்ணாமை வேண்டும் புலால் பிறிதொன்றன் புண், அது உணர்வார் பெறின்' என்பது முற்றிய குறள். எனவே அறத்தாறு கிடக்க, உலகில் நோயற்ற வாழ்வில் வாழநினைப்பவரும் எவரும் புலாலை நினைக்கக்கூடாது என எச்சரிக்கை செய்கிறார் வள்ளுவர். யாரே நோயற்ற வாழ்வை வாழ விரும்பாதார்.

இன்னும் மற்றொரு வகையிலும் தான் கொண்ட கருத்தை வள்ளுவர் விளக்குகிறார். உயிர் வாழ்வு ஊன் உண்ணாமையின் அடிப்படையில் அமைந்தது எனக் காட்டி, அந்த 'ஊன் உண்ணின் அண்ணாத்தல் செய்யாது அளறு' என உண்பார் படும் அவதியினையும் சுட்டுகிறார். அளறு என்பதற்கு 'நரகம்' எனவே அனைவரும் பொருள் கொள்ளுகின்றனர். ஆனால் நரகத்தை நம்பாதவரும் உண்டே! அளறு என்பதற்குத் தமிழில் சேற்றுப்பள்ளம், சிதற வெடிக்கும் நிலை போன்ற பொருள்கள் உள்ளன. நாம் மேலே கண்டபடி கண்டவற்றின் புலாலினை உண்ணின் நோய் பற்றி நீங்காத

பெரும் நோயான சேற்றுப் பள்ளத்தில் விழ, அவர்கள் அதிலிருந்து மீளமுடியாது; அப்படியே முடிவினை எய்துவர் என்பதே பொருந்தும் பொருளாகும். மற்றொருவகையிலும், திடீரெனச் சிதறவெடித்து விழுவது போன்று இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு, இரத்த நாளம் வெடித்தல் முதலியவற்றால் உடன் மறைந்தொழிவர் எனவும் கொள்ள லாம். பின்னர் மருந்து என்னும் அதிகாரத்தால் இயல்பான நோய்களுக்கு உற்ற மருந்தையும் நோய் வராது தடுக்கும் வகைகளையும் விளக்கும் வள்ளுவர், இந்த புண் உண்டலால் வரும் நோய்கள் பெறின் உய்தி இல்லை என்பதால் இங்கே குறித்தார். எனவே நோயின்றி வாழ விரும்புவாருக்கும் அருளுடை நெஞ்சினார்க்கும் ஒருங்கே அமைந்த அதிகாரமாக இது அமைகின்றது. வள்ளுவர் இதனால் மக்கள் எல்லா உயிரையும் தம் உயிர் போல் ஒத்து நோக்கி, ஊறு நேரா வண்ணம் காத்து, தமக்காகவாயினும் அவற்றிற்கு ஊறு இழைத்தலாகாது என வற்புறுத்தி, எல்லாரும் எல்லாமும் இன்புற்றிருக்க வழிகாட்டுகின்றார். அந்த வழிபற்றி ஒழுகின் வையகம் வாழும்! வளம் பெருகும்!

# தவம்

தமிழில் வழங்கும் பல்வேறு சொற்களுக்கு வள்ளுவர் பொருள் காணும் வகையே தனிப்பட்ட ஒன்றாகும். வள்ளுவர் உள்ளம் யார்க்கும் எனைத்தானும் துன்பம் செய்யாவகையில் உலகை ஈர்த்துச் செல்லும் நல் உள்ளம் ஆதலின், அதன் அடிப்படையிலேயே அவர் காட்டும் அனைத்து அறங்களும் அமைகின்றன. இந்த நெறியிலேயே உலகம் செல்லுதல் நேரியதாகவும் அமைவுடையதாகவும் உள்ளமையின், உலகம் வள்ளுவர் காட்டும் வழியினைப் பின்

பற்றுவதன்றி வேறு வழி இல்லை. வாய்மை எனப்படுவது யாதொன்றும் தீமை பயவாதவற்றைச் சொல்லுதல் என்றும், அறம் எனப்படுவது மனத்தில் அழுக்கற்றிருத்தலே என்றும், அறிவு என்பது பகைவர்களுக்கும் தீங்கு நினைக்காதது என்றும், கல்வி என்பது தாம் பெற்ற இன்பம் வையகம் பெறக் காண்பது என்றும் விளக்கங்காட்டும் வள்ளுவர், இங்கே 'தவம்' என்ற சொல்லுக்கும் புதிய நல்ல தெளிந்த தேவையான விளக்கத்தினைத் தருகிறார். 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்று முதற் குறளிலேயே தவத்துக்கு விளக்கம் தந்துள்ளார். இதற்குப் பரிமேலழகர் உரை கூறுவதில் சற்றே மாறுபட்டாராயினும், பிற உரையாசிரியர்களெல்லாம் நேரான உரையினையே கூறியுள்ளனர். ஆம்! உண்மையாகத் தவம் என்பது தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும், அவ்வாறு வந்த துன்பங்களுக்குக் காரணமானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் யாதொரு துன்பம் செய்யாமையும் ஆம். இங்கும் எல்லா உயிர்களையும், பிணைத்தே 'உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்று காட்டுகிறார். எனவே 'தவம்' என்பது தன் துயர் தாங்குவதோடு பிற உயிர்க்கு ஏதம் செய்யாமையேயாகும். இதையேதான் பின் கொல்லாமை என்னும் அதிகாரத்தில் 'தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' என்று விளக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். பிறருக்குத் துன்பம் செய்யத்தூண்டுவன சினம், அவா ஆகியவையாதலின் அவற்றை நீக்க வேண்டுமெனப் பின்வரும் அதிகாரங்களால் வள்ளுவர் வற்புறுத்துகின்றார், இவை அனைத்தையும் உள்ளடக்கியே, பின்வந்த சிறுபஞ்சமூல ஆசிரியர்,

> ''உயிர்நோய் செய்யாமை உறுநோய் மறத்தல்
> செயிர்நோய் பிறர்கண் செய்யாமை—செயிர்நோய்
> விழைவு வெகுளி இவை விடுவானாயின்
> இளிவன்(று) இனிது தவம்''

என்று நன்கு விளக்கியுள்ளார். எனவே, தவம் என்பது என்ன என்பதை வள்ளுவர் இந்த முதற் குறளின் மூலம் நன்கு விளக்கி, மேலும் அதுபற்றிய பிற விளக்கங்களை அடுத்து வரும் குறள்களினால் நன்கு காட்டுகின்றார்.

இவ்வாறு வரும் துன்பத்தைத் தாங்கிக் கொண்டு மற்றவர்களுக்கும் துன்பம் செய்யவில்லையானால், அவன் நினைத்ததைப் பெறுவதற்குத் தடையும் உண்டோ! அத் தகைய நல்ல உளமுடைய தவசி நிச்சயமாக வேண்டியதை இவ்வுலகில் பெறுவரன்றோ! 'வேண்டிய வேண்டி யாங்கெய்த லால் செய்தவம் ஈண்டும் முயலப் படும்' என்பது வள்ளுவர் வாக்கு. இதற்குப் பரிமேலழகர் 'மறுமைக்கண் தாம்வேண்டிய பயன்களைப் பெறுதலால் ஈண்டு, இப்பிறவியிலேயே தவம் செய்ய முயலவேண்டும்' என்று உரை எழுதுவர். இது பொருந் தாது. நல்லவன் எப்போதும் வேண்டியதைப் பெறுவதில் தடையில்லை. 'விரும்பின விரும்பினபடியே வருதலால் தவம் செய்தலை இவ்விடத்தே முயலவேண்டும்' என்ற மணக் குடவர் உரையே இங்கே சாலப் பொருந்துவதாகும்.

இனி, இதற்குமுன் வரும் குறளில் 'வேண்டிய' என்பதை வள்ளுவர் குறிப்பால் உணர்த்துகிறார். 'ஒன்னார் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும்' என்பதே அக்குறள். இதற்குச் சற்றே தெளிவாகப் பரிமேழைகர் உரை கூறுவது பொருத்தமாகவுள்ளது. ஒன்னார் உவந்தார் என்பதற்குத் தம் அறமாகிய தவத்திற்கு மாறு பட்டவர் என்றும் அத்தவத்துக்கு ஒப்ப உகந்தவர் என்றும் பொருள் காட்டுகிறார் அவர். மேலும் தவசிக்கு—உற்ற நோய் நோற்று உயிர்க்கு உறுகண் செய்யாத தவசிக்கு—எப்படிப் பகைவர் உண்டாவார் என்ற கேள்வி எழுமல்லவா! அதற்கும் விளக்கம் தருகிறார் பரிமேலழகர். ஆம்! அவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இச்செயல்களை அவர்கள் மேல் ஏற்றாது, தவத்தின் மேல் ஏற்றி வள்ளுவர் கூறினார்

என்கிறார். பொருத்தமானதே! தவத்திற்கு அந்த ஆற்றல் உண்டு என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அத்தவத்தை மேற்கொள்ளும் தவசிக்கு அவை கூடாது என்பது தெளிவாக்கப் பெறுகின்றது. சிலர் எல்லாம் செய்ய வல்ல உயர்ந்த பதவியிலிருந்தும், மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது அமைதியாகத் தம் கீழ் உள்ளவரைத் தழுவியும் மாற்றியும் நெறிப்படுத்தியும் சென்றால் அந்த நிறுவனமோ அரசோ செம்மையாக நடைபெறுமன்றோ! அதே அடிப்படை தான் ஈண்டு எல்லா ஆற்றலும் உள்ள தவத்திற்கும் அவற்றைக் கொள்ளும் தவசிக்கும் ஏற்றிக் காட்டப் பெறுகின்றது. இதனால் ஆற்றலும் ஆணையும் பெற்றவர்கள் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது செம்மை நெறியில் செல்ல வேண்டும் என்பதும், தவறின் நாட்டில் அல்லலும் அவதியும் அமைதியின்மையுமே நிலைக்கும் என்பதும் பெறப் படுகிறது.

வரும் துன்பத்தைத் தாங்குவதே தவத்தின் அடிப்படை என உணர்ந்து உணர்த்தும் வள்ளுவர், அத்துன்பத்தை ஏற்று மகிழ்வார் எவ்வாறு உலகில் சிறப்பார் என்பதை நல்லதொரு உவமையால் தெளிவுபடுத்துகின்றார். உலோகங்களில் உயர்ந்தது பொன் அல்லவா! ஆம்! அந்தப் பொன் கொண்டு விரும்பியவர் விரும்பிய வகையிலெல்லாம் அணிகளையும் செய்து கொள்வர். பொன்னை விரும்பாதவர் இலர். தவசி அத்தகைய பொன்போன்றவர்; வேண்டுவோர்க்கு வேண்டும் வகையில் ஆக்கம் செய்ய வல்லவரும் கூட. அப்பொன்னைத் தவசிக்கு உவமையாக்கிய வள்ளுவர், அப்பொன்னைச் சுட வைத்து, அந்த நிலையிலேயும் தவசியையும் ஒப்பிட்டுப் பார்க் கிறார். பொன் சுடச்சுட மேலும் மேலும் ஒளிவிடுமல்லவா, அப்படியே தவசியும் துன்பமாகிய வெந்தணலில் பட்டுச் சுடப் பெறச் சுடப்பெற உயர்வுறுவான் என உவமை வாயிலால், அத்தவசி உயர வேண்டுமானால் எத்தனைத் துன்பங்கள்

வரினும் 'இடுக்கண் வருங்கால் நகுக; என்று வள்ளுவரே காட்டியது போன்று, அவற்றைப் புன்முறுவலோடு ஏற்றுத் தாங்கி, அதே போது அத்துன்பம் செய்தார்க்கும் மற்றவர் களுக்கும் மனத்தாலும் மாணா செய்யாது வாழ வேண்டியவர் என்பதைத் தெளிவாக்குகிறார். எனவே தவ வாழ்வினைக் குறிப்பிடுவதன் மூலம் மனித வாழ்வும் அந்த அடிப்படையில் மலர வேண்டிய இன்றியமையா உண்மையினையும் வள்ளுவர் தெளிவாக்குகிறார்.

மேலும் வள்ளுவர் தவத்தை விளக்குமுகத்தான் வேறு சில தொடர்களையும் சொற்களையும் எடுத்தாளுகின்றார். 'தங்கருமம் செய்வார்' 'தன்னுயிர் தான் அறப்பெற்றான்' 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்'. 'நோற்பார்' போன்ற தொடர்களும் சொல்லும் தவசியைக் குறிப்பனவே யாம். முதல் தொடரின் வழியே 'அவரவர்களுக்கு அமைந்த கடமையை—கருமத்தை வழுவாது செய்பவர் யாவரும் தவசியே' என விளக்கி; உலகில் பிறந்தார் அனைவரும் அவரவர்களுக்கு அமைந்த கடமை நெறியிலிருந்து வழுவாது வாழ வேண்டும் என வற்புறுத்துவர். அடுத்துவரும் தொடரால் அவ்வாறு கடமை வழி ஒழுகி, உற்றார் மற்றார் வேறுபாடின்றி, காய்தல் உவத்தல் அகற்றி வாழ்வார் தம் உயிரைத் தம் வழியே இயக்கும் நிலை பெறுவர் என்கின்றார். தானறப் பெறுதல் 'தானே உயிர் என அறிதல்' என்பர். அது, நான் யார்? உடலா உயிரா? என்று ஐயுறும் நிலை நீங்கி, எல்லாச் செயல்களுக்கும் காரணமாயதும் அவற்றின் பயனை அனுப்பவிப்பதுமாகிய உயிரையே தான் என உணர்ந்து, அதைத் தன் வழி இயக்கும் நெறி எய்துதலாம். மேலும் அவ்வுயிரை வேண்டுமாயின் உடலிலிருந்து நீங்காது நிறுத்தி வைக்கவும் முடியும், பாரத யுத்தத்திலே 'பெருந்தவசி' வீடுமர் செய்தது போல, இதை வலியுறுத்துவதே அடுத்த தொடராகிய 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்'

என்பது. இதனாலும் தவசியைக் குறிப்பதோடு, அந்த ஆற்றல் பெற்றால் கூற்றம் குதித்தலும் கைகூடும் என்றார் .குதித்தல் என்பதற்குக் கடத்தல் எனப் பொருள் காண்பர். எனவே சாவாது வாழவும் முடியும் என்பது பெறப்படுகிறது. அடுத்து வரும் 'நோற்பர்' என்பதும் அத்தகையதே. இதன் வழியும் இக்குறள் வழியும் இவர்கள் எல்லாச் செல்வங்களையும் பெறுவர் என்பதும் பெற முடிகின்றது.

இவ்வாறு இந்த அதிகாரத்தில் வள்ளுவர் தவம் என்பதன் விளக்கம் கூறி, அத்தவசியின் ஆற்றல் இன்னின்ன என்று எடுத்துக்காட்டி அந்த ஆற்றலைப் பிறர்மேல் பயன் படுத்தா வகையிலும் மற்றவரைத் துன்புறுத்தா வகையிலும் இருப்பின் அத்தவசி உயர்வான் என்பதைச் சுட்டி, அந்த ஆற்றல்மிக்க தவசியர் உலகில் விரும்பின் எதையும் சாதிக்க இயலும் என்பதையும் காட்டுகிறார். எனவே உலகில் பிறந்த ஒவ்வொருவரும் அவரவர் கடமை வழிநின்று காய்தல் உவத்தல் இன்றி, உயர்நிலையைப் பெற்று 'உயர வழி உண்டு' என உணர்ந்து செயலாற்றுமாறு வேண்டி நிற்கின்றேன்.

# கூடா ஒழுக்கம்

தவத்தின் உயர்நிலையினைச் சுட்டிய வள்ளுவர் சிறப் பாக அத்தவசிக்கு உரித்தான ஒழுகலாற்றில் நிற்க வேண்டிய வழிகளையும் காட்டியுள்ளார். அதே நிலையில் புறத்தோற் றத்தால் ஒழுக்கம் உள்ளவர்போல் காட்டி, அகத்தே மாறு பட்டு ஒழுகும் மாக்களை நினைக்கிறார். எல்லாவகையிலும்- உண்ணும் உணவிலும் உடுக்கும் உடையிலும் பிற அனைத் திலும் 'போலி' புகுந்துள்ள இன்றைய வாழ்வினைக் காணும்

நமக்கு இப்போலி வாழ்வும் நன்கு புரியுமன்றோ! இன்றைய மனிதன் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில்' வல்லவன் என்பதை நாட்டு நிகழ்ச்சிகளும் உலக நிகழ்ச்சிகளும் நன்கு காட்டுகின்றன. எனவேதான் வள்ளுவர், அப்போலிகளைப் புரிந்து வாழ வேண்டும் என்று அன்றே உலகுக்கு எச்சரிக்கை விட்டுவிட்டார். அதிலும் மக்களுள் உயர்ந்தார் எனக் கருதும் 'நோற்பாராகிய தங்கருமம் செய்வார்' போன்று பலர் உலகில் மாற்று நிலையில் புறப்பட்டால் என்னாவது? அவர்களைக் கண்டு அஞ்சி அவர்கள் அடியில் பொன்னையும் பொருளையும் கொட்டி, தம்மை இழந்து மக்கள் வாடக்கூடாது என்பதற்காகவே இந்த 'கூடா ஒழுக்கம்' என்ற அதிகாரத்தினை அவர் அமைத்துள்ளார். ஒழுகலாற்றினை முறைப்படுத்தி மக்கள் முன் ஒன்றன்பின் ஒன்றாக வைத்து வழி காட்டும் வள்ளுவர், அவ்வொழுக்கங்களைப் பின்பற்றுபவர் போல் நடிப்பவர் பலர் உலகத்தில் உள்ளமையின், அவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என, இதில் பல உவமைகளையும் காட்டி விளக்கியுள்ளார். மேல் தவசி 'தங்கருமம்' செய்பவன் என்று திட்டவட்டமாகக் கூறி விட்டமையின், புறத் தோற்றத்தால் யாரையும் கண்டு ஏமாற வேண்டா என நம்மை நேரிய வழியில் ஆற்றுப்படுத்துகிறார் வள்ளுவர். உலகில் தாழ்சடை வைத்தும் தலை மொட்டை அடித்தும் 'தவசி'களாகத் தம்மை கூறிக் கொள்வார் பலர் உண்மையின் அப்புறத் தோற்றத்தைப் பற்றியும் வள்ளுவர் கூற மறக்கவில்லை. மேலும் பல்வேறு வகையில் தம்புறத் தோற்றத்தாலும் பிற செய்கைகளாலும் மக்களை மனந்திருப்புவார் எல்லாத் துறையிலும் உள்ள இன்றைய உலகத்தில் இந்த அறிவுரைகள் மிகவும் இன்றியமையாதன. மிக உயர்ந்தார் போன்று மேநாட்டு உடை உடுத்தும், பகட்டாக நடந்தும் பகல் கொள்ளை அடிப்போரைப் போன்றே, புறத்தோற்றத்தால் உயர்ந்த தவசி போல் நடித்துப் பல கொடுமைகளைச் செய்வார் உளர்

அல்லவா! அனைவரையும் இனம் புரிந்து கொள்ளவே வள்ளுவர் இந்த அதிகாரத்தை வகுத்துள்ளார்.

முதலில் அத்தகைய கூடா ஒழுக்கம் கொள்ளும் அவனை நோக்கி, அவன் உள்ளும் புறமும் ஒத்திருக்க வேண்டிய தேவையை வற்புறுத்துகிறார். 'உன் உள்ளமும் உன்னுள் பொதிந்து நிற்கும் ஐம்பூதங்களும் காணாதவகையில் நீ ஒன்றும் செய்ய முடியாதே! அவற்றை விட்டு நீ வேறு வகையில் இப்பொருந்தாத ஒழுக்கத்தை மேற்கொள்வாயாயினும் அவை உன்னைப் பார்த்துச் சிரிக்காதா! உன்னைப் பற்றி உலகத்தார் சிரிப்பதன் முன் உன் உள்ளமும் உள்ளே உள்ள ஐம்பூதங்களும் உன்னைப் பார்த்துச் சிரித்து வாழும் உன் வாழ்வு ஒரு வாழ்வா?' எனக் கேட்கின்றார். 'வஞ்சமனத் தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்பார் அவர். மேலும் அடுத்த குறளில் இப்படி அவன் உள்ளமே அவனைப் பார்த்து நகைக்க, புறத்தே பலர் போற்ற உயர்ந்த தோற்றத்தனாய் விளங்குவது யாதொரு பயனையும் தராது எனச் சுட்டிக் காட்டுகிறார். 'தன் நெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்' என்று இவரே பின்னர் வேறு இடத்தில் காட்டுவது போன்று அவன் நெஞ்சே அவனைச்சுட அவன் இல்லையாகக் கழிந்தொழிவானன்றோ!

இனி வள்ளுவர் காட்டும் உவமைகளைக் காண்போம். நல்ல வயலில் உயரிய பயிர் பச்சைப்பசேல் என ஓங்கி நிற்கின்றது. பக்கத்திலே சென்ற ஒரு மாட்டிற்கு அதைத் தின்ன வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. எனினும் காவற்காரன் அதை அண்ட ஒட்டாது துரத்திக் கொண்டே இருக்கிறான். ஆகவே அந்த மாடு ஒரு சூழ்ச்சியில்—அதற்குக் கூடாத ஒழுக்கத்தில் இறங்குகிறது. எப்படியோ அதற்கு ஒரு புலித்தோல் கிடைக்கிறது. அதைப் போர்த்திக் கொண்டு

மாடு வயலருகில் செல்லுகிறது. காவலாளன் அதைப் புலி எனக் கண்டு அஞ்சி ஓடுகிறான், இங்கே உவமை இருவகையில் விளக்கப்பெறுகின்றது. ஒன்று புலி பயிரைத் தின்னாது என்பது; மற்றது அதனிடத்துக் கொண்ட அச்சம். அப்படியே கூடா ஒழுக்கத்தைக் கொண்ட புறக்கோலம் காட்டுபவர் தீங்கு செய்யமாட்டார் என்றும் அவர் கோபத்துக்குள்ளாக வேண்டும் என்றும் பிறர் அவர்களை ஒன்றும் செய்யார் என்பதாம். எனினும் மாட்டின் மேய்ச்சலைக் கண்டு உண்மை உணர்ந்து அதை நையப்புடைத்த நொறுக்குவது போன்று இக் கூடாஒழுக்கில் உள்ளவனின் உண்மை நிலை அறிந்தபின் அவனை உலகிலேயே வாழவிடாது வதைத்துக் கழிப்பர் என உணர்தல் வேண்டும். 'வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றும் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று' என்பது குறள்.

மற்றொரு உவமை வழியே தவமறைந்து அல்லவை செய்தலை விளக்குகிறார். பறவைகளைப் பிடிக்கும் வேடுவன் வலையை விரித்து, அதில் பறவைகள் விழுகின்றனவா என்று புதலின் கண்ணே மறைந்திருப்பது போன்று, இவனும் தவவேடமாகிய புதலின்கண் மறைந்து தன் வசப் படுபவரை நிலைகெடுப்பான் என்கின்றார். மேலும் மற்றொரு குறளில் புறத்தோற்றத்தைக் கண்டு மதித்தல் எவ்வளவு தவறு உடையது என்பதை நன்கு உவமை காட்டி விளக்குகிறார்.

வேடுவன் விடும் அம்பு வடிவால் நேராகவும் செம்மையாகவும் இருக்கிறது. ஆனால் அதன் செயலோ மற்றவர் உயிரை வாங்கத்தக்க வகையில் அமைகின்றது. அதே வேளையில் யாழ் தோற்றத்தால் நேராக இல்லாமல் வளைந்து நெளிந்து உள்ளது. ஆனால் அந்த யாழ் எழுப்பும் இன்னொலியோ எதிரில் நின்று கேட்பாருக்கும் எங்கோ மறைவில் இருப்பார்க்கும் இன்பம் பயக்கும் நல்ல இசையை நல்குகிறது.

என்று உவமைகாட்டி, இதனால் வெறும் புறத்தோற்றத்தால் நேர்மையற்றவர்களை நம்ப வேண்டாம் என எச்சரிக்கை செய்கிறார் வள்ளுவர். அவர்கள் எத்தகைய கொடுமைக்கும் அஞ்சாதவர்கள் என உணர்ந்து விலகவேண்டும். அதே சமயத்தில் யாழ்போன்று தோற்றத்தால் விரும்பத்தகாதவ ராக—வேறுபட்டவராயினும் அவர் தம் செயலால் பயன் விளையுமாயின் அவர்கள் ஒழுக்க சீலர் எனக் கொண்டு அவர் கள் வழியே செல்லவேண்டும் என்கின்றார். எனவே உயர்ந் தார் அல்லார் என அறியப் பயன்படுவது அவர் தம் அகத் தோற்றமும் அதன்வழி அமையும் செயல்களுமேயன்றி வெறும் புறத்தோற்றத்தால் அவர்களை அறுதியிட வேண்டாம் என விளக்கிவிட்டார் வள்ளுவர். ‘கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் (கு) அன்ன, வினைபடு பாலால் கொளல்’ என்பது குறள். இத்தனையும் சொல்லியபிறகும் சிலருக்கு விளங்கவில்லை என எண்ணிய வள்ளுவர், மேலும் நான் முன் குறித்தபடியே வெளிப்படையாகவே புறத்தோற்றத்தை நமக்குக் காட்டிவிடுகிறார். ஆம்! ‘மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்’ என்பது அவர் வாக்கு. உலகில் மொட்டை அடித்துக் கொண்டும் தாழ்சடை வைத்துக் கொண்டும் துறவிகளாகத் தம்மைக் காட்டுபவர் பலர் உண்மையாலும் அவருள்ளே உண்மையில் உள்ளத்தால் அனைத்திலும் பற்றற்று நிற்பவர் மிகச் சிலரே ஆனதாலும், அவருள் பலர் உலகம் பழிக்கும் செயல்கள் பல செய்கின்றமை யாலும் இவ்வாறு ‘உலகம் பழிக்காத செயலை செய்பவரே உயர்ந்தார்’ என்றும் ‘மற்றவர் தோற்றத்தால் உயர்ந்தா ராகக் காட்டினும் ஒதுக்கத் தக்கவரே’ என்றும் கோடிட்டுப் பிரித்துக் காட்டிவிட்டார். இதையே பின்வந்த சமயநெறி பாடவந்த சுந்தரர்,

'மறையிடை துணிந்தவர் மனையிடை இருப்ப
வஞ்சனை செய்பவர் பொய்கையும் மாயத்
துறையுறக் குளித்து உளதாக வைத்துய்த்த
உண்மையெனும் தகவின்மையை ஓரேன்'

என்று வெளிப்படையாகவே சுட்டிக் காட்டுகின்றார். வள்ளுவர் இந்த வஞ்சனையால் தம்மை மறைத்து வாழ்வரையே வன்கணாளர்களிலெல்லாம் மிகக் கொடிய வன்கணாளர் என்கின்றார். 'நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்' என்று இவரினும் கொடிய வன்கணாளர் இல்லை என்று உறுதியாகக் கூறுகின்றார். எனவே வள்ளுவர் இக் கூடா ஒழுக்கம் என்னும் அதிகாரத்தின் வழி, இவ்வுலகம் யாரிடமும் விழிப்பாக இருக்க வேண்டும் என விளக்கி விட்டார். இதே கருத்தை வலியுறுத்தவே அடுத்த கள்ளாமையாகிய அதிகாரத்தின் முதற் குறளிலே 'கள்ளாமை காக்கத் தன் நெஞ்சு' என மறுபடியும் எச்சரிக்கிறார். பல்வேறு போலிகள் பகல் வெளிச்சத்திலேயே நாட்டையும் உலகையும் பற்றி நலிவுறுத்தும் இந்த நாளில் இந்த வள்ளுவரின் தெள்ளிய எச்சரிக்கை மிகமிக இன்றியமையாததாகும். எனவே, நாம் நம்மைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் கூடா ஒழுக்கில் கைதேர்ந்த மாக்களுக்கிடையில் விழிப்பாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என உணர்ந்து நாமும் நல்லொழுக்க நெறி நின்று வாழ்வோமாக!

## கள்ளாமை

மனிதனுக்கு இன்றியமையாது இருக்க வேண்டிய நற்பண்புகளைப் பல வகையில் விளக்கி வருகின்ற வள்ளுவர், இந்த அதிகாரத்தில் "கள்ளாமை"யைப் பற்றி விளக்குகிறார். இந்தக் "கள்ளாமை" என்ற சொல்லுக்கும் இவர் காணும் பொருள் உயர்ந்ததாகும். கண்ணுக்கெதிரே பிறர் பொருளைக்

கொள்ளை கொண்டுசென்றாலும் அது திருடப்பட்டதெனத் தக்க சான்றுகளைக் காட்டி நிரூபிக்க வேண்டிய இக்காலத்தில், வள்ளுவர்காட்டும் உயர்ந்தநெறி திகைப்பைத்தான் உண்டாக்கும். ஒருவருக்கு உரிமையான பொருளை அவன் உரிமையி னின்று பறித்து தம் அதிகாரத்தாலோ வேறு வகையாலோ வெளிப்படையாக எடுத்துக் கொண்டு, அவ்வாறு எடுத்துக் கொள்வதைச் சரியெனக் காட்டி வாதிக்கும் இந்தக் காலத் துக்கு, வள்ளுவர் "கள்ளாமை" சற்றே புரியாத ஒன்றுதான். எனினும் எதிலும் உளந்திறந்து காட்டும் வள்ளுவர்தம் திறனையும் பண்பையும் இங்கேயும் நம்மால் காணமுடி கின்றது. 'உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்' என்ற குறள் வழி மிக உயர்ந்த அறப்பண்பினை அவர் விளக்கி விட்டார். வள்ளுவர் சிறந்ததை வற்புறுத்துவதற்கு, தேவையற்றதென நாம் நினைக்கும் சில சொற்களை வலிந்து பெய்து விளக்குபவர். இங்கே 'உள்ளல்' என்றாலே போதும். உள்ளுவது உளத் தால்தானே இயலும்? எனினும் அவ்வுள்ளத்தையும் பிணைத்து, 'உள்ளத்தால் உள்ளலும்' என்று காட்டி 'உள்ளலும்' என்றதில் 'உம்'மையையும் இணைத்து காட்டி விழைந்ததைத் திட்டமாகவும் தெளிவாகவும் நன்கு, நாம் அறியும் படியும் காட்டி விட்டார். எனவே பிறர் பொருளைத் திருடுவது மட்டும் குற்றமில்லை; திருட நினைப்பதுவே குற்றமாகும் என அறிதல் வேண்டும். 'நாம் மனத்திலே நினைப்பது யாருக்குத் தெரியப்போகிறது' என்று எண்ணின் நாம் தவறு செய்தவராவோம். வள்ளுவர் பிற இடங்களில் சுட்டியபடி, மனமறியாத செயலோ நினைவோ இல்லை என்பதும், அம்மனமறிந்து—நெஞ்சறிந்து செய்யும் தவறுகளை அம்மனமே 'கரி' யாக நின்று, செய்த அவனைச் சுட்டுப் பொசுக்கும் என்பதும் ஈண்டும் நினைக்கத்தக்கன. பிறர் பொருளைக் கேட்டு வாங்குதல் தவறு இல்லை. ஆனால்! 'கள்வேம் எனல்' தவறுடைத்து. திருடிக்கொள்

வோம் என்று நினைப்பதுவே தவறு என்று உலகம் உணருமாயின் நாடு, நீதிமன்றங்களெல்லாம் அற்ற ஒரு நித்திய இன்பம் தரும் பொன்னாடாகப் பொலிவுறாதா? அத்தகைய நல்ல நிலையை நாம் பெற முடியுமா? நினைத்துப் பாருங்கள். 'எப்படிச் சேர்த்தால் என்ன? திருடின காசு என்று எங்கே குறித்திருக்கிறது. திருடித் திருடிச் சேர்த்துச் செல்வராவதில் என்ன தவறு? யாருக்குத் தெரியப் போகிறது' என்று நினைக்கும் சிலரை நோக்கி வள்ளுவர் உன் மனத்துக்குத் தெரிந்து செய்யும் செயலானமையின் அது தவறு எனச்சுட்டியதோடு அமையாது, அவ்வாறு மறைமுகமாகச் சம்பாதிக்கும் உன் செல்வம் பெருகுவது போன்று அழியும் எனச் சுட்டினார். எனவே சிலகாலமே நிற்கும் அப்பொருளைச் சேர்க்க சிறுமையான களவினைச் செய்ய வேண்டாம் எனக் காட்டுகிறார், 'களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும்' என்பது அவர் வாக்கு. 'தீயது ஆவது போலக் கெடும்' என்பது பழமொழி. இக்குறளில் 'அளவிறந்து' என்ற சொல்லை 'ஆக்கத்'துக்கு மட்டுமன்றி அழிவுக்கும் பயன்படுத்த வேண்டும். கிராமங்களிலே 'புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும் அடித்துச் சென்றது' என்ற பழமொழி கூறுவார்கள். அதுபோல, களவால் ஆகிய ஆக்கம் அளவிறந்து நின்று, அளவு கடந்த நிலையிலே முன்னைய ஆக்கத்தையும் இல்லையாக அடித்துச் செல்லும் எனக் கொள்ளல் வேண்டும். ஆம்! உள்ளதும் போக வஞ்சமனத் தான் வாடி வருந்த வேண்டிய நிலையில் தள்ளப் பெறுவான் என்பதாம்.

இந்த நல்ல உண்மையினை நாட்டில் நினைப்பார் எத்துணையர்? ஏதோ இந்த வேளைக்கு எல்லாம் கிடைக்கிறதே என்று எத்தனையோ கள்ளச் சந்தைகளை உருவாக்கி வளர்த்து, மக்களின் தேவையான பொருள்களை மறைத்து இல்லா நிலையை உண்டாக்கி, விலையை அதிகப்படுத்தி

அதனால் பெரும்பொருள் சேர்க்கப் பலர் முயல்கின்றார்கள். அம் முயற்சியில் சிலர் வெற்றி பெற்றமை போல் தெரியும். இந்தக் காட்சியைக் கண்டுதான் வள்ளுவர் இக்குறளை நமக்குத் தருகிறார். 'அவன் ஆக்கம் அளவிறந்து பெருகுவ தாக நினையாதே. சற்றே பொறுத்துப் பார். அவன் இன்று களவினால் சேர்த்த செல்வம் அவன் முன்னைய செல்வத்தை யும் அடித்துக் கொண்டு போகப் போகிறது' என்கிறார். இந்த நிலை நாம் நாட்டில் காண்கின்ற நிலைதான். ஆனால் அந்தக் காட்சியினால் யார் மனம் திருந்துகிறார்கள்?

பிறவிடங்களில் அருள், அன்பு என்றெல்லாம் வள்ளுவர் கூறுகிறார். அந்த உலகுக்கு இன்றியமையாத அருள், அன்பு அவற்றில் பிறக்கும் பிற நல்ல பண்புகள் அனைத்தும் இக்கள வாளிகளிடம் காணாதவை என்கின்றார் வள்ளுவர். வஞ்சனை யால் பிறர் பொருளைக் கொள்ளை கொண்டு கருப்புச் சந்தையில் பொருள் ஈட்டி, அதனால் ஏதோ பெரும் கொடைகள் செய்ய எவனாவது வந்தால் அவனைச் சமூகம் ஏற்காது ஒதுக்கித் தள்ளுக எனச் சுட்டுகிறார் வள்ளுவர். அவன்தன் கொடுமையை—களவால் கள்ளச் சந்தையால் பிறருக்கு உரிய, பிறருக்குத் தேவையான பொருள்களைக் கவர்ந்த கொடுமையை மறைக்கச் செய்யும் பகட்டான போலிச் செயல்களே அவை என ஒதுக்கச் சமுதாயம் கடமைப் பட்டிருக்கின்றது. இந்த அவல நிலையினைத் தனி மனிதன் மட்டுமன்றிப் பேரரசுகளும் செய்யும் நிலையினைக் காண் கின்றோம். அலெக்சாந்தர் முன்னே ஒரு கள்வனை நிறுத்தி 'அவன் திருடியது குற்றம்' எனச் சாடிய காலத்து, அவன் பிற நாட்டு மக்களின் பொருள்களைக் கொள்ளை அடித்தும் வஞ்சித்தும் பறித்துச் செல்லும் அலெக்சாந்தர் பெருங் கொள்ளைக்காரன் எனக் காட்டி அவனையும் திருத்தி, தன்னையும் விடுவித்துக் கொண்ட கதை நாடறிந்த

ஒன்றல்லவா! எனவே எந்த வகையிலும் பிறர் பொருளைக் 'கள்வேம்' எனக் கருதுவதோ கள்ளத்தால் கொள்ளுவதோ உலகச் சமுதாய வாழ்வை முற்றும் கல்லும் வேர்க் கொல்லி என உணர்தல் வேண்டும். அதையே வள்ளுவர் உணர வைக்கிறார். அத்தகைய கொள்ளையடிப்பவர் என்றும் அன்போ அருளோ உடையவராகி உலகுக்கு உதவுவார் என நம்பி எதிர்பார்க்க வேண்டாம் என்ற கருத்திலேயே 'அருள் கருதி அன்புடையராதல் பொருள் கருதி பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்' என்ற குறளை நம் முன்வைக்கிறார்.

இந்த அதிகாரத்தில் 'அளவு' என்னும் சொல்லை நான்கு குறட்பாக்களில் எடுத்தாளுகின்றார் வள்ளுவர். 'அளவின் கண் நின்றொழுகலாற்றார்', 'அளவென்னும் ஆற்றல்' அளவறிந்தார்', 'அளவல்ல செய்தாங்கே வீவர்' என்பன அவர் கொண்டன. இந்த அளவு என்பது வாழ்வில் அறத்தாறு வாழும் அளவைக்குறிக்கும் உயர்ந்த சொல்லாகப் பயன்படுத்தப் பெறுகின்றது. உயிர் பற்றிய உண்மைகளை அறிதல், நேர் நிற்றல், நன்னெறி, யாக்கை நிலையாமை, காணல், நல்ல நினைவு, தவம், செய்யத் தகு நெறி எனப் பலவகையில் உரையாசிரியர்கள் இதற்குப் பொருள் கொள்ளுகின்றனர். அனைத்தும் அவரவர் கொண்ட கருத்துக்கு அரண் செய்யும் வகையில் அமைகின்றன. எனினும் அவற்றுக்கு மேலாக அவரவர் உழைப்புக்கும் தகுதிக்கும் ஏற்ற அளவு எனக் கொள்ளல் பொருத்தமாகும். உழைப்பாளியோ, முதலாளியோ அன்றி வேறு துறையில் செயல்புரிகின்றவர்களோ அவரவர் செய்யும் தொழிலுக்கும் திறனுக்கும் முதலீட்டுக்கும் பிறவற்றிற்கும் ஏற்பப் பெறுகின்ற பொருளைத்தான் 'அளவு' எனக்குறித்தாரோ என நினைக்க வேண்டியுள்ளது. முதலாளி தன் முதலீட்டுக்கு அதிக அளவு பொருள் பெற விரும்புவதாலும் தொழிலாளி தன் செயல் திறனுக்கு அதிகமாகப் பொருள் பெறவிரும்புவதாலுமே

நாட்டிலே பல வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் நடைபெறுகின்றன. அண்மையில் கூட ஒரு வேலை நிறுத்த இடையீட்டில் 'உற்பத்திக்கு ஏற்ற ஊதிய அமைப்பு' என்ற வரையறையினை அரசாங்கம் கூறியதாக அறிகிறோம். எனவே அவரவர் அளவு நிலைக்கு மேற்பட்டுப் பொருளைப் பெறுதல் தவறு என அறிகிறோம். அந்த நிலையினை வன்மையாகக் கண்டிக்கும் வள்ளுவர் அதைத் 'திருடுதல்' என்றே குறிக்கின்றார். இந்த 'அளவின் கண் நின்றொழுகும்' ஆற்றலை மக்கள் அனைவரும் பெறின் நாட்டில் பல தொல்லைகள் தீருமன்றோ! வள்ளுவர் இதை ஆற்றல் என்கின்றார்; இதை ஒழுகலாறு எனக் குறிக்கின்றார். எனவே மக்கட் சமுதாயம் தன் உழைப்பு, திறன், உற்ற பொருட்செலவு பிறவற்றின் அடிப்படையில் பெருக்கும் பொருளை அவரவர் உழைப்பு, தகுதி, நிலை முதலியவற்றின் அடிப்படையில் பகிர்ந்து வாழும் ஆற்றலைப் பெறுவராயின், அந்த அளவறிந்த நெஞ்சத்து அறம் பெறுவாராயின் நாட்டில் களவு இல்லை; கதவடைப்பு இல்லை; பிற கொடுமைகளும் இல்லை. இந்த உண்மையினை வள்ளுவர் இங்கே துறவறத்தில் ஏற்றிக் கூறினாராயினும் உலக முழுதுக்கும் இது பொதுவாகும். அருளுடையராகி தங்கருமம் செய்யும் தன்மையாளராக, கூடா ஒழுக்கங்களை நீக்கி எல்லாரும் நல்ல கடமையாம் தவநெறியை மேற்கொண்டு கள்ளாமை போன்ற தீமைகளை நீக்கி 'நாட்டை நாடாக்க' வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. வள்ளுவரை வாழ்த்திப் போற்றும் நாம் அவர் காட்டிய வழி நின்று நாமும் வாழ்ந்து நானிலத்தையும் வாழவைப்போமாக! வாழ்க வள்ளுவர்! வளர்க அவர்தம் அறநெறி!!

# பயனில சொல்லாமை

ஒருவன் இரவில் படுக்கப்போகும் போது, அவன் அன்று செய்த செயல்களையும் பேசிய பேச்சுக்களையும் கோவையாக எண்ணிப் பார்ப்பானேயானால், அவனுக்கு ஓர் உண்மை புலப்படும். அன்றைய செயல்களுள் பல பயனற்றவை என அறிவான். பேச்சில் மிகப்பல பயனற்ற நிலையையும் உணர்வான். எங்கோ ஓரிருவர் இதற்கு விதிவிலக்காகலாம். ஆனால் சமுதாயத்தில் பெரும்பாலோர் இந்நிலையிலேயே உள்ளனர். அந்த நிலையில் அவர்கள் கடந்த கால வாழ்வினை எண்ணிப் பார்ப்பார்களானால், வாழ் நாளில் இவ்வளவும் வீணாயிற்றா என வியப்புறுவர். வள்ளுவர் அவ்வாறு எண்ணி, பயனுள்ளவற்றைப் பேசி, பயனுள்ள செயல் செய்வாரை 'உணர்வார்' எனக் காட்டுவர்.

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈனும்
வாளது உணர்வார் பெறின்'

என்பது அவர் வாக்கு. 'இன்றைப் பொழுது இனிமையாய்க் கழிந்தது—எப்படியோ கழிந்தது என எண்ணி மகிழ்வார் பலராதலின் 'உணர்வார் பெறின்' என்றார் என எழுதுவர் உரையாசிரியர்கள். எனவே ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் செயலையும் பேசும் பேச்சினையும் எண்ணி எண்ணிப் பார்த்து வாழ்நாள் கழிவதை எண்ணி, நற்செயல் புரிந்து, நல்லன பேசி, பயனுள்ள வகையில் காலத்தைக் கழிக்க வேண்டும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்நிலையில் வாழ்வாராயின் பின் உலகம் எவ்வளவு உயர்ந்து நிற்கும்!

எத்தனையோ அறநெறிகளும் சான்றோர் வாக்குகளும் படித்தும் கேட்டும் மனிதன் திருந்தாத நிலையில் எங்கோ சென்று கொண்டிருக்கிறான் என்பதைத்தானே நாட்டு நடப்பு காட்டுகிறது. இதனால்தான் வள்ளுவர் 'பயனில சொல்லாமை' என்றே ஓர் அதிகாரம் அமைத்துள்ளார்.

அவ்வாறு சொல்லுவது சான்றோர் நெறிக்கு—அறநெறிக்கு மாறுபட்ட ஒன்று என அவர் பத்துக் குறட்பாக்களில் விளக்குகிறார். பயனில்லாத சொல்லைச் சொல்லி மகிழ்ந்து தன் நேரத்தினையும் பிறர் நேரத்தினையும் வீணடிப்பவனை மகன் எனவே கூறவேண்டாம்; மனிதன் எனவே மதிக்க வேண்டாம் எனவும் அவனைப் பதருக்குச் சமமாக ஒதுக்க வேண்டும் எனவும் கூறுகின்றார்.

'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்' (196)

என்பது அவர் வாக்கு.

பெறுதற்கரிய மானுடப் பிறவியினை—ஔவையார் 'அரிதரிது மானுடராதல் அரிது' என்று கூறியபடி பெற்ற மனிதப் பிறவியினைப் பயனுள்ள செய்து பயனுள்ளன பேசி பயனுள்ளன நினைத்துப் பாதுகாக்க வேண்டாமா! முடிந்தால் நல்ல பயனுள்ளவற்றைப் பேசு, நினை, செய்; முடியா விட்டால் பயனற்றன பேசாதே—செய்யாதே—நினையாதே என்ற கருத்தினையே 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற சங்ககால அடிகள் நமக்கு நினைவுறுத்துகின்றன.

வள்ளுவர் இன்னும் ஒருபடி மேலே சென்று,

'நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று (197)

என்கிறார். சான்றோர் எல்லை கடவாதவர்கள். தக்கன செய்பவர்கள். எனினும் தேவை நேரின்—தமக்காக இன்றேனும் சமுதாய வாழ்வுக்காக நயனில சொல்ல நேரினும் நேரிடலாம். ஆனால் அச்சான்றோர் பயனில சொல்லுதல் கூடாது—அறவே கூடாது என்கிறார். எனவே இப்பயனில சொல்லுதலைப் பெரிய மறமாகவன்றோ வள்ளுவர் காட்டு

கிறார். சான்றோர் இதை எண்ணிப் பார்க்கவும் கூடாது என்பது அவர் கருத்து.

மனிதனுடைய வாழ்வு யாவும் எண்ணம், சொல், செயல் என்ற மூன்றிலேயே அடங்குகின்றன. இம்மூன்றும் நல்லன வாக—பயன் உள்ளனவாக—மெய்உடையனவாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே, நம் முன்னோர்கள் ஆய்ந்து, அறிந்து, உற்று, உணர்ந்து உள்மெய்—வாய்மெய்—மெய்ம்மெய் (உண்மை, வாய்மை, மெய்ம்மை) என மூன்று சொற்களைக் கண்டு வைத்தார்கள். வடமொழிவாணர் இதையே 'திரி கரண சுத்தி' என்பர். எனவே எவ்விடத்தும் எந்நிலையிலும் பயனுள்ள நல்லனவற்றையே பேச வேண்டும்.

எனவே மனிதராகப் பிறந்த நாம் நாடு வாழ, நானிலம் வாழ, சமுதாயம் வாழ, வையம் இன்பில் திளைக்க இச்சான்றோர் காட்டிய வழியினைப் பின்பற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். வள்ளுவர் காலத்திலிருந்தே—ஏன்—அதற்கு முன்பிருந்தே சான்றோர்கள் இந்த இன்றியமை யாத—அடிப்படையான உண்மையினை வற்புறுத்தி வந்துள் ளனர். ஆனால், மனிதன் மனிதனாகத் திருந்தவில்லையே. ஆறறிவு பெற்றவர்களாகிய நாம் 'மக்கட் பதடி' யாகாது மனிதனாக வாழ, இந்தச் சாதாரணமான—அடிப்படை உண்மையை உணர்ந்தால் உய்தி உண்டு. இது கடினமானது மன்று. சான்றோர் இதைச்செய் அதைச்செய் என்று எதையும் வற்புறுத்தவில்லை. 'பயனில சொல் பேசாதே' என்று தான் சான்றோர் சொல்லுகிறார்கள். இந்த எளிய செயலை மேற்கொள்ள முடியாதா! முயலலாம். முயன்றால் வெற்றி பெறலாம். வெற்றி பெற்றால் வையம் வாழும்—வளம் பெருகும்—முயல்வோமாக!

# புறங்கூறாமை

**தே**வர்கள் இமையாக் கண்களை உடையவர்கள். 'இமையா நாடு' என்றே அவர்கள் நாட்டுக்குப் பெயர். அதற்குக் காரணங்கள் புராண மரபில் எத்தனையோ இருக்கலாம். ஆனாலும் தமிழ்ப் புலவர் அதற்கு ஒரு நல்ல காரணத்தைக் கண்டுபிடித்தார்.

'முன்னின்று ஒருவர் முகத்தினும் வாயினும்
கல்நின்று உருகக் கலந்துரைத்து—பின்னின்று
இழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திரையோ நின்ற நிலை'

என்பது அவர் வாக்கு. ஆம்! உலகில் மக்கள் ஒருவரை முன் நிறுத்தி 'இந்திரனே சந்திரனே' 'வீரனே சூரனே' எனப் பலவாறு புகழ்ந்து பேசிவிட்டு அவன் அப்பால் சென்றதும் அவனைப் பழித்துரைப்பதைக் காண்கிறோமல்லவா! அவ்வாறு பேசுபவர்களை இழிவுபடுத்தும் வகையில் 'சான்றோர்' என்கிறார் புலவர். சான்றாண்மை மிக்க பண்பாளர் கொளக் கருதாத கொடிய இச்செயலைச் செய்பவரை 'இழித்துரைக்கும் சான்றோர்' என இழிவுபடுத்துகிறார். ஒன்றும் தெரியாதவனை 'அவன் மகாமேதாவி' என்று மட்டம் தட்டும் மரபு நாட்டில் உண்டல்லவா! அதுபோல!

தேவர்கள் இமையா நிலைக்கு இவர் காட்டும் காரணமாக வைத்து முன்னொன்றும் புறமொன்றும் பேசுவார் நிலையினையே புலவர் சுட்டுகிறார். ஆம்! தேவர்கள் இமைத்தால் அந்த இமைப்பொழுதில் இக்கயவர்கள் என்னென்ன பேசுவார்களோ எனக் கருதியே இமையாது—கண்கொட்டாது—மிக விழிப்பாக உள்ளனர் என்கிறார். இதனால் புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழும் மாக்களின் மதியற்ற செயலைப் புலவர் நன்கு புலப்படுத்தி விட்டார். வள்ளுவர் இக்கொடுமையினை விளக்கவே 'புறம் கூறாமை' என்ற ஓர் அதிகாரமே அமைத்து, பத்துக் குறட்பாக்களில் அதன் கொடுமையினை நன்கு எடுத்துக் காட்டுகிறார்.

புறங்கூறி வாழ்பவன் வாழ்வதைக் காட்டிலும் அவன் இறப்பதே மேல் என்பது அவர் கருத்து. அதுவே அறம் காட்டும் நலமெலாம் தரும் என்கிறார்.

'புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலில் சாதல்
அறம் கூறும் ஆக்கம் தரும்' (183)

என்பது அவர் வாக்கு. இதற்கு உரை கூற வந்த பரிமேலழகர் 'பிறரைக் காணாத வழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கு இனியவனாகப் பொய்த்து ஒருவன் உயிர் வாழ்தலின் அது செய்யாது சாதல், அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்' என்று கூறுவர். ஆயினும், அறநூல் தரும் ஆக்கம் அவனுக்கு மட்டுமன்றி, உலகுக்கே அந்த ஆக்கம் பொருந்துவதாகும். ஆம்! அத்தகைய பொய்மையாளரை இல்லாத நாடு நலம் பெறுமல்லவா! இதனால் வள்ளுவர் வாழ்வாங்கு வாழும் மக்களினத்துக்கு இவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவழி காட்டுகிறார். இத்தகைய கயவர்கள் பின் எத்தகைய துன்பமும் இழைக்கும் ஒன்னலராவர் என்பது தெளிவு. இவர்கள் முன்னே தொழுவர்; பின்னே உயிர் மாய்க்கவும் அஞ்சமாட்டார்கள். இதைக் கருதித்தான் போலும் பின்மற்றோரிடத்தில் 'தொழுதகையுள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து' என்கிறார். எனவே மக்கள் இத்தகைய புறங்கூற்றாளரைக் கண்டறிந்து விலகக் கடமைப்பட்டவராவர்.

ஒருவன் வேண்டாதவனாயின் அவனை முன்னே வைத்து எவ்வளவு பழித்துரைத்தாலும் தவறில்லை. அவன் தன்னிலும் மாறுபட்டவன் என அறிந்து, அவனும் எச்சரிக்கையாக இருப்பதோடு மாறுபட்டவன் இப்படித்தானே இருப்பான் என்று அமைதியும் கொள்வான். ஆனால் மாறாக முன் ஒன்றும் பின் ஒன்றும் பேசுபவனானால் அவனை எவ்வாறு மனிதனாக ஏற்றுக் கொள்ள முடியும்? வள்ளுவர் இதனையே,

'கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்' (184)

என்கிறார். இவ்வாறு முன் பின்னாக நினைத்து—பேசி—செயலாற்றும் நிலையில்தான் இன்று மனித சமுதாயம் செல்லுகின்றது. பிற உயிரினங்களுக்கு இத்தகைய கொடுநிலைகள் இல்லை எனலாம்.

இந்தக் கொடுமையைப் போக்க வழி இல்லையா! ஏன் இல்லை! வள்ளுவரே இதற்கு வழி காட்டுகிறார். புறங்கூறாமையின் கடைசிக் குறளில் மனிதனுக்கு மட்டுமல்ல எல்லா உயிர்க்குமே இக்கொடுமை நீங்கின் தீதில்லை என்கின்றார். அதற்கு அவர் காட்டும் வழி ஒன்றே. 'தம்பி! பிறரைப் பின் நின்று குற்றம் கூறுகின்றாயே! சற்றுநில்; நினைத்துப்பார்! நீ செய்த குற்றங்களை நினை. அப்போது நீ செய்யும் தவறு உனக்குத் தெரியும். உன் கண்ணில் இருக்கும் உத்தரத்தை எண்ணாது மற்றவன் கண்ணில் இருக்கும் துரும்பைப் பற்றிக் குறை கூறுகிறாயே; தெரிந்து தெளிவாய். தெரிந்த பின் இப்புறங்கூறும் புன்மை உன்னை விட்டு ஒழியும், உயிர்களும் தீமையற்று வாழும்' என்கிறார். ஆம்! தீமை அற்ற மனிதன் ஒருவருமில்லை. எனவே தன் பிழை நினைப்பின்—தன் தவறுகளை உணரின், பிறரைப் பழிகூற—புறங்கூற நினைக்க முடியாது.

'ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு' (190)

என்ற குறளை நாம் வாழ்விடைக் கொண்டு வழுவாது நடப்போமாயின் நிலை பெற்ற உயிர்களுக்கு நிலைத்த இன்பமே கொழிக்கும் என்பது உறுதி. எனவே நாம் வள்ளுவர் வாய்மொழி வழி ஒழுகி வையத்தை வாழ வைக்க முயல்வோமாக!

# சுற்றம் பேணுதல்

வள்ளுவர் வையம் வாழ வழிகாட்டியர்! மனிதன் மனிதனாக வழி வகுத்தவர். அவர் வகுத்த அறிவியலுரம் வாழ்வியலும் மக்களால் கைக் கொள்ளப் பெறத் தக்கன, அவற்றுள் ஒன்றே 'சுற்றம் பேணுதல்',

சுற்றம் பேணுதல் என்ற இரு சொற்களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். 'சுற்றம் தழால்' என்ற ஓர் அதிகாரமும் குறளில் உள்ளது. இந்த அதிகாரம் வைப்பு முறையில் அரசியலோடு சார்த்தப் பெற்றுள்ளது (53). இதில் கூறப் பெறும் கருத்துக்கள்யாவும் அரசர்களுக்கும் அரசியல் தலைவர் களுக்கும் மட்டும் பொருந்துவன என எண்ணலாகாது. வள்ளுவர் நல்ல அறநெறிகளைச் சிறப்பாக ஒருவரை முன் னிறுத்திக் கூறி அவர் வழியே அந்த நெறியை உலகச் சமுதா யத்துக்கு உரிமையாக்க நினைக்கின்றவர். எனவே வள்ளுவர் காட்டும் அறவாழ்வு—அதிகார முறையிலும் இயல் முறை யிலும் ஒருவகையாருக்கு உரியதாகப் பகுக்கப்பெறினும்— அது மக்கள் சமுதாயம் அனைத்துக்குமே ஏற்புடைத்து எனக் கொள்ளல் வேண்டும்.

சுற்றம் என்ற சொல்லினை வள்ளுவர் இந்த அரசியல் அதிகாரத்தில் மட்டும் எடுத்தாளவில்லை. மேலும் சுற்றத் தைக் குறிக்க வேறு பல சொற்களையும் பலவிடங்களில் பயன் படுத்துகிறார். ஒக்கல் (43) கேளிர் (187-615) போன்ற சொற் களையும் அவர் எடுத்தாளுகிறார். இவற்றின் அடிப்படை அனைத்தும் ஒருவரை ஒருவர் சூழ்ந்து நின்று, ஒருவருக் கொருவர் உற்றுழி உதவி, உதட்டால் அன்றி உளத்தால் அன்புபூண்டு வாழும் தூய்மை நெறியினை உணர்த்தவே அமைகின்றன. 'சுற்றமாச் சுற்றும் உலகு' (1025) என்ற குடி செயல்வகை என்ற அதிகாரத்தில் 'சூழ்ந்து கொள்ளப்படும்' என்ற பொருளில் 'சுற்றும்' என்ற சொல்லைக் குறிக்கிறார்,

எனவே நம்மைச் சூழ்ந்து உற்றுழி உதவும் தக்காரே சுற்றமா வர் என்பது வள்ளுவர் கருத்தாக அமைகின்றது. வெறும் பிறப்பால் மட்டுமின்றி, செயல்வகையால்—உளம் ஒத்து வாழும் வகையால்—குற்றமற்ற இணக்கத்தால் சுற்றம் அமையும் என்பது வள்ளுவர் கருத்து. இந்த உண்மை யினையே எல்லாச்சமயங்களும் உலகப் பேரிலக்கியங்களும் நமக்கு உணர்த்துகின்றன.

'பேணுதல்' என்ற சொல் உயர்ந்த நிலையில் போற்றப் பெறுவது. வள்ளுவர் இச் சொல்லை, 'விரும்பிக் கொள்ளப் படும்' என்ற பொருளில் பகைமாட்சி என்னும் அதிகாரத்தில் 'பேணப்படும்' (866) எனக் கொள்ளுகிறார். மேலும் விரும் பாதவரைப் பேணலர் (1016) என்றும், இகழும் நிலையினைப் 'பேணா' (924) என்றும், விரும்பாமையைப் 'பேணாது' என்றும் (163, 902,1178) பகைமையைப் 'பேணாமை' (866) என்றும், அவமதித்தலைப் 'பேணாது' (892, 1283) என்றும் பல பொருள்களில் குறிக்கிறார். அனைத்தின் அடிப்படை களும் உளத்தால் ஒட்டா ஒன்றினையே குறிப்பதை அறிய லாம். பொருளைப் பொதிந்து போற்றலைப் 'பேணுதல்' என்பது உலகவழக்கு. சுற்றமும் அவ்வாறு பேணத்தக்கதே. இடையில் தோன்றும் இன்னல்களோ, இணக்கமற்ற செயல் களோ, பிறசூழ்ச்சிகளோ, பொருளாதார ஏற்றத்தாழ்வு முதலியனவோ இச்சுற்ற உணர்வை அசைக்காது காத்தல் வேண்டும். அதனாலேயே 'பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள' என அச்சுற்றத்தின் உயர்வினை, 'உள' என்னும் பன்மை வினையால் உயர்த்திக் காட்டித் தம் 'சுற்றம் தழால்' என்ற அதிகாரத்தைத் தொடங்குகிறார்.

வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும் துன்பிலும் இணைந்து, உளம் வேறுபடாது ஒன்றிக் கலந்து உறவாடும்

நல்ல வாழ்வையே சுற்றத்தார் கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து, அதுதானே வையத்தை வாழவைப்பதற்கு ஏற்ற ஒரே நெறி. அனைவரும் உளம் ஒன்றி, ஒருவரை ஒருவர்— ஒருநாட்டினை ஒருநாடு— மாறுபாட்டுடன் நோக்காது வாழின் உலகில் எல்லா இன்பமும் இயையுமன்றோ! இந்த உண்மையினைத்தான் வள்ளுவர், அனைத்தும் அரசியலால் ஆக்கம் பெறுகின்ற காரணத்தால், இச்'சுற்றம் தழால்' என்ற அதிகாரத்தினை அரசியலில் அமைத்து, அனைவருமே-அனைத்துஉயிர்களுமே ஒன்றிவாழும் அறநெறியை உணர்த்துகிறார். அவர் உணர்த்தும் உண்மைகளையும் அவ்வுண்மைகளைப் போற்றும் இலக்கிய வாழ்வியல் மரபுகளையும் தொடர்ந்து காண்போம்.

மனித வாழ்வு ஒழுங்கு வழியில் செல்வதன்று; மேடுபள்ளம் நிறைந்தது. செல்வம் பெறின் ஏமாப்பதும் இன்றேல் சோக முறுவதும் வாழ்க்கையாகிறது. சோக நிலையில் தாழ்வுற்று நிற்கும் மனித உள்ளத்தைத் தேற்றும் மருந்தாக அமைபவரே சுற்றத்தார்,

'ஆலிலைபூவுங் காயும் அளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சியெல்லாம் தன்குடியென்றே வாழும்
வாலிபர் வந்து கூடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனால் அங்குவந்திருப்பார் உண்டோ'

என்ற பழம்பாட்டின் படி, உலகில், செல்வம் உண்டான போது பலர் உறவு கொண்டாடிச் சூழ்வதும், இன்றேல் நெருங்கிய உறவினரும் கைவிட்டு நெடுந்தூரம் செல்வதும் இயல்பாக அமைவதைக் காண்கிறோம். இந்த அவல நிலையைக் கண்டுதான் வள்ளுவர் நல்ல சுற்றத்தாரின் இலக்கணத்தைச் காட்டும் முகத்தான், 'பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள' (521) என முதல் பாட்டாலேயே விளக்குகிறார்,

இனி, செல்வம் பெற்ற மக்களுள் சிலரும் பழைமையை மறப்பது உண்டு அன்றோ! அதையும் தவறு எனக் காட்டுவர் வள்ளுவர். 'செல்வத்துப் பயனே சுற்றம் தழுவல்' என்பது வள்ளுவர் உள்ளக் கிடக்கை. இன்று நாட்டில் உள்ள செல்வர் அனைவரும் தத்தம் சுற்றத்தாரைத் தழுவி, அவர் தம் முகம் நோக்கி, அவர்தம் வாழ்வினையும் மலர வைப்பார் களாயின் நாட்டில் எத்தகைய கொடுமையும் இல்லையாகுமே. 'சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயன்' (524) என்ற குறளில் 'சுற்றப்பட ஒழுகல்' என்ற ஒழுகலாற்றை வற்புறுத்துகின்றார் அவர். செல்வம் பெற்ற ஒருவன் 'கண்டும் காணாது கேட்டும் கேளாது' வாழும் அவல வாழ்வு வையத்தை வாட வைப்பதாகும். உலகினை உண்பிக்கவே தமக்குச் செல்வம் வந்துள்ளது என எண்ணி எல்லாருக்கும் கொடுக்கும் உயர் பண்பு போற்றற்குரியது. அந்த நிலையில் இன்றேனும் ஒவ்வொரு செல்வரும் தத்தம் சுற்றத்தாரையாயினும் ஓம்புவராயின் அதுவே வையவாழ்வை வளமுடையதாக்கும் என உணர்த்துகிறார் வள்ளுவர்.

மேலும், அச்சுற்றத்தாரை, செல்வர்கள் ஓம்பின் அவர் தம் செல்வமே அதிகமாக வளரும் நிலையினைப் பெறுவர் என்பதையும் வள்ளுவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. அதற்குக் காக்கையைத் துணைக்கு அழைக்கிறார். யாரோ இட்ட சோறு தன் கால் வயிற்றுக்கும் காணா நிலையிலும், 'கா, கா, கா,' எனக் கரைந்து பிறகாக்கைகளையும் கூவி அழைத்துக் கூடி உண்பதைக் காணும் மனிதன், ஏனோ அந்த உணர்வைத்தான் பெறவில்லையே என நைகின்றது அவர் நல்ல உள்ளம். அதே வேளையில், அப்பண்பால், அவ்வாறு இறைக்கும் கிணறாகிய அந்தச் செல்வக் கொடையாளி மேலும் மேலும் செல்வம் சுரக்கப்பெற்று வாழ்வான் என்ற உண்மையினையும் அவர் சுட்டுகிறார். 'காக்கை கரவா கரைந்துண்ணும், ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள' (527)

என்று ஈண்டும் 'உள' என்னும் பன்மைவினையின் வழியே கரவாவழிப் பெருகும் செல்வங்களையெல்லாம் குறிக்கின்றார். எனவே 'சுற்றம்பேணுதல்' என்ற உயர் ஒழுக்கமே யாவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதென்பதும் அதிலும் சிறப்பாக உயர்மட்டத்தில் வாழ்வாருக்கும் செல்வருக்கும் இது அவசியம் வேண்டப்படுவது என்பதும் தேற்றம்.

இந்த அதிகாரத்தை வள்ளுவர் அரசியலோடு ஏன் சார்த்தினார்? அல்லது பிறரால் ஏன் சார்த்தப் பெற்றது? செல்வத்தில் உயர்ந்தவன் அரசன். அன்றி அரசியல் நிலையில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள். அவர்கள் மனம் வைத்தால் நாட்டில் நலம் பல பெருகும். சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பிற உயர் அலுவலர்களும் இந்த அடிப்படையிலே, பிறப்பால் வரும் சுற்றத்தைமட்டுமன்றி, வையமாகிய சுற்றத்தையே தழுவிச் செல்வார்களாயின் நாடு நாடாகும்.

முன்னரே கண்டபடி சுற்றம் பிறப்பால் வருவதன்று. அதிலும் அரசருக்கோ அன்றி அரசியல் தலைவர்களுக்கோ அவர்தம் ஆணையின் கீழ்ப்பட்ட நாட்டில் உள்ள அனைவரும்—அனைத்தும் சுற்றமேயாம். அவர்களுக்கும் 'உற்றார் மற்றார்' என்ற வேறுபாடு கூடாது. அவர்கள் அனைவரையும் சுற்றமாக ஓம்பி நல்லது ஆற்ற வேண்டும் என்று வாழ்வின் உயர்மட்டத்தில் உள்ளாரை மேல்வரிச் சட்டமாகக் காட்டி, வள்ளுவர், வையத்துள் வாழும் ஒவ்வொருவரும் சுற்றம் பேண வேண்டிய இன்றியமையா வாழ்க்கை நெறியை வற்புறுத்துகின்றார். இனி அவர் வழியே இச்சுற்றம் பேணும் நெறியின் இலக்கிய மரபினை எண்ணிக் காணலாம்.

'காக்கை குருவி எங்கள் சாதி. நீர் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' எனப் பரந்த பார்வையில் தன் சுற்றத்தை ஏங்கும் கண்டான் பாரதி. நல்ல உள்ளம்—பண்பட்ட

உள்ளம்—பரந்த உள்ளம் இவ்வாறு உலகெங்கணும் வாழும் உயிரினத்தைத் தன் சுற்றமாகக் கொள்ளும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சங்ககாலப் புலவன் தன் பரந்த உள்ளத்தைக் காட்டவில்லையா! கேளிர் என்ற சொல்லை வள்ளுவர், நண்பர், சுற்றத்தார் (187, 615) என்ற பொருளிலும் காதலர் (1267) என்ற பொருளிலும் கையாளுகிறார். எனவே வாழ்விடை வள்ளுவர் காண நினைத்த சுற்றத்தின் எல்லை பரந்த ஒன்று.

வாடிய முல்லைக்குத் தேர்கொடுத்தான் பாரி எனக் காண்கிறோம். வருந்திய மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன் எனப் படிக்கிறோம். இவையெல்லாம் சுற்றத்தின் எல்லையைக் குறிப்பனவே. ஆறறிவு படைத்த மனித மனம் 'எவ்வுயிரும் தன்னுயிராகக்' கருதும் தன்மையில் வாழ்ந்தால் வையம் வாழ்வு பெறும். அதனாலேயே வள்ளுவர் சுற்றம் தழுவி வாழ வேண்டிய நிலைக்கு, நாம் முன்னரே கண்டபடி காக்கையை எடுத்துக் காட்டி விளக்குகிறார். உவமை இலக்கணப்படி, தொல்காப்பியர் நெறியில், உவமானமாகவரும் பொருள் உயர்ந்த தன்றோ! எனவே தான், சுற்றம் பேணாத மனிதனைக் காட்டிலும் சுற்றம் பேணும் காக்கை மேல் என்று காட்டி, அத்தகைய சுற்றம் பேணும் நல்லவனை எல்லாச் செல்வமும் வையத்து வந்தடையும் என வாழ்வியலையும் சுட்டுகிறார்.

சுற்றம் பிறப்பால் வருவதன்று; எச்சமயத்தோர் சொல்லும் இதுவே. ஒருவனின் அயலவனைச் சுட்டிக்காட்ட நினைத்த இயேசு பெருமான் தந்த விளக்கம் இங்கே நினைவு கூர்தற்குரியதன்றோ! 'உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும், அம்மருந்து போல்வரும் உண்டு' என்ற மூதாட்டியின் வாக்கு முன்னிற்கின்றதே! இவ்வாறு பிறப்பால் அன்றி, உணர்வால்—பண்பால்—உயர் நோக்கத்

தால் காணும் பரந்துபட்ட சுற்றத்தாரைப் போற்றிப் புரத்தலே வைய வாழ்வாகும். இந்த உண்மையினைக் கம்பர், கடவுளை மனிதனாகக் காட்டி, மனிதன் வாழ வேண்டிய பண்பினைக் காட்டும் முகத்தான் நன்கு விளக்குகிறாரன்றோ.

இராமன் தந்தை சொல் தட்டா நிலையில் காடு செல்கிறான். அங்கே அவனுக்குப் புதுப்புதுச் சுற்றத்தார் சேர்கின்றனர். கங்கை இருகரையுடைய குகன் அவனுக்குச் சுற்றமாகின்றான் — உடன்பிறப்பாளனாகின்றான். 'முன் புளம் ஒருநால்வேம் முடிவுளதென உன்னா அன்புள, இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்' என்று இராமனையே பேசவைக்கிறார் கம்பர். எங்கோபிறந்த வனவேடுவன் அரச குமாரனாகிய இராமனுக்குச் சுற்றமாகிறான். அடுத்து, மனித இனத்தினும் மாறுபட்ட குரங்கினத்தைச் சார்ந்த விலங்காகிய சுக்கிரீவன் சுற்றமாகிறான். பின், குணத்தால் வேறுபட்ட, மாற்றான் எனவே அனைவரும் மதித்த வீடணன் சுற்றமாகிறான். தசரதனை அவர்கள் தந்தை யாகவே இராமன் வாக்கில் காட்டுகிறார் கம்பர்.

'குகனோடும் ஐவரானோம் முன்புபின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவரானோம் எம்முழை அன்பின்வந்த
அகமனர் காதல்ஐய! நின்னொடும் எழுவரானோம்
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை'

என்று தான் காடுவந்தபின் சுற்றம் வளர்ந்ததை எண்ணி மகிழ்கின்றான் இராமன். அப்படியே சடாயு எனும் பறவை யினைச் சுற்றமாகக்கொண்டு அதன் இறுதிச் சடங்கை யெல்லாம் தானே மகனெனச் செய்து முடிக்கிறான்.

இவ்வாறு கம்பர் மட்டுமன்றி உலகம் வாழ இலக்கியம் கண்ட அனைவரும் சுற்றத்தின் பரந்த எல்லையினையும் அதைப் பேண வேண்டிய வாழ்வின் இன்றியமையா நெறியை யும் வள்ளுவர்தம் இலக்கண மரபுக்கு இலக்கியங்களாகக்

காட்டிச் செல்லுகின்றனர். எனவே உலகத்தை வாழ வைக்க நினைத்த வள்ளுவர் 'உலக உயிர்களையே சுற்றமாப்பேணும்' உயர்நிலையை உணர்த்தி அதன்வழி நம்மையெல்லாம் ஆற்றுப்படுத்துகின்றார். 'எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி இரங்கவும் நீ தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே' என்று தாயுமானவர் இறைவனை வேண்டியபடி, வள்ளுவர் காட்டும் வாழ்வைப் பின்பற்றும் நாம், பரந்த சுற்றத்தினைப் பண்புடன் பேணி வாழின் வையம் வளம் பெறும். அத்தகைய நல்ல பண்பு நாட்டிலும் உலகிலும் மலர்வதாக'

# உழவு

'ஏர்' என்ற சொல் தமிழில் சிறந்த பொருள்களைத் தருகின்றது. இது அழகு, தோற்றப்பொலிவு, எழுச்சி, நன்மை முதலிய பல பொருள்களைத் தருவதோடு, கலப்பை என்ற பொருளையும் அக்கலப்பையால் செய்யப்பெறும் உழவுத் தொழிலையும் குறிக்கிறது. அப்படியே உழவைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய வேளாண்மை என்பதும் கொடை, உபகாரம், சத்தியம் போன்ற பொருள்களில் தமிழில் வழங்குவதைக் காண்கிறோம். எனவே, இவ்வுழவுத் தொழில் ஏரால் நடைபெறுகின்றதென்பதும் அது நாட்டுக்கு அழகினையும் தொழிற் பொலிவினையும் நல்கி நலம் பெற்று மக்கள் எழுச்சியுற உதவுகின்றதென்பதும் அத்தொழில் மற்றவர்களுக்கு உபகாரம் செய்யும் கொடைத் தன்மை உடையதாய வாய்ப்பைத் தவறாது நிற்கச் செய்யப்பெறுவ தென்பதும் நன்கு தெளிவாகின்றது. ஆம்! உலகம் நேரிய வழியில் எழுச்சி பெற்று நலமுற்று வாழ வேண்டுமாயின்

அவ்வுலகு இவ்வுழவுத் தொழிலைப் போற்றக் கடமை பெற்றுள்ளது என்பது அன்றும் இன்றும் என்றும் தெளிவாக விளங்குகின்ற உண்மையாகும். அதனாலேயே வள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம். அதனால் உழன்றும் உழவே தலை' என்ற குறள் வழியே தன் உழவு என்னும் அதிகாரத்தை உலகின் முன் வைக்கிறார்.

உலகில் வாழும் மனிதன் மட்டுமன்றி எல்லா உயிர்களுமே ஏதேனும் ஒன்றை உண்டே உயிர்வாழ வேண்டியுள்ளது. ஓரறிவுயிராகிய மரம் முதலியன கூட அவற்றிற்கென அமைந்த உணவில்லையாயின் வாழாது பட்டு உலர்வதைக் காண் கிறோம், எனவே உணவு வாழ்வுக்கு இன்றியமையாதது. 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பன போன்ற தமிழ்த் தொடர்கள் பண்டு தொட்டே வழக்கத்தில் உள்ளன. யார் எந்தத் தொழிலைச் செய்தாலும் எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவர்கள் உணவு இன்றி வாழ்தல் இல்லை, அந்த உயிர் ஓம்பும் உணவைத் தருவது தான் உழவுத் தொழில். எனவே, உலகம் அத்தொழிலுக்கு ஆக்கமாகிய ஏரின்பின் சுற்றுவது என வள்ளுவர் கூறுவது எவ்வளவு பொருத்தமாகின்றது. ஆம்! இந்த நிலையினை உணர்ந்துதான் இவ்வுழவுத் தொழிலினைத் தலையாய தொழில் எனக் காட்டுகிறார் அவர். 'ஆற்றங்கரையின் மரமும், அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்—உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர், பழுதுண்டுவேறோர் பணிக்கு' என ஔவையாரும் உழவின் ஏற்றத்தைப் பாடிச் சென்றார். அவ்வுழவின் திறனையும் செயலையும் வையம் வாழ வள்ளுவர் வகுத்துரைக்கின்றார்.

உழவுத் தொழில் செய்வது கடினம். வெயிலிலும் மழையிலும் பட்டுழன்று பாடுபட வேண்டும். நிழலில் மின்

ஒளியிலும் காற்றிலும் இருந்து பணி செய்வதன்று இது. எனவே பலர் உழவு என்றாலே அஞ்சி ஓடுகின்றனர். ஆனால் நிலத்தில் உழுதுபயிர் செய்யும் உழவர்களோ பொறுமை யோடு எல்லா இன்னல்களையும் ஏற்றுப் பாடுபட்டு விளைத்துத் தாமும் உண்பதோடு, அவ்வுழவுக்கு ஆற்றாது ஓடுகின்றவர்களுக்கும் உணவு இட்டு உலகையே உண்பிக்கும் தாயின் நிலையில் வாழ்கின்றனர். மேலும் உழவர் யாருக்கும் அடிமையாகாது அரசர்போல் வாழ்ந்து நிற்க, மற்றவர் யாருக் கேனும் அடிமைப்பட்டு அவர்தம் சொல்லுக்கு அஞ்சி வாழ வேண்டியவர்தாம் என்ற உண்மையினை வள்ளுவர், ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழு துண்டுபின் செல்பவர்’ எனக் காட்டுகிறார். இதில் மற்றவர் களை மக்களாகவே காட்டாது அஃறிணைக் குறிப்பால் ‘மற்றெல்லாம்’ எனவே சுட்டுகிறார். மேலும் பிறரைத் தொழுவதோடு மட்டுமன்றி அவர்கள் இவ்வுழவாளியையும் தொழ வேண்டியவர்கள் என்ற உண்மையினையும் உணர்த்து கிறார்.

மேலும் இவ்வுழவர் என்றென்றும் பிறரிடம் கை நீட்டி எதையும் இரவாது வாழும் உயர் நிலையில் உள்ளவர் என்பதையும் தம்மிடம் வந்து இரப்பவர்க்கு இல்லை யென்னாது ஈயும் வேளாண்மை மிக்கவர் என்பதையும் வள்ளுவர் காட்டத்தவறவில்லை. ‘இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது கைசெய்தூண் மாலையவர்’ என்பது அவர் வாக்கு.

இவ்வாறு யாரையும் தொழும் அடிமை இல்லாதவராய் இரவாது, இரப்பார்க்கு ஈந்து வாழும் உழவர் தனி வாழ்வில் மட்டுமன்றிச் சமுதாய வாழ்விலும் ஆட்சி நெறியிலும் உயரிடம் பெற்றவர் என்பதையும் நாம் உணர வேண்டும். நாளை அதுபற்றிக் காண்போம்.

நாடாளும் மன்னனை வாழ்த்த நினைத்த ஔவையார் 'வரப் புயர' என வாழ்த்தினார். ஆம்! ஊர் தோறும் வரப்பு உயர்ந்து நீர்தங்கி நெல்லும் பிறதானியங்களும் விளைந்தால் தான் நாடு நாடாகும். அதனாலேயே அன்று உழவராம் வேளாளர் அரசருக்கு முடிசூட்டும் அரும் செயலைச் செய்தனர். அரசன் வாழ வேண்டுமாயின் உழவுத் தொழில் சிறக்க வேண்டும். இந்த நியதி முடியாட்சிக்கு மட்டுமன்றி குடியாட்சிக்கும் பொருந்துவதாகும். அதனாலேயே இன்றைய பாரதப் பிரதமர் தம்முதல் வானொலிப் பேச்சில் கிராமங் களின் வளர்ச்சியைப் பற்றியும் அக்கிராமங்களின் உழவு, அதைச் சார்ந்த சிறு தொழில்களின் வளர்ச்சியைப் பற்றியும் கூறி அவையே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப் படை என வற்புறுத்தினார் (Huidu 5-4-77). வள்ளுவர் இந்த உண்மையினைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறார்.

உழவுத் தொழில் செம்மையாக நடைபெற்றால்தான் நாட்டில் யாவரும் தமக்கு வேண்டிய உணவினைப் பெற்று, தத்தம் தொழில்களைக் குறைவின்றிச் செய்து உயரமுடியும். எத்துணைச் செல்வம் பெற்றவரும் உணவு இல்லையாயின் என் செய்வர்? அப்படியே எல்லாவற்றையும் துறந்து வாழ் கின்றோம் என்ற துறவியருக்கும் உணவின்றி உய்வில்லை. பாரனைத்தும் பொய்யெனவே துறந்த பட்டினத்தடிகள் போன்ற பலர் உணவினைப்பற்றி எண்ணி 'ஊரெலாம் அட்ட சோறு நம்மதே' என உணர்ந்து பாடுகின்றனர் அன்றோ! எனவே நாடாளும் மன்னனாயினும் மற்றவராயினும் காடு நடந்து கடுந்தவம் புரிவராயினும் இவ்வுழவின்பின் நின்று, இவ்வுழவர் தரும் உணவுக்குக் காத்திருக்க வேண்டியவரே யாவர். எனவேதான் இளங்கோவடிகள் இவ்வுழவரை, 'இப் போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப் போர்' எனக் காட்டுகிறார். வள்ளுவர் இந்த உண்மைகளை யெல்லாம் உள்ளடக்கி, 'உழவினார் கைமடங்கின் இல்லை.

விழைவதூஉம் விட்டே மென்பார்க்கும் நிலை' எனக் கூறிச் சென்றார். 'விழைவதூஉம்' என்பதற்கு யாவரும் விழையும் உணவு எனப் பரிமேலழகர் உரை கூறினும் இதற்கு இதனினும் மேலாய பொருள் கொள்ள வேண்டியுள்ளது. பேரின்ப வாழ்வு விழையும் பெருநிலை தொடங்கி—அரசியல் வாழ்வு விழையும் உயர்நிலை தொடங்கி—சமுதாயத்தில் வாழும் மக்களுக்கு—ஏன்?—உயிர்களுக்கு உண்டாகும் எல்லா விழைவு களுமே இதனால் கொள்ளப் பெறவேண்டும். உணவு இல்லை யாயின் உடல் தளரும்—தளரு நிலையில் தழைக்கும் உணர்வு எங்கே? எனவேதான் வள்ளுவர் உலகவிழைவு அனைத்துக்கும் சமுதாய இன்ப வாழ்வு அனைத்துக்கும் உழவே அடிப்படை எனக் காட்டுகின்றார்; அத்துடன் முற்றத்துறந்தார்க்கும் அவ்வுழவரே கதி எனச் சுட்டுகிறார். எனவே உழவின்றி உலகில்லையாம்.

வள்ளுவர் இதனினும் மேலாக அரசியல் நுணுக்கம் ஒன்றினையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. நாட்டில் உழவு சிறந்து உணவு மிகுந்து மக்கள் வேண்டிய தேவைகளைப் பெற்று வாழ வழிவகை செய்யும் எந்த அரசாங்கமும் நிலை பெற்றுவாழும் என்பது வரலாறு கண்ட உண்மை. குடியரசா யினும் முடியரசாயினும் இந்த உண்மையினை உணர்ந்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி, உழவினை உயர்த்தாவிடில் அந்த அரசுக்கு முடிவு என்பதே பொருள். வள்ளுவர் இதனினும் மேலொரு படி சென்று, நாட்டில் நல்ல உணவு விளைக்கும் உழவுத் தொழிலை ஓம்பும் அரசின் கீழ் உலகத்துப் பிற அரசுகளெல்லாம் வந்து அமையும் எனச் சுட்டுகிறார். நமக்கு உணவு அளித்ததன் மூலம் சில மேலை நாட்டு அரசுகள் பிறவகையில் ஆதிக்கம் செலுத்த முயன்றதை உலகு அறியுமே! இந்த நெறியில் இன்றேனும், உண்மையின் உழவு சிறந்து உணவு பெருகும் ஒருநாட்டு வளம் சிறக்க, பிற நாடுக ளெல்லாம் நாடி வந்து நலம் பெறும் வகையில் அந்நாடு

அமையும் என்றார் வள்ளுவர். 'பலகுடை நீழலும் தங் குடைக்கீழ்க் காண்பர், அலகுடை நீழலவர்' என்பது அவர் வாக்கு. ஆம்! தம் நாட்டு வளர்ச்சி மட்டுமன்றி உலகச் சமுதாய வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வழிகோலுவது இவ்வுழவேயாகும். இந்தக் குறளின்வழி, 'அலகுடை நீழல்' என்றதால் உழவால் விளையும் பயிரின் நிலையினையும் அதன் வளர்ச்சியையும் வளத்தையும் காட்டி, அந்த நல்ல நீழலில் வையம் வாழும் வகையினையும் வள்ளுவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

மேலும் இத்தகைய உயரிய உழவினை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அவ்வுழவருக்கும் நிலத்துக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதையும் வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். அவை பற்றி நாளை காண்போம்.

x x x x x

நாட்டில் பல விவசாயிகள் பாடுபட்டும் போதுமான பலன் இல்லை என வருந்துகின்றனர். காரணம் அவர்கள் வள்ளுவர் காட்டிய வழியைப் பின்பற்றாமையே. வள்ளுவர் சிறந்த அரசியல் அறிஞராவதோடு நல்ல உழவராகவும் இருந்திருக்க வேண்டும்; உழவின் நுணுக்கங்களை அவர் உணர்த்துகிறார். முதலில் நிலத்தை நன்கு உழவேண்டும்—பொடியாக்கி உழவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உழவு சிறக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விளையுள் பெருகும். இதைத்தான் வள்ளுவர் 'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும்' என்கின்றார். நல்ல உழவு இருப்பின் எருவும் வேண்டாம் என்பது அவர் கருத்து. உழவுக்கு மாடு இல்லை என்பாருக்கும் உழுங்காலத்து ஊர் சுற்றுவாருக்கும் யாரோ உழ எப்படியோ விவசாயம் செய்வாருக்கும் வள்ளுவர் இம்முதல் பாடத்தைக் கற்றுத் தருகிறார். உழவின் அடிப்படையே ஏர் உழுதலில்தான் உள்ளது.

அடுத்து அவர் காட்டுவது எரு விடுதல். நன்கு உழுதால் எருவும் வேண்டாம் எனச் சுட்டினும், அதையும் அதனோடு தொடர்புடைய பிறவற்றையும் அடுத்து விளக்குகிறார். ஏர் உழுதல், எருவிடல், நீர்ப்பாய்ச்சுதல், களைகட்டல், காத்தல் ஆகிய அனைத்தும் உழவுக்கு இன்றியமையாதன. 'ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு' என்பது அவர்வாக்கு. ஏர் உழுதல், எருவிடுதல் ஆகியவை போன்று களைகட்டல், நீர்விடல், காத்தல் ஆகியவையும் உழவுக்கு இன்றியமையாதன. இவை இன்றேல் விளைவு ஏது? எருவிடுதலைப் போன்று களையெடுத்தலும் பருவ மறிந்து நீர்ப்பாய்ச்சலும் செய்து, அனைத்துக்கு மேலாக நன்கு காத்தலைச் செய்வானாயின் விளையுள் பெருகும். எந்த வகையிலும் ஊறுவராமல் காத்தலே உழவின் இன்றியமை யாப் பணி. இந்தக் 'காப்பி'ல் மேலே கூறிய அனைத்தும் அடங்கும். இவ்வாறு வள்ளுவர் காட்டிய வழி அறிந்து விவசாயி பயிரிடுவானாயின் அவன் விளையுள் பத்தாக—நூறாகப் பெருகும் என்பதில் ஐயமில்லை. ஆட்சியாளர்கள் இந்தவகையில் விவசாயிகளை ஊக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இனி, அக்காப்பு எப்படி அமைய வேண்டும் எனக்காட்டும் வள்ளுவர் அந்நிலத்துக்கும் உடையவனுக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். இக்காலத்தில் பெரிதாகப் பேசப்பெறும் உழுவித்துவாழ்தல் (absent landlordism) வேலை இல்லாத் திண்டாட்டம் (unemployment) இரண்டையும் போக்கவும் வழிகாட்டுகிறார்.

நிலத்தை, உடையவனுடைய தலைவியாக்குகிறார். கொண்ட மனைவியை அண்டை ஆடவனிடம் ஒப்படைத்து வாழ யாரும் விரும்பார். அப்படியே நிலமும்; தானே பயிரிட வேண்டும். நாள்தொறும் சென்று காணவேண்டும். 'காணாப் பயிர் கால்வாசி' என்பது பழமொழி. வள்ளுவர்

அக்கால்வாசிக்கும் வழி இல்லை என்கிறார். உரியவன் நாள் தொறும் சென்றுகண்டு மேலே சொல்லிய தேவைகளைச் செய்யாவிடில், நிலப்பெண் ஊடுவாள். அதனால் மகப் பேறாகிய விளையுள் இல்லை. சமுதாயவளர்ச்சி இல்லை. 'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்' என்பது அவர் வாக்கு, அகப்பொருளுக்கே உரிய 'கிழவன்' 'இல்லாள்' என்ற சொற்களை எண்ணிப் பெய்கிறார் வள்ளுவர். 'ஊடிவிடும்' என்று அஃறிணைத் தன்மையைச் சுட்டி, ஒரு வேளை அதனால் உரியவன் சோம்புவானாயின் பயனின்றித் தானும் கெட்டு நாட்டையும் கெடுப்பான் என்று காட்டுகின்றார். உண்மையும் அதுதானே!

இனி, வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க— இல்லாத இடத்தில் புது இடங்களை உண்டாக்கத் தேவை இல்லை என்கிறார் வள்ளுவர். எல்லாரும் உழவை மேற் கொள்ள வேண்டுமெனவும் இதைச் செய்யாது 'அசைஇ' இருக்கும் மனிதனையும் சமூகத்தையும் கண்டு 'நிலப்பெண்' சிரிப்பாள் எனவும் சொல்லுகிறார். 'இலம் என்றசைஇ இருப்பாரைக் காணின். நிலம் என்னும் நல்லாள் நகும்' என்கிறார். எல்லாருக்கும் வாழ்வளிக்கும் அவளை 'நல்லாள்' எனவே சுட்டுகிறார். 'காணின்' என்ற சொல்லால் அத்தகைய வரைக் காணக் கூடாது என்கிறார். எனவே இன்றைய அரசாங்கம் வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க நாட்டுத் தரிசு நிலங்களைத் திருத்தி, அனைவரையும் உழவுத் தொழிலுக்கு அனுப்பவேண்டும். அதனால் நாட்டின் பல பிரச்சினைகள் நீங்கும். அதற்கு வேண்டுவது 'கங்கை 'காவிரி இணைப்பு'என்பன போன்ற ஆக்க வேலைகள்.

இவ்வாறு வள்ளுவர் உழவின் இன்றியமையாச் சிறப்பை யும் அதன் செயல் முறையையும் காட்டி, நாட்டின் உழவு சிறந்தால் நாடு நாடாகி உலகு அந்நாட்டைப் போற்றி

வணங்கும் என்பதைக் கூறி நம்மை உழவுத் தொழிலுக்கு ஆற்றுப்படுத்துகிறார். விவசாய நாடாகிய நம் பாரதம் அவர் வழி நடந்து நலமுறுவதாக!

# அறம்

உலகம் தோன்றிய நாள்தொட்டுப் பல்வேறு உயிரினங்கள் தோன்றியும் வளர்ந்தும் வாழ்ந்தும் மாறுபட்டும் நிலை பெற்று வருகின்றன. அவற்றில் 'சமுதாய விலங்கு' எனப் பேசப் பெறும் மனிதன் கூடிவாழும் வாழ்வில் அமைதிபெற வேண்டியவனாகின்றான். அந்தக் கூட்டுவாழ்வே அவனை உயர்ந்தவனாக்குகின்றது. இன்று உலகில் பலகோடி மக்கள் பல்வேறு இனத்தவராக—சமயத்தவராக—மொழியினராக—நாட்டவராக வாழ்ந்தாலும்கூட அவர்கள் அனைவரும் 'மனிதன்' என்ற ஒரே சொல்லாலேயே சுட்டப் பெறுகின்றனர். ஆம்! அம்மனிதன் மனிதனாக வாழவே அறநெறி வழிகாட்டுகின்றது.

'அறம்' என்றால் என்ன? 'அறம் செயவிரும்பு' என ஔவையார் இளம்பிள்ளைகளுக்கு அறிவுறுத்துகின்றார். முயன்றால் செய்; இல்லையானால் ஆசைப்பட்டாவது முயலலாம் அல்லவா! இந்தத் தொடக்கத்துடன் தன் 'ஆத்திசூடி'யினைத் தொடங்கும் அவர் அச்சிறு நூலினுள் அறங்கள் பலவற்றைச் சுட்டுகிறார். மனித சமுதாயம் நல் உணர்வோடு வாழ,வேண்டுமானால் அந்த அறநெறியினைப் பின்பற்றல் அவசியமாகும்.

நாடுதொறும் வீடுதொறும் போரும் பிணக்கும் பூசலும் உண்டாவதைக் காண்கிறோம். அதனால் பேரழிவுகளும் பிரிவுகளும் நிகழ்கின்றன. ஒன்றி வாழ வேண்டிய மனிதன்

பலவகையில் வேறுபடுகின்றான். இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? இப்பெரு நோயை உலகிலிருந்து நீக்க வழி இல்லையா? அறம் வழிகாட்ட வில்லையா? ஏன் காட்ட வில்லை! ஔவையாரே அடுத்த அடியாக 'ஆறுவது சினம்' என்கின்றார். இந்த ஓர் அறம் இருந்தாலே போதும். உலகம் சிறந்து வாழா. வள்ளுவர் இதனுடன் 'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட்க்கெடும் நோய், என்கின்றார். ஆம்! பேராசையும் கோபமாகிய சினமும் ஒன்றை ஒன்றாக எண்ணி மயங்கி நிற்கும் நிலையும் நீங்கின் உலகில் போர் ஏது? பொறாமை ஏது? பொல்லாக் கொடுமை ஏது?

இந்தக் கொடுமைக்கெல்லாம் இடம் கொடுப்பது மனம் அல்லவா? 'எண்பது கோடி நினைந்து எண்ணுவன' என்று கூறியபடி மனிதனின் மனம் எதை எதையோ எண்ணிப் பார்க்கிறது. அந்தப் பார்வை நல்லதாக அமையின் நாட்டுக்கு நல்லது; அல்லதாயின் அப்போதுதான் பஞ்சமகா பாதகங்கள் உருவாகின்றன. பொய்யும் பொறாமையும் வாதும் சூதும் வஞ்சகமும் வன்கண்மையும் உருவெடுத்து தனி மனிதனையும் சமுதாயத்தையும் நாட்டையும் உலகையும் நலிவுறுத்தும் நிலை தோன்றுகின்றது. எனவே அறம் மனததின்கண் அமைய வேண்டும். இதைத்தான் வள்ளுவர், 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' என அறுதி யிட்டுக் கூறுகிறார்.

இப்படிச் சொல்வதால் பிற அறங்கள் வேண்டாம் என்பது கருத்தன்று, 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று அவரே மற்றோர் இடத்தில் குறிக்கவில்லையா! பள்ளியில் பயிலும் மாணவன் கல்லூரியில் பயின்று பின் உயரிய 'டாக்டர்' பட்டமும் பெற்றபின் 'இதுதான் உயரிய கல்வி' என்று கூறினால் மற்றவை கல்வி அல்ல என்பதா பொருள்? இந்த மனத்துக்கண் மாசிலனாகிய உயரிய அறத்

துக்குப் பிற அறங்களெல்லாம் படிகளாக அமைகின்றன என்பதே வள்ளுவர் உள்ளக்கிடக்கை; உண்மையும் அதுதானே!

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவர் உறவு கலவாமை வேண்டும்' என்று வள்ளலார் இறைவனை ஏன் வேண்டினார்? உள்ளத்தில் கொடுமை வைத்து வெளியே நல்லவர் போலப் பேசுவர் உலகில் உள்ளார்கள், அவர்கள் தொடர்பு வேண்டாம் என நம்மை அவர் எச்சரிக்கிறார். திருவள்ளுவரும் 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என நினைப் பதும் குற்றம் என்கிறார். எனவே மனம் தூய்மையாக இருந்தால் மற்றவரை எக்காரணம் கொண்டு வெறுக்கவோ, தூற்றவோ, பழிவாங்கவோ, வேறு வகைக் கொடுமையால் அழிக்கவோ நினைக்க முடியாதல்லவா! அப்போது வீட்டிலும் நாட்டிலும் எத்தகைய கொடுமையும் நிலவாதே.

இன்று நாட்டிலே சாதியாலே, சமயத்தாலே, மொழி யாலே நடைபெறுகின்ற எத்தனையோ கொடுமைகளைக் காண்கின்றோம். இவையெல்லாம் மனத்தூய்மை இல்லாத தாலே அமைகின்றன. ஆம்! 'இந்திய நாட்டு மக்கள் நாம்' என்ற ஒருமை உணர்வும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உள்ளத் தெளிவும் இல்லாத காரணந்தானே இந்திய ஒற்றுமையினை —நாட்டு ஒருமைப்பாட்டைச் சிதைக்க நிற்கின்றது. எனவே நாடு ஒற்றுமையுள் திளைக்கவும் உலகம் உய்யவும் மனத்துக்கண் மாசு இல்லாத நல்லறத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். உலகம் உய்ய அந்த உளத் தூய்மையே தேவை. அந்த நல்உள்ளத்தையும் அதன்வழி நல்லுணர்வையும் வளர்ப்போமாக!

# அறிவு

உயிரினத்தின் உச்சியில் நிற்கின்ற மனிதனுக்குத் தனியான ஆறாவது அறிவு உண்டு. நல்லதன் நலனும் அல்லதன் தீமையும் எண்ணிப் பார்த்து, அல்லதை விலக்கி நல்லதைச் செய்யுமாறு அந்த அறிவு வழி காட்ட வேண்டும். அவ்வாறு காட்ட, அதன் வழியே ஒழுகும் மனிதன் உலகை நடத்திச் செல்வானானால், உலகம் செழிக்கும், இல்லையானால்?......

அறிவு அறத்தின் பாற்பட்டுச் செயலாற்ற வேண்டும். 'அறிமின் அறநெறி' என்று ஆன்றோர் வற்புறுத்துவர். எது அறநெறி? இன்று அறநெறி காட்டும் அறிவின் நிலையைச் சற்றே எண்ணலாம்.

'அறிவு' என்பது என்ன? படிப்பது; தேர்வில் வெற்றி பெறுவது; 100க்கு 100 வாங்குவது என்றுதான் நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; உலகம் அதைத்தான் போற்றுகின்றது! ஆம்! அதை அறிவு இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு' என வள்ளுவரே சொல்லுகிறார். ஆயினும் அந்தக் கல்வி எத்தகையது என்பதைத் தனியாகப் பின் எண்ணிப் பார்க்கலாம்.

அறிவின் நிலையில் பலபடிகள் உண்டு. மேல் மாடிக்குச் செல்வதற்குப் பலபடிகளைக் கடந்து செல்ல வேண்டும் என்பது முறை. இன்று மின்தூக்கிகள் வந்த போதிலும் படியே பெரிதும் உதவுகின்றது. பல படிகளைக் கடந்துதான் நாம் மேலே செல்ல வேண்டும். அந்தப் படிகளின் அமைப்பைப் போலவேதான் அறிவின் பல படிகளும் அமைகின்றன.

அறிவின் படிகள் பல; ஆயினும் அறிவு வளரவளர நாம் அறிந்ததைக் காட்டிலும் அறியாதவை பலப்பல என்ற உண்மை விளங்கும். வானாராய்ச்சி உண்மை இதை விளக்கும். கண்ணால் காணும் சிறுதூரத்தை எண்ணும்போது

அது அதிகமாகத் தெரிகிறது. ஆனால் சிறு தொலைநாடியில் அந்த அளவைக் கண்டபோது, காணாத தூரம் இன்னும் விரிந்து கொண்டே செல்கிறது. பின் அந்த தூரத்தையும் பெருந்தொலைநாடியைக் கொண்டு நோக்கும் போது, காணாது பரந்து நிற்பது இன்னும் விரிவடைகிறது. அறிவும் அத்தகையதே; அறிய அறிய இன்னும் அறிய வேண்டுவது அதிகமாகின்றது. இதையே வள்ளுவர் 'அறிதோறறியாமை கண்டற்றால்' என உவமை முகத்தால் கூறுகின்றார். எனவே அறிவின் எல்லை விரிந்தது; பரந்தது; எல்லையற்றது; பரம் பொருள் போல் அறுதியிட முடியாதது. ஆயினும் வள்ளுவர் மனித இனம் வாழ, அதற்கு ஓர் எல்லை அமைக்கின்றார். ஆம்! வையகம் வாழ அதுவே வழி.

சமயத் தலைவர்களும் சமுதாயத்தைச் சீர்திருத்த வருபவரும் உயிர்கள் வாழ வழி வகுக்கும் நல்லவரும் காட்டும் அந்த அறிவுப் பாதையை—அறநெறியை நாம் அனைவரும் படிக்கிறோம்; படிக்கக் கேட்கிறோம்: ஆனால் பின்பற்றுகிறோமா? அவ்வாறு பின்பற்றாத மனிதனைப் பார்த்துப் பெரியவர்கள் அறிவற்றதென நாம் கருதும் மரத்தை—விலங்கை, பறவையை, முன்நிறுத்திக் காட்டி அறிவுறுத்துகின்றனர்.

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்'**

என்பது ஔவை வாக்கு.

மரம் வெட்டப்படுகிறது; பின் துளிர்த்து நிழல் தருகிறது. கோடை வெப்பத்தில் வெட்டிய அந்த மனிதனே அந்த மரத்தின் நிழலில் ஒதுங்குகிறான். மரம் 'டே மனிதா! என்னை வெட்டினாயே! உனக்கு நிழல் ஒரு கேடா' என வெருட்டி ஒதுக்குவதில்லையே. அதுபோல அறிவுடையவர்

தமக்கு எக்காலத்தும் தீங்கிழைக்கும் கொடிய பகைவரானா லும் அவரைத் துன்பம் வருங்கால் தம்மால் கூடியவரையில் காத்து ஓம்புவர் என்கிறார் அவர். ஆம்! அதுதான் மனிதப் பண்பாடு—அறம்—அறிவு—எல்லாம்; இந்த நிலை நம்நாட் டில்—உலகில் உண்டானால் உலகில் எந்த மாறுபாட்டுக்கும் இடமில்லையே. தொல்காப்பியர் காலந் தொடங்கி—காந்தி யார்—பாரதியார் காலம் வரையில் இதைத்தானே எல்லா அறிஞர்களும் கூறுகின்றனர். 'பகைவனுக்கருள்வாய்' என்று பாரதியார் வேண்டுகிறாரே!

இவற்றையெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எண்ணிய வள்ளுவர், 'அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய செறுவார்க்கும் செய்யாவிடல்' என்று தெளிவாகக் காட்டி விட்டார். கொடுமை செய்தவரின் கொடுமையை மறந்து—விட்டு, அவனுக்கும் மறுபடி தீமை செய்யாது, நலம்—நல்லன செய்வதே தலையாய அறிவு என்பது அவர் மனித சமுதா யத்துக்கு அளித்த அறநெறி. அந்த நெறியைப் பின்பற்றாமை யினாலேயே மனிதன் அழிந்து வருகின்றான். மக்கட் சமுதா யமும் இனியாயினும் இந்த உண்மையினை—அறநெறியினை உணர்ந்து வாழின் வையம் வாழும்—வளம் சிறக்கும்!—வற்றா நலம் பெருகும். மனித இனம் இந்த அறநெறியினை ஓம்புவ தாக! 'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உணர்வினராகி உலகியல் நடத்த வேண்டும்' என்ற வள்ளலார் வாழ்த்து நிறைவுறுவதாக!

# அறிவுடையோர் செயல்

'நாம் செய்த நல்வினையே நமக்குப் பலன்தரும்' என்ற சங்க கால ஔவையார் கொள்கையினைப் படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் மனிதன், நேர்மாறான காரி யங்களையே செய்து வந்தான்—செய்து வருகிறான். ஆயிரம்

ஆண்டுகள் அந்த வகையில் வாழ்ந்த மனிதனைக் கண்டார் பின்வந்த ஔவையார்—உளம் நொந்தார்—சான்றோர் வாக்கினை உணர்ந்து உலகம் நடக்கவில்லையே என எண்ணி வருந்தினார். சான்றாண்மை மிக்க அவர் உள்ளம் வாடிற்று. ஆறறிவு படைத்த மனிதன் திருந்தா நிலையில் ஓரறிவுடைய உயிர்களைக் காட்டியாகிலும் திருத்தலாமா என எண்ணிற்று அவர் நல்ல உள்ளம். அந்த அடிப்படையிலேயே பல பாட்டுக்களை ஏதுக்காட்டி எடுத்துரைத்து உலகைத் திருத்த நினைத்தார் பிற்கால ஔவையார்.

சாலை ஓரத்தில் வானோங்கிய நல்லமரம் நிழல் தந்து கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ—எதற்காகவோ—அதன் தழைகளையும் கிளைகளையும் வெட்டுவதற்கென ஒரு மனிதன் வருகிறான்—வெட்டியும் விடுகிறான். மரம் மொட்டையாகிறது. அவனும் கிளைகளையும் தழைகளையும் வாரிக் கட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்று விடுகின்றான். ஆனால் அந்த வெட்டுண்ட மரம் தழைக்கத் தொடங்குகிறது. முன்னினும் அதிகமாகக் கப்பும் கிளையும் விட்டுத் தழைக்கத் தொடங்குகிறது. தழைத்துச் சாலை மருங்கிலே நல்ல நிழலையும் தரத் தொடங்கி விடுகிறது.

வெட்டிய மனிதன் வேனிற்காலத்தில் மறுபடியும் அந்த வழியே வருகிறான். வேனிலின் வெம்மை அவனைத் தகைக்கிறது; அவன் திகைக்கிறான். எனவே பக்கத்திலுள்ள அந்தத் தழைத்த மரத்தின் நிழலே தனக்குப் புகலிடமாகக் கொண்டு நிழலினுள் புகுகிறான். அந்த மரமோ, அவன் தன் அங்கங்களையெல்லாம் சிதையச் சிதையத் துண்டித்தவனாயிற்றே என வெறுத்து அவனை ஒதுக்கவில்லை; நிழல் தாராது தான் ஒதுங்கவுமில்லை; மாறாக அவனுக்குக் குளிர் நிழலைத் தந்து வெம்மையைத் தடுத்து அவனுக்கு இதம் செய்கிறது. இந்தக் காட்சியினையே ஔவையார் திருந்தாத மனிதனுக்கு எடுத்துக்காட்டித் திருந்த வைக்க முயல்கிறார். ஆனாலும்

அந்த மனிதன் இன்று வரை இருவர் தம் தொடர்களையும் படித்துக் கொண்டே, மாறாக எங்கோ சென்று கொண்டிருக்கிறான்.

அறிவு என்பது வெறும் ஏட்டுப் படிப்பால் மட்டும் வருவதன்று. அப்படி வருவதாயின், படித்த பலர் வாழும் இன்றைய உலகில் கொடுமைகள் பலவாகப் பெருகிக் கொண்டே போவானேன்? எனவேதான் வள்ளுவர், 'அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக் கடை' என்றும் 'அறிவினுள் எல்லாம் தலை என்ப, தீய செறுவார்க்கும் செய்யாவிடல்' என்றும் கூறினார். இந்த உண்மையினைத்தான் பிற்கால ஔவையார் மரத்தைச் சான்றாகக் காட்டி மனிதனுக்கு விளக்கம் செய்தார்.

தீமை செய்வார்க்கும் நன்மை செய்வதே மனிதப் பண்பு. நல்லவருக்கும் தீமை நினையாதவருக்கும் கூடத் தீமை இழைத்து மகிழும் மனித சமுதாயத்துக் கிடையில் வாழும் நமக்கு, இந்த உண்மை சற்றே விளங்காமற் போனாலும் இந்த நெறி வாழ்வில் வந்தாலன்றி வையம் அமைதியில் வாழாது என்பதை நாம் உணரல் வேண்டும். தன்னை வெட்டினவனுக்கும், அக்கொடுமையை மறந்து நிழல் தரும் ஓரறிவுடைய மரத்தினைக் கண்டும் ஆறறிவுடைய மனிதன் மனம் திருந்த வில்லையானால் சமுதாயம் பிழைப்ப தெங்கே? எனவே, எங்கோ செல்லும் மனித சமுதாயம் நின்று, இச்சான்றோர் வாக்கினை நினைத்துப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நினைத்து அதனைச் செயலில் கொணரவும் முயல வேண்டும். அவ்வாறு முயன்று செயல்படின், வையம் சிறந்து ஓங்கி அமைதி பெறும் எனக் கூறி, என்றும் யாருக்கும்—தீமை செய்வோருக்கும் நன்மையே செய்து நாமெலாம் சிறக்க வேண்டுமென வாழ்த்தி ஔவையாரின் வாக்கினை உங்கள் முன்வைத்து வணங்குகிறேன்.

# நூலும் அறிவும்

''முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதுஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல் உலைக்கூடத்தினால்''

என நன்னெறி நமக்கு அறிவுறுத்துகின்றது. இவ்வாறே பல அறிஞரும் அறவோரும் அன்றுதொட்டு இன்றுவரை தத்தம் ஆக்கநெறி பற்றிய அறவுரைகளைத் தத்தம் நூல்களில் எழுதிக் காட்டியுள்ளனர். கல்வி, அறிவு, அவற்றின் வழியே பெறும் உணர்வு, இவற்றால் ஆய பயன் அனைத்தும் அளவிடற் கரியன. ஆயினும் உலகில் சிலர்

'முந்திரிமேல் காணி மிகினும் கீழ்தன்னை
இந்திரனாப் போற்றி விடும்'

என்ற வாக்கின்படி சிறிதோ—சற்று அதிகமாகவோ கற்று விட்டால் 'தனக்குத் தானே நிகர்' என்று தருக்கி வாழ்பவர் இன்று மட்டுமின்றிப் பழங்காலத்திலேயும் வாழ்ந்திருக் கின்றனர். ஆளவந்தார், மெய்கண்டார் வரலாறுகள் இந்த உண்மையினை உணர்த்துகின்றன. 'கல்வி ஆங்காரம் துன்பம்' என்று குசேலர் உபாக்கியானம் கூறுவது போன்று, சிறிதளவு கற்று அகங்காரமுடையார் துன்பமே அடைவர் என்பது உலகறி உண்மை.

மாந்தருக்குக் கல்வியே கண் என்பர் வள்ளுவரும் ஔவை யும்; அக் கண் அனைவருக்கும் தேவையே. அக் கண், நூல், அறிவு என்ற இரண்டின் அடிப்படையில் அமைகின்றது என்பதை வள்ளுவர், 'மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு'

என்கிறார். இக்கற்றலையும் அறிவினையும் தனித்தனி அதிகாரங்களில் சிறப்பித்துச் சொல்லும் வள்ளுவர் சிலவிடங்களில் உவமைகளாக இவற்றைக்காட்டி மற்றையவற்றை விளக்குவர். உவமை காட்டப்பெறும் பொருள் அறியப்பட்ட ஒன்றல்லவா!எனவே இக்கல்வி—நூல்—அறிவு இவை நாட்டில் நன்கு அறியப் பெற்றனவாம்.

நூல்களைக் கற்று அறிந்தார் தாம் இன்புறுவது உலகின் புறக் காணும் தன்மையர். எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் தன்மையர். அவர்கள் கற்ற நூல்கள் அவர்களுக்கு நாள்தொறும்—நினைக்கும் தொறும்—காலந்தொறும் புதுப்புது உண்மைகளை உணர்த்திக் கொண்டே இருக்கும். 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன் உண்மை அறிவே மிகும்' (373) என்றும் 'உலகத்தொடு ஒட்ட ஒழுகல், பலகற்றும் கல்லார் அறிவிலாதார்' (140) என்றும் வள்ளுவர் கூறும் நிலையினை எண்ணிச் சிலர் அறிவு வேறு, நூலைக்கற்றல் வேறு எனக்கருதுவர். அந்த எண்ணத்தை மாற்றவே 'கற்க கசடறக் கற்பவை' என்று வள்ளுவர் நன்கு விளக்குகிறார். வெறும் பட்டத்துக்காகக் கற்றவர்களால் தானே இன்று நாடும் உலகமும் நலிவுறுகின்றன. இவர்கள் உலக அறிவோ நூல் நயத்தன்மையோ அறியாதவர்கள் ஆவர். இந்த உண்மையினை விளக்க வள்ளுவர் இவ்விரண்டினையும் — நூலினையும் அறிவையும் — உவமையாக உலகறிந்த உண்மையாகவே காட்டி விளக்குகின்றார்.

'நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு' (783)

என்று நட்பு என்னும் அதிகாரத்தில் இதை உவமப் பொருளாகக் காட்டுகிறார். நல்லவர் நட்பு 'நுனியிற் கரும்பு தின்றன்றே' என்றபடி பழகப் பழக இனிக்கும் தன்மையுடையது. பழகப் பழக அப் பண்புடையாளர் நட்பு வளர்ந்து புதுப் புது நலன்களை — உணர்வுகளை — உண்மைகளை—

வாழ்விலக்கியங்களை நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும். எது போல என்ற வினா எழும் அல்லவா! அதற்காகவே 'பயில் தொறும் நூல் நயம் போலும்' என்று முன்னே உவமையைக் காட்டி, பின்னே கூற வந்ததை விளக்கு முகத்தான் உவமைப் பொருளின் ஏற்றத்தை உணர்த்தி விட்டார். இதற்கு உரை கூற வந்த பரிமேலழகர் 'இருமை' யினும் ஒருகாலைக் கொருகால் மிகும் என்பதாம் எனக் காட்டுவர். காளிங்கர்' 'கற்குந்தொறும் கற்குந் தொறும் கற்பவர்க்கு நூல் நயம் செய்யும் இனிமை' என்பர். எனவே நூல் இத்தகையதாக அமைய வேண்டும்; அதைக் கற்பவரே கற்றவர்; அல்லார் யாரோ. இவர்களைப் பற்றித்தான் நான் மேலே காட்டிய இரண்டு குறட்பாக்களும் எழுந்தன. 'நுண்ணிய நூல்' என்றாலும் அதன் நுண்மை அறியாமல் கற்றதனால் பயன் என்ன! உலக வாழ்வை — சமுதாய வாழ்வை -உயிர் வாழ்வை உணர்த்தவே நூல்கள் எழுகின்றன. ஆதலால், நூல்களுள் பொதிந்த அந்த அடிப்படை உண்மையினை உணராமல் எத்தனை நூல்கள் படித்தாலும் என்ன பயன்? இவர்களை எண்ணித்தான் பாரதி,

'அணி செய் காவியம் ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்திருக்கும் கவி உளம் காண்கிலார்'

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு உயரிய கருத்துக்களை உள்ளடக்கிய வள்ளுவர் தம் திருக்குறளை, அதில் ஒரு சில அடிகள் இக்காலத்துக்கு ஒவ்வாதன; அவற்றை நீக்கி அச்சிட வேண்டுமெனச் சிலர் பேசுகின்றார்கள் என்றால் அவர்கள் பாரதிபாடலுக்கு இலக்கியமாக நிற்பவராவர். வள்ளுவர் திருக்குறள் இறைவனைப் போன்று எல்லாருக்கும்—எச்சமயத்தோர்க்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் நூல் என்று எல்லா நாட்டவரும் போற்றும் இந்நாளில், இப்படித் தங்களுக்கு நயன் காண முடியா நிலையில்—பொருள் காண முடியா வகையில் அவை

ண்டாதன என—விலக்குக எனக் கூற முடியுமா! அங்கியை ஏவல் கொள்ள முடியுமா! நடக்கக்கூடியதா என்ற வினா எழுப்பி 'எரியே அவளைச்சுடல்' என்ற சீதையின் கதையும் 'தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்ற கண்ணகியின் கதையும் அழிக்க வேண்டியனவா! இவை மூன்றும் இன்றேல் பின் எவற்றைத் தமிழ் இலக்கியம் என்று கூறப்போகிறார்கள். பாரதியை உலகளாவப் பாராட்டும் இவர்கள் அப்பாரதி பாராட்டும் இம்மூவரையும் மூடிவிட்டுப் பின் எப்படித் தமிழ்ச் சமுதாயமாக வாழப்பேசுகிறார்கள்? எங்கோ சென்று விட்டேன். மன்னியுங்கள்.

இக்குறள் வழி, பலர் அறிந்த உண்மையை உவமையாக வள்ளுவர் விளக்கியுள்ளார். நல்ல நூல் படிக்கப் படிக்கப் புதுப்புதுக் கருத்துக்களை—காலத்தை வெல்லும் கருத்துக் களை—அவ்வக்காலத்து வாழும் சமுதாயத்துக்கு ஏற்ற கருத்துக்களைத் தருவதாகும். அதற்குச் சான்று இக்குறளும் மேற்கூறிய இரு பிற நூல்களுமேயாம். இவை என்றென்றும் வாழ்வனவாம்! தமிழிலும் பிற மொழிகளிலும் சிறக்க வாழ்வனவாம்!

இனி, அறிவு என்பதை எண்ணிப்பார்ப்போம். வள்ளுவர் இதையும் உவமை வாயிலாகக் காமத்துப் பாலில் குறிக் கின்றார்.

'அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (1110)

என்ற குறளே அது. இங்கே அறிவு உவமையாக்கப்படுவதால், அது உலகறி உண்மையாகின்றது. அறிய அறிய நாம் அறிய வேண்டுவன அதிகமாக அதிகமாக உள்ளதை உணர முடிகிறது. அதுபோன்று சேயிழைமாட்டுப் பெறும் இன்பமும் பெருகிப் பெருகி இன்னும் அவள்வழிப் பெற வேண்டிய சிறக்கச் பெரிது பெரிது என உணர்ந்து அவர்கள் வாழ்வை இன்பம் செய்கிறது என்பதாம்,

சாதாரணக் கண் கொண்டு பார்க்கும் போது, கண்ணுக் குத் தெரிவது சிறு தூரமாக அமைய, தெரியாதன அதிகமாக உள்ளதறிவோம். பின் மேனோக்கிக் காணுங்கால் தெரிவன சில தெரியாதன பலவாகக் காண்கின்றோம். ஒரு சாதாரண பூதக்க ண்ணாடியினை—தொலை நாடியினைக் கொண்டு பார்த்தால் நாம் முன் அறியாததன் எல்லைவரை நமக்குத் தெரிகிறது. ஆனால் அதுவே முடிந்த எல்லை என எண்ணிய நமக்கு, அந்த எல்லையைத் தாண்டி அறியாத எல்லை பெரி தாகத் தெரிகிறது. இப்படியே இன்னும் உயரிய தொலைநாடி கொண்டு பார்ப்பின் முன் அறியாத எல்லை முற்றும் தெரிய, மேலும் அறியாத எல்லை இன்னும் பெருகிக் கொண்டே போகும்.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி
... ... ... ... ...
இல்நுழை கதிரின் துண் அணுப் புரைய
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'

என்று நம் கண்முன் இல்லுழைகதிர் ஒளியில் எண்ண முடியாத அணுத்திரள்களைக் காட்டி, அவை சிறிதாக அண்டத்துக்கும் அப்பாலாய அறியாதன பெரிதாக உள்ள தன்மையினையும் மணிவாசகர் காட்டுகின்றார். ஆம்! 'அறிதோறும் அறியா நிலை காணும் அறிவு' அத்துணை பரந்தது; எல்லையற்றது; முற்றும் காணமுடியாதது—முடிவற்றது. இந்த அறிவைத் தான் நாம் மேலே காட்டிய நூல் அறிவு ஓரளவு அளிக்கும் என்கிறார் வள்ளுவர்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' (396) என்பது அவர் வாக்கு.

இவ்வாறு ஆழ்ந்து நோக்கின் இந்த அறிவுக்கும் நூல் நயத்துக்கும் கல்விக்கும் அவற்றின் பயனுக்கும் என்றும்

வாழும் வள்ளுவரே—அவர்தம் குறளே சான்றென அமையக் கொள்ளல் பொருந்து மல்லவா!

இத்தகைய வள்ளுவர் பெயரிலே மதுரைத் திருவள்ளுவர் கழகம் அமைந்து கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொண் டாற்றி வருகின்றது. அதன் தலைவராகச் சிறந்து நின்ற பொன்னம்பலத் தியாகராசர் அவர்தம் நூற்றாண்டு விழாவும் மதுரைத் திருவள்ளுவர் கழகப்பொன்விழாவும் இணைந்து—இயைந்து சிறக்க நிற்பதை அறிந்து உளமகிழ்கின்றேன். வள்ளுவர் குறள் போல் வையம் உள்ளளவும் கழகத்தின் புகழும் அதைத் தலைமை தாங்கி நடத்திய அண்ணலார்புகழும் என்றென்றும் சிறக்க வாழும் என்பது உறுதி. அங்கயற்கண்ணி யொடு அமர்ந்தருளும் சொக்கேசர் இந்த ஆடி வீதியை நோக்கி அருள்புரிவாராக!

## கல்வி

இறைவன் முன்நின்று வழிபாடாற்றுகின்றார் தாயுமானவர். இறைவன் அவர் முன் தோன்றி 'வேண்டியதைக் கேள்' எனச் சொல்லி இருப்பார் போலும். உடனே அவர் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே' என்று வேண்டிக் கொண்டார். ஆம்! நல்லவர் உள்ளம் இதைத்தான் வேண்டும். நம்மைப் போன்றார் தமக்கு 'இது வேண்டும்' அது வேண்டும், எனக் கேட்பர். தாயுமானவர் உலகில் எல்லாரும் இன்புற்றிருக்கும் அந்தப் பெருந்நிலையினையே வேண்டுகிறார். இறைவன் அந்த வரத்தைத் தந்து' வேறு உனக்காக ஏதேனும் வேண்டுமோ' எனக் கேட்டிருப்பாரோ! அதனால்தான் 'அது அல்லாமல் வேறொன்றும் வேண்டேன்—

வேண்ட அறியேன்' என்று சொல்லுகிறார். இந்த நிலையில் இன்றைய மனிதன் வாழத் தொடங்குவதே அறநெறி. அது தான் கல்வியும் கூட.

நாட்டில் நாடோறும் கல்விக் கூடங்கள் வளர்கின்றன. பலர் அதிகமாகப் பயில்கின்றனர். நம்நாட்டைக் காட்டிலும் உலகில் வேறு சில நாடுகளில் கற்றவர் எண்ணிக்கை விழுக்காடு அதிகமாக இருக்கும். ஆயினும் நாட்டிலும் உலகிலும் அமைதியில்லா நிலையினைக் காண்கிறோமே! ஏன்?

"நெஞ்சத்து 'நல்லம் யாம்' என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்பது நாலடி. 'கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை' என்றும் 'எம்மை உலகத்தும் யாம் காணேம் கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து' என்றும் கூறியுள்ளனர். எனவே கல்வி இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு—சிறப்பாக அறிவுடை மனிதனுக்கு உற்றதுணையாகவும், துயர்தீர்க்கும் மருந்தாகவும், வாழ்க்கைக்கு அழகும் பொலிவும் ஊட்டுவதாகவும் அமைகின்றது. ஆனால் இன்று கற்றவர்களாலேயே பல கொடுமைகள் நாட்டில் விளைவதைக் காண்கின்றோமே! ஏன்?

இன்று நம் நாட்டில் கல்வி பற்றிப் பலவாறு பேசப் பெறுகிறது. புதிய கல்வித் திட்டம் பற்றி மாநாடுகள், கருத்தரங்குகள் நடந்து ஓய்ந்து விட்டன. செயலாற்றத் திட்டங்கள் தீட்டி, நூல்களும் எழுதப் பெற்று, நடைமுறைக்கும் வரத் தொடங்கி விட்டது. எனினும் அதுபற்றிய மாறுபாட்டுக் கருத்துக்களும் வேறுபாட்டுக் கொள்கைகளும் இல்லாமல் போகவில்லை. மொழிச் சண்டை, கல்வி மத்தியிலா? மாநிலத்திலா? என்ற வேறுபாடு; இன்னபிற தலை விரித்தாடுகின்றன. இவை எல்லாம் நாம் மேலே காட்டிய நல்லவர்தம் வாய்மொழிகளை உணராத நிலையிலேயே உண்டாகின்றன. கல்வி தம்மை ஒறுத்து மற்றவரை

வாழ வைக்கப் பயன்படுவது என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே பெரியவர்கள் நம் நாட்டில் வற்புறுத்தியுள்ளனர். திருவள்ளுவர் 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' எனக் கூறுகின்றார். இதன்வழி கற்றவர் என்பார் தாம் பெற்ற இன்பம் வையகம் பெற வேண்டும் என எண்ணுபவர்—பாடுபடுபவரேயாவர்! இன்றைய கல்வியாளர் இந்த நிலையில் உள்ளனரா!

'கல்வி ஆங்காரம் துன்பம்; கற்றிலனாகில் துன்பம்' என்று குசேலர் உபாக்கியானம் கூறியபடி, கற்றோர் ஆங்காரத்தால் தாம் உயர்ந்தவர் எனத் தருக்கு கொள்ளுகின்றார். கல்லாதார் ஏங்குகின்றனர். இதுதான் இன்றைய கல்வி நிலை. இன்று நாட்டில்—உலகில் நடக்கும் பல கொடுமைக்குக் கற்றவர்தாமே காரணம். நாட்டுத் தலைவர்கள்—உலகத்தவர்களெல்லாம் கற்றவர்தாமே! ஆம் என்றால் பின் கொடுமை நிலவுவானேன்? அக்கல்வி வள்ளுவர் காட்டிய நல்ல அறநெறிக்கு வழி வகுக்காததே யாகும். அதனாலே தான் தாயுமானவர் மாணிக்கவாசகர் போன்ற பெரியவர்கள் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்றும் 'கற்பனவும் இனி அமையும்' என்றும் கூறுகின்றனர். இராம கிருஷ்ணபரமாம்சர், ஞானசம்பந்தர், இயேசு பெருமான் போன்ற அறம் வளர்த்த சமயத் தலைவர்கள் எந்தக் கல்லூரியிலும் கற்றவர்கள் அல்லரே!

இதனால் கல்வி வேண்டாம் என்று யாரும் சொல்ல முடியாது. உயிர்க்கு உற்ற துணை அதுதான். கற்க வேண்டும்; கற்று அதன் வழி நிற்க வேண்டும். நம் நாட்டில் திருக்குறளைக் கற்கிறோம்; அதன் வழி நிற்கிறோமா! அகிம்சையினைப் போதித்த புத்தரைப் போற்றுகின்ற நாட்டவர் அவர் அறிவுரைப் படிக்கிறார்களே; அவர் சொல்லியபடி நடக்கிறார்களா? இயேசுவின் பொன்மொழி

பயிலும் நாடுகளில்தானே உலகப் போராட்ட விதைகள் தூவப் பெறுகின்றன. இந்த அவலநிலையை எண்ணித்தான் போற்றும் வள்ளுவர் அன்றே 'தாம் இன்புறுவது உலகின் புறக்காணலே' கல்வியும் அதன் வழியே பெறும் அறிவும் என்கின்றார், அத்தகைய நல்ல கல்வி நாட்டில் மலர வேண்டும்— 'எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற எண்ணத்தை வளர்க்கும் வகையில் நாம் கற்று அறிந்தவர் களாக வேண்டும். அத்தகைய கல்வியே தனி மனிதனுக்கு உள அமைதியையும் சமுதாயத்தில் ஒருமை உணர்வையும் உலகத்தில் சமாதானத்தையும் உண்டாக்கும். இன்றைய கற்றவர்கள் 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்ற நினைவுடன் நாட்டிலும் உலகிலும் ஒருமை உணர்வையும் தூய்மை உள்ளத்தையும் ஒன்றிய உலகையும் உண்டாக்க வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன்.

கல்வி மக்கள் வாழ்வின் அடிப்படை. ஆறறிவு பெற்ற மனிதன் கற்றவனாக இருத்தல் வேண்டும். அதனாலேயே அதனைக் 'கண்' என்று அறிஞர்கள் காட்டியுள்ளார்கள்.

'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்'

என ஔவையாரும்

''எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு'

என வள்ளுவரும் காட்டியுள்ளனர். ஆம்! கண்ணற்ற குருடன் வாழ்வினும் கீழாகக் கல்லாதார் வாழ்வு கழியும் என்பது உண்மை. புலவர்கள் காட்டும் சான்றுகளும் நம் வாழ்வும் இந்த உண்மையினை வற்புறுத்துகின்றன.

இன்றைய உலகில் கல்லாதவரில் பாதிப்பேர் இந்தியாவில் வாழ்கின்றனர் என்று கணக்கிடுகின்றனர். இந்த அவல நிலையைப் போக்க மத்திய, மாநில அரசுகள் பலப்பல முயற்சி

கள் மேற்கொண்டு, பலப்பல வழிகளில் கல்லாமையினைப் போக்கப் பாடுபடுகின்றன. பள்ளியில் பயிலும் பிள்ளை களுக்கு மட்டுமன்றி வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் எங்கோ ஒதுக்கிடங்களில் வாழும் தாழ்ந்தோருக்கும்கூடக் கல்வி கற்றுத்தர ஏற்பாடுகள் செய்யப் பெறுகின்றன. அண்டை மாநிலமான கேரளம் முற்றும் கற்றவராகிய நிலை யினை எட்டுகிறது எனக் காண்கிறோம். நம் தமிழகமும் அந்த நிலையினை விரைவில் அடையும் வகையில் இன்றைய அரசு எல்லா வகையிலும் முயற்சி செய்கிறதெனை அறிகிறோம்.

கல்வி ஏன் அத்துணை முக்கியத்துவம் பெறுகிறது. கல்வி வெறும் உத்தியோகத்துக்கு மட்டும் பயன்படுவதன்று. சமுதாய வளர்ச்சிக்கும் ஆன்மிக வளர்ச்சிக்கும் பிற நல்ல வளர்ச்சிகளுக்கும் கல்வி உறுதுணையாக அமைகின்றது. கற்றவர் மற்றவர்களைத் தம்மைப் போலவே எண்ணி, ஒத்து நோக்கி, ஒன்றிய சமுதாயமாக வாழ வழி காட்டுபவர். தாம் பெற்ற இன்பம் வையகம் பெற வேண்டும் என்ற உள்ளத்து உணர்வால் செயலாற்றுபவர்கள். ஆம்! இந்த நிலைதான் கல்வியின் பயன். வள்ளுவர்,

> 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்' (399) என்கின்றார்.

கல்வியின் பயன் இதுவே. கற்றவர்கள் தாம் எந்தெந்த வகை யில் இன்பம் காண்கின்றார்களோ, அந்த இன்ப நெறியினை மற்றவரும்—சமுதாயமும் பெறவேண்டும் என உழைக்க வேண்டும். 'எல்லாரும் எல்லாச் செல்வமும்' பெறப் பாடு படுவதே கல்வியின் குறிக்கோளாக அமைய வேண்டும். அத்தகைய கல்வி இன்று நாட்டில் இல்லைதான். இன்றுள்ள கல்வி, போட்டியில், தானே வெற்றிபெறவேண்டும் என்ற சுய உணர்வையும் வாழ்வுக்குத் தேவையற்ற நிலையிலும், என்றோ யாரோ அடிமை நாட்டினர் வகுத்த வகையிலும் நம்

நாட்டில் வாழ்கின்றது. எனினும் மேலே கண்ட கண் எனப் போற்றும் சமுதாய வாழ்வளிக்கும் கல்வியே நாட்டில் அமைக்க வேண்டும். அந்த நெறி சமுதாயத்தை வாழ வைக்கும்—வளம் பெருக்க வழி காட்டும்.

கல்வி ஒருவனை உயர்த்துகிறது—'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' எனவும். 'ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது, அறிவுடையோனாறு அரசும் செல்லும், என்றும் சங்கப்பாடல் அடிகள் நமக்கு அறிவுறுத்து வது அறிய வேண்டும். இவற்றால் தனிமனித உயர்வும் அரசு வழி அமையும் சமுதாய உயர்வும் குறிக்கப்பெறவில்லையா! ஆம்! எல்லாரும் வாழ வேண்டும் என்ற கல்வி மக்கள் அனை வருக்கும் தரப்பெறின் நாடு நலம் பெற்று ஓங்கும்.

இனி, கல்வி தெய்வ நெறிக்கும் ஆன்மிக வாழ்வுக்கும் வழி காட்டும் என்பதும் உறுதி. அதனால்தான் வள்ளுவர் முதலிலேயே கடவுள் வாழ்த்தில் 'அகர முதல' என்ற முதற் குறளில் இறைவன் உள்ளமையைக் காட்டி, அடுத்த குறளிலேயே,

'கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்' (2)

என்று கல்வியின் பயன் இறைவனடி தொழுதல் என்பதைச் சுட்டுகின்றார். பின் அதன் வழியே பிற எல்லாப் பாடல் களும் செல்லுகின்றன. அப்பரடிகளும் இறைவன் கற்றவர் உள்ளத்திலே வீற்றிருப்பான் என்ற உண்மையினை, 'கல்லா தார் மனத்தணுகாக் கடவுள் தன்னை, கற்றாரும் உற்று ஓரும் காதலானை' என்கின்றார். எனவே கல்வி இம்மை வாழ்வில் ஏற்றத்தையும் இணைப்பையும் இன்பத்தையும் தருவதோடு, மறுமை வாழ்வுக்கும் வழி கோலுகிறது என்பது தெளிவு.

ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து' என்கிறார் வள்ளுவர்

ஈண்டு எழுமை என்பதற்கு எழுகின்ற பிறவிகள் தோறும் எனப் பொருள் கொள்ளல் வேண்டும்,

எனவே மக்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் கற்றவ ராக வேண்டும். கல்லாதாரைக் கற்றவராகச் செய்ய வேண்டும். இன்றே அத்தகைய ஆக்கப் பணியினைத் தொடங்குவோம். பயன் காண்போம்!

# எந்நாளும் இன்பமே

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று அப்பர் போன்ற பெரியவர்கள் பாடிச் சென்றுள்ளார்கள். வாழப் பிறந்த மனிதன் என்றும் வாடாத வகையில் இன்பத்தினை நாடுவது இயற்கை. மனிதன் மட்டுமன்றி உயிருள்ள அனைத்துமே அந்த இன்ப வாழ்வினையே ஏற்க விழை கின்றன. ஆனால், அந்த இன்பத்தினைப் பெறப் பலர் பல வகையில் முயல்கின்றனர். ஒரு சிலர் தம் முயற்சியில் வெற்றி பெறுவர்; பலர் வீழ்ச்சியுறுவர். இன்ப வாழ்வும் பலருக்குப் பலவகையில் அமைகின்றது. அவரவர் மன நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப 'இன்பம்' எல்லையிடப்பெறும். ஆயினும் அத்தகுதி நிலையின் அடிப்படையில் அமைந்த இன்பத்தினைப் பெற மக்கள் பலப்பல வழிகளை மேற்கொள்ளுகின்றனர். சிலர் வழியல்லா வழி சென்று இன்பம் துய்க்கவும் முயல்வர். அது ஒருவேளை துன்பமாக மாறினும் மாறும். ஆயினும் சிறுபொழுதே பெறும் 'கண இன்பத்தைக்' காணவே உலகில் பெரும்பாலோர் ஓடி உழல்கின்றனர். இன்பம் பெற்று மகிழும் காலத்தினைக் காட்டிலும், பின் நீண்டகாலம் துன்பத்தில் சுழலும் நிலையில் ஒரு சிலர் வாழ்வு அவலமாகக்

கழிவதையும் காண்கிறோம். இருந்தாலும் உலகம் 'எங்கே இன்பம்? எங்கே இன்பம்'? என்று கேட்டுக் கொண்டே எங்கெங்கோ செல்லுகிறது. உற்று நோக்கின் உயிரினம்—சிறப்பாக அதன் உச்சியில் வாழும் மனித இனம்—அந்த இன்ப நெறியைப் பெறுவதற்கான அடிப்படை உண்மையினை முற்றும் உணர்ந்து கொள்ளவில்லை என்பது புலனாகும். எனவேதான் நாலடியார் அந்த முற்றிய உண்மையினை நமக்கு உணர்த்துகின்றது,

'அறிவதறிந் தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவது உலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது' (பொறையுடைமை-4)

என்ற அடிகளில் துன்புறாத நல்வாழ்வு பெற நாலடி நமக்கு வழி காட்டுகிறது, இந்த அடிப்படை உண்மை அனைவருக்கும் ஏற்புடைத்தாகும். உண்மையில் நிலைத்த நல்ல நெறிவழிப் பெருகும் இன்பம் வேண்டுவோர் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஐந்து நல்ல உண்மைகளை நாலடி நமக்கு உணர்த்தி அவற்றை மேற்கொள்ளத் தூண்டுகிறது. முதலாவதாக அறிவதை அறியவேண்டும். உலகில் அறியாமையாலேயே பலவகைத் துன்பங்கள் உண்டாகின்றன. எனவே 'அறிவது அறிந்து' என்று வாழ்வின் இன்றியமையாத முதற் கடமையாக இதை வற்புறுத்துகிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' போன்ற நல்ல உண்மைகளே அவை. அவற்றை அறிந்தால் வேறுபாட்டு உணர்வுக்கு இடமில்லை. மேலும் அதனால்—அந்த அறிவின் தெளிவால் — உயர்ந்ததாகிய அடக்கம் நம்மை வந்து சாரும். அறிவும் அடக்கமும்பெறின் 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்ற குறள்நெறிக் கேற்ப, தீயதற்கஞ்சி நல்லன செய்யத் தலைப்படும் நல்லுணர்வு

தானே வந்து சேரும். அறிவும் அடக்கமும் அஞ்சுவது அஞ்சும் நல்லுணர்வும் அமைந்தால் நாட்டிலும் உலகிலும் பல கொடுமைகள் இல்லையாகும் என்பதைப் பல நாட்டு வரலாறு களும் இலக்கியங்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன அல்லவோ!

இந்த அறிவும் அடக்கமும் நல்லுணர்வும் அமைந்த நல்ல உளமுடையோர் உலகம் விரும்பிய நல்ல காரியங்களைச் செய்வதோடு, உள்ளதைக் கொண்டு மகிழ்ந்து, 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற நெறியில் நிற்பர். இவ்வாறு இந்த ஐந்து பண்புகளும் ஒருங்கே அமையின் உலகில் துன்பம் தோன்ற வழி ஏது? யாருக்கும் யாவும் இன்பமாகவே அமையுமன்றோ! இதைத் தான் நாலடியார் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நாம் முதலில் 'தீய செறுவார்க்கும் செய்யா' அறிவுடைய ராக வேண்டும். அவ்வறிவின் வழி அடக்கம் அமையும்; அஞ்சுவது அஞ்சும் பண்பும் உருவாகும். அவ்வுணர்வு சமூகத்துக்கு இனிமைதரும்—நன்மை விளைக்கும் செயல் களையே செய்ய நம்மைத் தூண்டும். அச்செயல்வழி யினாலும், பெறுவதனால் இன்புற்று வாழும் இயல்பினாலும் நாம் எல்லாரும் இன்பம் பெறுவோம் என்பது உறுதி. நாம் மட்டுமல்ல; நானிலம் முற்றுமே இன்பில் திளைக்கும் என்பது தேற்றம். மனித சமுதாயம் இந்த மாபெரும் செம்மை நெறிகளை முற்றும் உணர்ந்து உலகினை இன்பச் சோலை யாக்கி உயர்வதாக!

# உள்ளத்தால் ஒன்றுக

உலகம் கூடி வாழ்வதற்கெனவே அமைந்தது. சமுதாய வாழ்வு இந்த அடிப்படையில் அமைந்துதான் உலகை வாழ்விக்கிறது. மனிதன் மட்டுமன்றிச் சில பறவை இனங்களும் விலங்கு முதலியனவும் எறும்பு, பூச்சி வகைகளும் கலந்து வாழ்கின்றன. ஆயினும் சமுதாய வாழ்வில் திளைக்கும் மனிதனுடைய கூட்டு வாழ்வில் சில வேறுபட்ட உணர்வுகள் மிக்கு வளருவதைக் காண முடிகிறது. 'ஓட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்' என்று காதல் பற்றிப் பாரதியார் பாடிய கருத்து உலகில் கூடிவாழும் எந்த உயிருக்கும்—எல்லா மனிதருக்கும் பொருந்துவதாகும். ஆயினும் இன்றைய மனிதன் அந்த உள்ள உணர்வோடு பழகவில்லை—வாழவில்லை என்பதனை உலக, நாட்டு, வீட்டு நிகழ்ச்சிகள் நமக்குக் காட்டுகின்றன. அதனாலேயே வள்ளலார், 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும், என்று பாடிச் சென்றார்.

ஒருவனை ஒருவன் நம்பினாலன்றி வாழ்வு இல்லை. ஆனால் நம்பக் கூடியவர்களும் நம்பும் வழியில் வாழ்பவர்களும் உள்ளத்தில் நம்பிக்கை வையாது உதட்டளவில் உறவு கொண்டு காலம் வரும்போது ஒருவர் மற்றவரை வீழ்த்தப் பார்க்கும் உலகில் நாம் வாழ்கின்றோம். இதனாலேயே அண்ணன் தம்பியருக்குள் பிணக்கும், வீட்டுக்கு வீடு வேறுபாடும், நாட்டுக்கு நாடு போரும் உண்டாகின்றன. மனிதன் பகுத்தறிவின் திறத்தால் எவ்வளவு முன்னேற்றம் பெற்ற போதிலும், இந்த உறவாடும் மன உணர்வாகிய பண்பு இல்லையானால் நாடும் உலகமும் உண்மையில் முன்னேற முடியாது என்பதை உலக வரலாறு காட்டுகிறது. தனி மனித வாழ்வும் அப்படியே!

மாநாடுகளும் கூட்டங்களும் கூடிப் பேசி ஒற்றுமையைப் பற்றிப் பிதற்றிவிட்டு, தனிமையில் ஒருவருக்கொருவர்—

நாட்டுக்கு நாடு—வீட்டுக்கு வீடு மாறுபட்ட வகையில் பகை மூட்டுவதறிகிறோம். இந்த நிலை உள்ள வரையில் முன்னேற்றம் எப்படி உண்டாகும்? ‘கூடிப் பிரியேல்’ என்று குழந்தைகளுக்கு ஔவையார் கூறிய அந்தப் பொன்மொழி உலகில் வாழும் அனைவருக்கும் பொருந்தும். நண்பரான பின்—அன்பால் பிணைப்புண்டபின், ஒவ்வொருவரும் தாம் மற்றவரோடு கலந்தவர்—உற்றவர் என்ற உணர்வில் வாழ்ந்தால் நாட்டில் இத்தனை நீதி மன்றங்களுக்கும் வேலை இல்லையே! உள்ளத்தில் உற்ற நண்பர் இடம்பெறும் நிலையும், அவர் வாழத் தான் வாழ்வதும் அவர் வாடத் தாம் வாடுவதும் என்ற உணர்வு நிலையும் நாட்டிலும் வீட்டிலும் அமையுமானால் உலகம் ஒரு நல்ல பூஞ்சோலையாகத் திகழாதா! அந்த உளம் ஒன்றிய நல்வாழ்வு உலகில் என்று மலருமோ! யாரறிவார்?

இந்த உண்மையினை உணர்ந்த புற நானூற்றுப் புலவர்கள்ளில் ஆத்திரையனார், தான் அறிந்த அப்பேருண்மையினை, உலகுக்கு உணர்த்துகிறார். அவர்தம் உற்ற நண்பன் ஆதன் ஊங்கன் என்பவன். ஒருவேளை யாராயினும் ‘நண்பனை மறந்தீரோ?’ எனக் கேட்டிருக்கலாம். ஆதனூங்கனே கேட்டும் இருக்கலாம். அதற்கு விடையாக ‘எந்தை வாழி!’ (புறம் 175) என்ற பாட்டால் பதில் சொல்லுகிறார். ஆதன் ஊங்கனை முன்னிறுத்தி, ‘என் நெஞ்சம் திறந்தால் அதில் ‘உன்னைக் காணமுடியும். ஆம்!’ நான் உன்னை மறப்பேன்—எப்போது?—என் உயிர் என்னைவிட்டுப் பிரியும்போது நான் என்னை மறப்பேனல்லவா! அப்போது ஒருவேளை உன்னையும் மறப்பேன் கொல்’ என்கிறார். இதனினும் சிறந்த நட்பு ஏது? அவருடைய ‘என் நெஞ்சந்திறப்போர் நிற்காண்குவரே’ என்ற தொடர் ஒரு தலைவனோ அன்றித் தலைவியோ கூறியது போன்று காணப் பெறினும் இணைந்த இரு நல்லவர்தம் உளத்தையே இது காட்டுகிறது. ஆம்! உலகம் இந்த ஆத்திரையனார் அடிஒற்றி உளத்தால் ஒன்றாக அனைவரும்

உற்றாராய் வாழும் வாழ்வினைப் போற்றிப் பின்பற்றும் நல்லவரால் நிறையப் பெறுமாயின் பிறகு உலகுக்குக் குறைவேது; கொடுமையேது? எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று வாழ வழி உண்டாகுமல்லவா! ஆம்! அந்த உளம் ஒன்றிய நல்ல சமுதாய வாழ்வு நாட்டிலும் உலகிலும் 'மலர்வதாக' என வாழ்த்தி அப்புறநானூற்று அடிகளை உங்கள் முன் வைக்கிறேன்.

'எந்தை வாழி! ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே
நின்யான் மறப்பின் மறங்குங்கொல்
என்னுயிர் யாக்கையின் பிரியும் பொழுது
என்யான் மறப்பின் மறக்குவன்' (புறம் 175)

# அல்லது செய்தல் ஓம்புமின்

**ம**னிதன் உலகில் வாழப் பிறந்தவன். தான் வாழ்வதோடு மட்டுமன்றி மற்றவர்களையும் மற்றவற்றையும் வாழ வைக்கவும் பிறந்தவன். இந்த அடிப்படை உண்மையினை உணராத காரணத்தினால்தான் மனிதன் 'ஒன்றை விட்டு ஒன்று பற்றி' எங்கெங்கோ சுற்றி, ஏதேதோ செய்து எப்படியோ காலம் கடத்துகின்றான். சிலர் தம் வாழ்வே பெரிதென எண்ணி, அவ்வாழ்வு வளம்பெற எத்தகைய கொடுமையினையும் செய்யத் துணிவர். 'தான்கெடினும் தக்கார் கேடெண்ணற்க' என்ற முதுமொழியை ஏட்டில் விட்டு, நாட்டில் செய்யத் தகாத காரியங்களையெல்லாம் செய்து, தன்வாழ்வைப் பெருக்கிக் கொள்ளுபவர்களை நம் கண்முன்னே காண்கிறோம். சிலர் அதற்கும் ஒருபடி மேலே சென்று, 'தனக்கு ஒரு கண் கெட்டாலும் பரவாயில்லை; மற்ற

வனுடைய இரண்டு கண்களும் கெடவேண்டும்' என்று பிறர்க்குத் தீமை இழைப்பதிலேயே இன்பங்காணுவதையும் அறிகிறோம் இந்த அவல நிலை மனிதனிடத்து அம்மனித உணர்வு அற்றதனாலே உண்டான ஒன்றாகும். இதற்கு மாற்று இல்லையா? மருந்து இல்லையா?

'அரிதரிது மானுடராத லரிது' என்ற ஔவையின் மொழிப்படி, உயிரினத்தின் உச்சியிலே வாழ்கின்ற மனிதன் ஒரு 'சமுதாய விலங்கு' என்ற உணர்வினைப் பெறுவதோடு, அச்சமுதாயம் வாழ்ந்தால்தான் தனி வாழ்வும் சிறக்கும் என்ற உண்மையினையும் தெரிந்து கொள்ள வேண்டும்; உலக வரலாற்றில் சிற்சில சமயங்களில் தனிப்பட்டவர்தம் வாழ் வினை வளம்படுத்துவது உயர்ந்ததாகக் கருதப்படும் நிலைகள் தோன்றினும் அவை அனைத்தும் காலத் தேவனால் கட்டறுக்கப் பெற்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 'நாடு வாழ்ந்தால்தான் நாம் வாழ்வோம்' என்ற உண்மை நிலையே யாண்டும் என்றும் ஓம்பப் பெறல் வேண்டும்.

வாழ்வில் சிலருக்கு உதவத்தக்க வாய்ப்பும் வசதியும் இருக்கும்; சிலருக்கு அது இராது. இராதவர் தமக்கு அந்த வசதி இல்லையே என்பதற்காக மற்றவர்களுக்குக் கெடுதி செய்ய வேண்டும் என்பதில்லை. அன்றி, அந்த வசதி பெறு வதற்காக மற்றவர்களைக் கெடுக்க வேண்டும் என்பதில்லை. வசதி இருந்தால் நலம்பெறலாம். இன்றேல் அமைதியாக வாவது இருக்கக் கூடாதா! மேலும் சில வசதி படைத்தவர்கள் தம்மிடம் பணம், பதவி, பட்டம் இன்னபிற இருக்கின்ற காரணத்துக்காக, மற்றவரைச் சாடுவதும் தாழ்த்துவதும் செய் வதையும் நாம் காண்கிறோம். இது மிகக் கொடுமை வாய்ந்த தாகும். இவர்கள் இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் நலம் காண மாட்டார்கள். அவ்வாறு வசதியால் பிறரை வாட்டி வதைத்தவர் வரலாறுகள் முடிவில் எவ்வாறு அமை கின்றன என்பதை உலகம் கண்டு கொண்டே இருக்கிறது.

அவர்கள் கெடுவது மட்டுமன்றி, அவர்களால் உலகமும் சமுதாயமும் கெடுகிறது. இவற்றையெல்லாம் எண்ணித்தான் போலும் சங்க காலத்தில் வாழ்ந்த நரிவெரூஉத்தலையார் என்ற ஒருநல்ல புலவர் மனிதனுக்கு உயர்ந்த ஒரு உபதேசத்தைச் செய்கிறார். அதைப் படித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் நாம் வேறுவழியிலே சென்று கொண்டிருக்கிறோம். சற்றே நின்று நினைத்துப் பார்ப்போமா!

பிறந்தவர் மறைவது உண்டு. வாழ்வது சில நாள். அந்த சிலநாள் வாழ்க்கை அவர்களை உலகில் என்றென்றும் வாழச் செய்ய வழி உண்டா? உண்டு. அதுதான் நரிவெரூஉத் தலையார் காட்டுவது. 'உலகில் பிறந்த நீ உன்னால் முடிந்தால் நல்லது செய். அதனால் நாடு நலம் பெறும்; சமுதாயம் தழைக்கும்: உனக்கும் பயன் உண்டு. ஆனால் அவ்வாறு செய்ய முடியாவிட்டாலோ, முடிந்தும் மனமில்லாக் காரணத்தாலோ, வேறு கொடுமைகளையாவது செய்யாதிருக்கக் கற்றுக் கொள். நல்லது செய்யாவிட்டால் 'இவன் இருந்தும் செய்யவில்லை' என்பதோடு நிற்பார்கள். அன்றி 'அல்லது' செய்தால் உலகில் உனக்கு என்றென்றும் பழி உண்டாவதோடு, மறுமையிலும் உன் வாழ்வு சிறக்காது' என்கிறார். ஆம்! நல்லது செய்ய முடியாதவர்கள் 'சும்மா' இருந்தாலே போதும். அதுவே அவர்களுக்குப் புகழ். மாறாகக் கொடுமை செய்து இம்மையிலும் மறுமையிலும் அமைந்துள்ள—அமைய வேண்டிய—நல்வாழ்வை நாசமாக்கிக் கொள்ளலாமா? இதில் சுயநலமும் உள்ளதே! தாம் வாழ விரும்பின்—இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் பெற வேண்டின், அவர் சொல்லைக் கடைப்பிடித்து நல்லது செய்யாவிட்டாலும் அல்லது செய்யாது அவரை வாழ வைப்போமாக! இதோ அவர் வாக்கு:

'நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறிவுமா றதுவே' (புறம் 195)

# முயற்சி ஆக்கம் தரும்

நம் பாரத நாடு உரிமை பெற்றபின் எவ்வளவோ வகையில் நாம் முன்னேறியுள்ளோம். எனினும் மக்கள் மன நிறைவும் வாழ்வின் அடிப்படைத் தேவையும் முற்றப்பெற்று வாழவில்லை என்பது கண்கூடு. இதற்குக் காரணம் என்ன? காரணம் நாமே என்பது எண்ணிப் பார்த்தால் விளங்கும்.

மனிதன் முன்னேற உழைப்பு இன்றியமையாத தாகின்றது. இன்று நாட்டில் உழைக்க வேண்டும் என்ற மனப் பான்மை அருகி வருகின்றது. கொடிய பாலைவனங்களை யெல்லாம் சோலைவனங்களாக்கிப் பயிரிட்டுப் பயன் காணும் நாடுகள் பற்றி நாம் கண்டும் கேட்டும் மகிழும் அதே வேளை யில் நாமும் அவ்வாறு செய்து நம்நாட்டை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற உணர்வில் செயல்படத் தயங்கு கிறோம்.

நாடு காடாக இருக்கலாம்; மலையாக இருக்கலாம், மேடாக இருக்கலாம்; பள்ளமாக இருக்கலாம். ஆனால் அவற்றைத் திருத்தி, மக்கள் வாழிடமாகவும் மக்கள் வாழ்வுக் கேற்ற உணவுகள் விளை நிலமாகவும் அகழ்ந்து பிறபொருள் காணும் அருநிலமாகவும் நம் உழைப்பாலன்றோ அதை மாற்ற முடியும். நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும், தம் நாடு வாழ —சமுதாயம் வாழ, உயிர் வாழ, தனக்கு உற்ற வகையில் உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையை

உணர்ந்தால் உடனே செயல்படத் தோன்றுமல்லவா! அச்செயலே நாட்டை உயர்த்தி வாழவைக்கும் என்பது உறுதி!

இன்று உலகின் பல பாகங்களிலும்—ஏன்?—நம் நாட்டிலும் எத்தகையோ மேடுபள்ளங்கள் சமமாக்கப் பெற்று விளை நிலங்களாக மாற்றப் பெற்றுள்ளமையைக் காண்கிறோம், 'காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி' வற்றாவகையில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதை அறிகிறோம். எனினும் இன்னும் மக்களுக்கு உணவுப் பற்றாக்குறையாக இருப்பதற்கு நாட்டுமக்கள் உழைக்க வேண்டிய அளவுக்கு உழைக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. எத்தகைய நிலமாயினும் மனிதனுடைய கையால் செயல்படுநிலையில் இயங்குமாயின் அது திருந்திய நிலமாகும். கிராமங்களில் நிலத்துக்குச் 'செய்நேர்த்தி' செய்யப்பெற வேண்டுவதாக அம்மக்கள் பேசிக் கொள்வதை அறிவோர் மிகச் சிலரே. மக்கள் செய்நேர்த்தி நன்றாக அமையின் 'நன்செய்'யாகவும் குறை 'புன்செய்'யாகவும் அமைய, மற்றவை காடு கரம்பாக வீணாக உள்ளதை அறிவோம். நாட்டில் புன்செய் நன்செய்யாக வேண்டும். காடு கரம்புகள் திருத்தப் பெற்று விளை நிலங்களாக வேண்டும். வேறு பலவளங்களும் பெருக வேண்டும்.

ஒன்றும் இல்லையென்று சோம்பி இராது உற்ற நிலத்தில் கைவருந்திப் பாடுபட்டால் பயனுண்டு. இன்றேல் இகழ்ச்சி தான் மிஞ்சும். இதையே வள்ளுவர், 'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' எனக் காட்டுகிறார். எனவே எங்கள் 'நாட்டில் வளமில்லை—வரண்ட நிலம்—வரட்டு ஆறு. வழி இல்லை' என்று வாளா இராது கங்கையைக் காவிரியோடு இணைக்க வழிகாண வேண்டும். முயற்சி நடைபெறுகின்றதறிந்து மகிழ்ச்சி உண்டா

கிறது. அப்படியே பல ஆக்க வேலைகளைச் செய்யத் தனி மனிதரும் சமுதாயமும் அரசாங்கமும் முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும், நாம் எடுக்கின்ற முயற்சியினை ஒட்டியே நம்நாட்டு விளை வளம், வாணிப வளம் பிற வளங்கள் அனைத்தும் வளரும்; சிறக்கும். இன்றி நாம் வாளா இருப் போமாயின்—நாட்டின்மேல் குறை கூறிக்கொண்டே குமைந் திருப்போமாயின்—நாம் ஆழ்வோம் என்பது உறுதி. நாடு வாழ்வதும் வீழ்வதும் நம்மாலே—நம் செயலாலே—நம் முயற்சியின் அளவாலே என்று உணர்ந்து செயல்படவேண்டும். இந்த உண்மையினைத்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு அறிவுறுத்திச் சென்றார் ஔவையார். அவர் பாடலில் 'ஆடவர்' எனக் குறிப்பினும் அத்தொடர் அவருடன் இணைந்த பெண்டிரையும் குறிக்கும் என உணர்ந்து அனைவரும் செயல்பட வேண்டும். இதுவரையில் மறந்தது போதும். இனியாவது ஒன்றிச் செயலாற்றுவோம் என்று வேண்டி, அவர்தம் புறநானூற்று அடிகளை உங்கள் முன் வைக்கிறேன்.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம் 187)

# சிறுகாலையே செய்க

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றார் வள்ளுவர். ஆம்! அறிவு ஒன்றே மனிதனை மனிதனாக வாழவைப்பது; சமுதாய வாழ்வை அளிப்பது. வள்ளுவர் இத்தகைய மேலான அறிவுடைமையைக் கல்வி, கேள்விகளுக்கு அடுத்து அரசியலில் அமைத்துள்ளார். ஆனால் அற்ப அறிவு உடையவர்கள் உலகத்தில் வாழ்கின்றார்களே—அவர்களை எங்கே சேர்ப்பது

என்ற வினாவிற்கு, பின்னால் அங்கவியலில் பதில் சொல்லு கிறார். அப்புல்லறிவாளன் அவன் வாழும் வரையில் அவனுக்கும்—ஏன்?—சமுதாயத்துக்கும் ஒரு நோயாக இருப்ப தோடு, அல்கையாய் ஆடும் நிலையையும் சுட்டுகிறார். அறிவே இல்லாதவன் எத்தனையோ வகையில் மேம்பட்ட வன்; ஆனால் இந்தப் புல்லறிவாளனோ தானும் வாழ்வில் ஏமாந்து உலகையும் ஏமாற்றுவான். அதனால்தான் குறள், நாலடி இரண்டும் இப்புல்லறி வாண்மையைச் சுட்டி உலகைத் திருத்த நினைக்கின்றன.

வருமுன் காக்கும் திறமே சிறந்தது; போற்றப் பெறுவது. பெறுதற்கரிய மக்கட்பிறவி பெற்று, உயிர் வளர்ச்சியில் உச்சத்தில் நிற்கும் மனிதன் சமுதாயத்துக்கும் தனக்கும் ஆற்ற வேண்டியவற்றை எண்ண வேண்டும். உலகவாழ்வு செம்மையாக வழிகாட்டுவது அறிஞர் செயல். அதற்குத் தனி மனிதவாழ்வு செம்மையுற வேண்டும். அந்தச் செம்மை நலம் நாடி, வாய்ப்பு உள்ள போதே நல்ல செயல்களைச் செய்தல் அறிவுடைமை—இன்றேல்?

உயிர்ப்பயணம் நீண்டது. அப்பயண வழியில் உணவு விடுதிகள் கிடையா. எனவே முன் எச்சரிக்கையாக, பயணத் துக்குத் தேவையான உணவைச் சேகரித்துத் தோளில் சுமந்து செல்ல வேண்டும். இதைப் 'பொதி சோறு' என்பர்—ஆம்! வருங்காலத்துக்குப் பொதிந்து வைப்பது இந்த ஏற்பாடு. இன்றேல் வழியிடை ஏமாற வேண்டியிருக்கும். ஆம்! உரிய காலத்தில்—இளமையில்—வருங்கால வாழ்வுக்குரிய பொதியி னைக் கட்டி வைக்காவிட்டால் பின் விளைவு வேதனை யாகும். மறுமையில் நம்பிக்கை உடையார் அம்மறுமைக்கு வேண்டிய பொதியினைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இந்த உண்மைகளை உணராத புல்லறிவினார் வாடிவருந்த நிற்கும் நிலையினை நாலடியார் எண்ணிப் பார்க்கின்றது.

மேலும் அத்தகைய புல்லறிவினார் வாழ்வின் கடைசி காலத்தில் தம் செயலுக்கு வருந்தி, பொதி சோறு பொதிய நினைத்தாலும் அது நிறைவேறாத நிலையினையும் சுட்டு கிறார் நாலடி ஆசிரியர். மேலும் 'பாடு பட்டுத் தேடிப் பணத் தைப் புதைத்து வைத்த' அப்புல்லறிவினார் தம் இறுதி நாளில் அதைச் காட்ட நினைத்தாலும் முடியாது அலறுவர். அந்தப் பணமும் அவருக்கோ அவரைச் சார்ந்தாருக்கோ பயனற்றுப் போகிறது. இத்தகைய புல்லறிவினாரை—எவ்வுயிரையும் தம் உயிராய் ஒத்து நோக்கி அறம் ஆற்றா அற்பரை—நாலடி அழகாகக் காட்டுகிறது.

புல்லறிவாளன் இறக்கும் காலத்தில் தான் செய்யாது விட்டவற்றை எண்ணித் திருத்தவோ அன்றிப் பிறருக்குப் பெய்யாது முடிவைத்த பொன்னைக் குறிக்கவோ கைகுவித்துச் சைகை செய்கிறான்— வாய்பேசமுடியா நிலையில். ஆனால் பக்கத்தில் உள்ளவர் அவன் புளி விளங்காய் கேட்கிறான் என்று கூறி, போகும் உயிருக்குக் கேட்டதைக் கொடுக்க நினைப்பர். எனினும் புளித்தவிளம்பழத்துக்கு அதுகால மில்லையே எனக் கையை விரிப்பர். 'ஐயா! விளாம்பழமே என்கின்றீர்! ஆங்கதற்குப் பருவமன்று! என்செய்கோ' எனப் பதில் உரைத்து அவரை வழியனுப்ப ஏற்பாடு செய்வர்.

புல்லறிவினார் எல்லா நலன்களும் பெற்றும் நல்ல உணர்வோடு வாழ்ந்த காலத்தில் அறமாற்றி வாழாது, உலகை விட்டுப் போகும் காலத்தில் கழிந்ததற்கு இரங்கிச் செயலாற்ற நினைத்தும் முடியாத அவல நிலையைத்தான் நாலடியார்,

> **'சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி**
> **இறுகிறுகித் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறுகிப்**
> **பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்**
> **பொன்னும் புளிவிளங்காயாம்'**

என்று எள்ளிநகையாடுகிறது. இந்த அடிகளை உணர்ந்த நாம் நல்லறிவின் நெறிநின்று. 'கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்து' சமூகத்தையும் தரணியையும் நேரிய நிலையில் வாழ வைக்க வழிகாண்போமாக!

# புல்லறிவு புகவேண்டா

உலகில் வாழும் மனித மனம் விசித்திரமானது. 'எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற வேண்டும்' என்று அன்று தொட்டு இன்று வரை நல்லவர்கள் கூறிவந்த போதிலும் சமதர்மச் சமுதாயம் நாட்டில் இன்னும் உருவாக வில்லை. உள்ளார் சிலர், இல்லார் பலர் என்ற நிலையே காண்கிறோம். இடையிடையே உள்ளார் இல்லார் ஆதலும் இல்லார் உள்ளார் ஆதலும் இயற்கையாக நடைபெறுகிறது, 'ஆறிடை மேடும் மடுவும் போலாம்' செல்வம் என்பது மூதுரை.

அறிவுடைய நல்லவர்கள் உண்டான காலத்தில் உற்ற சமுதாயத்தையும் உயிரினத்தையும் ஒத்து நோக்கி, அறமாற்றி நனி சிறப்பர். உடம்பு பெற்ற பயனை அவ்வாறு உலகுக்கு அளித்த நல்லவர், பின் ஒருவேளை வறுமையுற்றாலும் அன்றி மறைய நேர்ந்தாலும் வாடமாட்டார்கள். நல்லறிவாளர் 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்ற நிலையறிந்து, கைத் துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்வர். இல்லாத காலத்தும் உயிரினத்துக்கு ஒல்லும் வகையில் உதவுவர். ஆனால் புல்லறிவாளர்?

ஒருசிலர் பொருளற்ற காலத்தில் 'நான் பொருள் பெற்றால் அதைச் செய்வேன் இதைச் செய்வேன்' என்றும் 'சமுதாயத்துக்கு இப்படி உதவுவேன்; உயர்த்துவேன்; பொருளால் உலகை உண்பிப்பேன்' என்றும் பறைசாற்றுவர்,

ஒருசிலர் 'நாங்கள் பதவிக்கு வந்தால் உலகையே புன்னகைப் பூஞ்சோலை ஆக்குவோம்' என்பர். ஆனால் அவை பெற்ற பின் நிலை வேறாகும் என்பதை உலகம் அறியும். இந்நிலை யினை நாலடியார் புல்லறிவினார் செயலாகச் சொல்லுகிறது. புல்லறிவினார் இல்லாத காலத்தில், 'பொருளும் பிறவும் வந்தால் எல்லாம் செய்வோம்' என்று பேசுவார். ஆயினும் அவர்களுக்கு எதிர்பாராது பெருஞ் செல்வம் வந்துற்றால், முன்பேசியவற்றை யெல்லாம் மறந்து, அத்தகைய அற மாற்றும் செயலை ஓரளவும் சிந்தியார் என்ற உண்மையை நாலடியார் சுட்டிக்காட்டி, அத்தகைய புல்லறிவாளரோடு உலகில் பொருந்தி வாழ்தல் எத்துணைக் கொடுமை வாய்ந்தது என விளக்கி, சமுதாயம் அத்தகைய அற்பர்களை ஒதுக்கித் தள்ளினாலன்றி உலகம் உய்ய வழியில்லை என்பதைக் காட்டு கிறது.

ஒன்றும் அற்ற வெறுமை நிலையில், மறுமைக்கு வேண்டிய அறங்களைச் செய்து, இம்மையிலும் சமுதாய வளர்ச்சிக்கு உதவி, தம்மையும் உயர்த்திக் கொள்ளும் வகையில் ஒன்றும் செய்ய வாய்ப்பில்லையே என வருந்தியவர் களாகிய புல்லறிவினார், அனைத்தும் ஆற்றக் கூடிய பெருஞ் செல்வத்தினை எதிர்பாராது பெறுவார்களாயின், ஒருசிறிதும் மிகக் குறைவான அளவிலும் உதவார் என்ற உண்மையினை 'ஐ' என்ற ஓரெழுத்துச் சொல்லாலே நாலடியார் விளக்கு கிறது. 'ஐ' என்பது இங்கே சிறுமையைக் குறிக்கும் என்பர். ஒரு சிறிதளவும் உதவார் என்பதாகும். 'செல்வம் வந்துற்ற போது தெய்வமும் சிறிது பேணார், சொல்வதை அறிந்து சொல்லார், சுற்றமும் துணையும் பேணார்' என்று ஆன்றோர் சொல்லிய கூற்றுக்குச் சான்றாக இப்புல்லறிவினார்—கயவர் உலகில் உலவுகின்றனர். இவர்களை எண்ணிய நாலடியார்.

'வெறுமை இடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தரே யாகி—மறுமையே
'ஐ'ந்தை அனைத்தானும் ஆற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவினார்' எனச் சுட்டிக் காட்டுகின்றது.

சிற்றறிவாகிய—அற்ப அறிவாகிய புல்லறிவாண்மை அறிவின்மையிலும் கொடியது. பொல்லாதவனிடத்தில் கத்தியைக் கொடுத்தால் அவன் அதனால் எத்தகைய கொடுமைகள் இழைப்பானோ என அஞ்சவேண்டுமன்றோ! புல்லறிவாளனிடத்துப் பொருள் சேரினும் அதேகதிதான். 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று நல்லவர் வையத்தை வாழவைக்கும் அதே வேளையில், இத்தகைய பொருள் பெற்ற புல்லறிவினார் மாறிச் செயலாற்றின் 'என்னாமோ வையம்?' என எண்ண வேண்டியுளளது. இவ்வாறு எண்ணியே நாலடியின் ஆசிரியர் உலகம் இத்தகைய புல்லறிவுக் கூட்டத்தை வளரவிடாமல் காக்க வேண்டும் என வற்புறுத்துகின்றார். கூடுமாயின் அவர்களைத் திருத்த முற்படுதல் அறிஞர்—நல்லறிவினார் கடனாகும். இந்த வானொலியின் அதிகாலைப்பொழுதின் அறநெறி முழக்கம் அத்தகைய நல்ல ஆக்கப்பணியினைச் செய்யும் என்பது உறுதி.

# கொன்னே கழியீர்

'வாழ்வு வாழ்வதற்கே'—இவ்வுண்மையை மறுப்பாரோ மறப்பாரோ யாரும் இலர், மக்களாய்ப் பிறந்த நாம் நன்றாக வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். நன்றாக வாழ்வது என்றால், 'முடிப்ப முடித்துப் பின் பூசுவபூசி, உடுப்ப உடுத்து உண்ப உண்டு' தன்னை மட்டும் வளர்த்துக் கொள்வதன்று. தான் வாழும் உலகத்தின் சமுதாய—மக்கள்—உயிரினம் நன்கு வாழ வழி செய்வதே நல்வாழ்வாகும். சமுதாயமாகிய

உடலில் எந்தப்பாகத்துக்கும் இடையூறு நேராமல் காத்தால் தான் தனிமனிதனாகிய உடலில் பகுதி நலமுறும். 'சமுதாயம் எக்கேடு கெட்டாலும் கவலைஇல்லை; நான் மட்டும் வாழ்ந்தால் போதும் 'என்று எண்ணுவார் நல்லறிவாள ராகார், நல்லறிவினார் தாம்பெற்ற வாழ்நாளையும் உற்ற பொருளையும் பிறவற்றையும் நன்கு பயன்படுத்துவர்—அவற்றால் தம்மையும் ஓம்பிச் சமுதாயத்தையும் வாழ வைப்பர். வாழ்வே மற்றவர்களுக்கு எனக் கொள்வர் நல்லறி வினார். அவர்களையே 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்' என்று உலகம் போற்றும்,

சிலர் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை வைத்துக் கொண்டு என்றென்றும் சிறக்க வாழலாம் எனப்பகற் கனவு காண்கின்றனர். 'நேற்றிருந்தார் இன்றில்லை' எனக் கண்டும் உணர்ந்தும் தாம்மட்டும் என்றும் வாழப் போவதாக நினைப்பர், 'கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக் கண்டும், என்றும் திறமாய் இருப்போம் என்றெண்ணுதே' எனப் பட்டினத் தடிகள் கூறியபடி புல்லறிவினார் என்றும் இருக்கப்போவதாக எண்ணி இறுமாப்பு எய்துகின்றனர். அவர்களாலேயே இன்று நாட்டிலும் உலகிலும் பல கொடுமை கள் நடப்பதைக்காண்கிறோம் இத்தகைய புல்லறிவினாரைக் கண்ட நாலடியார்,

'என்னே மற்றிடம்பு பெற்றும் அறம் நினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—என்னோ
அளவிறந்த காதற்றம் ஆருயிர் அன்னார்க்
கொளவிழையும் கூற்றமும் கண்டு'

என நகையாடுகிறது. இதில் புல்லறிவினார் 'கொன்னே கழிப்பர் தம் 'வாழ்நாளை' எனக் குறிக்கின்றது. பெறுதற் கரிய மானுட உடம்பு பெற்றும் அதன் பயனை உலகுக்கு அளிக்கவில்லையே எனக் கவல்கின்றது நாலடி. இந்த

உண்மையை இன்னும் பலர் உணரவில்லை. 'உழைப்பே உயர்வு தரும்' என்று அன்று தொட்டுக் கூறிவருவதோடு, இன்றைய 20 அம்சத்திட்டத்திலும் உழைப்புக்கு முதலிடம் தந்துள்ளனர், செல்வம் இருப்பினும் இன்றேனும் ஒருவரிடம் உழைப்பு இருக்குமாயின் அதுவே அவர் நாட்டினை நாடாக்க வல்லது, 'ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்' எனப் பாரதியார் அனைவரையும் அழைத்தார்.

'ஏதோபிறந்தோம்; எப்படியோ முன்னோர் வைத்த பெருஞ் சொத்து இருக்கிறது, நாம் ஏன் உழைக்க வேண்டும்' என்று ஏமாப்போர் ஒருபுறமும், 'என்ன உழைத்து என்ன கண்டோம்; கால்வயிறு கஞ்சிக்கு வழி இல்லையே' என ஏங்குவோர் ஒருபுறமும் அமைய, சமுதாயம் இன்று சரிநிலை பெறாத வகையிலே இருக்கிறது, இருவருமே 'வாழ் நாளைக் கொன்னே' கழிப்பவராகின்றனர். இந்த அவல நிலை மாற வேண்டும். அதற்கென இந்திய அரசாங்கம் இருபது அம்சத் திட்டத்தினைத் தீட்டியதோடு அமையாது, பல்வேறு ஆக்கப் பணிகளையும் செய்ய ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறது. எல்லாரும் கொன்னே நாளைக் கழிக்காது உழைக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படை. சில புல்லறிவினோர் தம் புன் செயலால் நாட்டுப் பொருளாதாரமே நலிவுறக் காண்கிறோம். இந்த அவல நிலைகளை யெல்லாம் எண்ணத் தான் போலும் அன்றே நாலடியார் 'புல்லறிவாண்மை' என்று அதிகாரத்தையும் பிரித்து, அதன் கடைசிபாடலில்' கொன்னே கழிப்பர் தம் வாழ்நாளை' என அவர்களை இனம் பிரித்தும் காட்டிவிட்டது. நாம் அத்தகைய புல்லறிவினாரைக் கண்டு அஞ்சி ஒதுங்க வேண்டும். இனியாகிலும் யாரும் கொன்னே சோம்பி இராத வாழ்வு பெறும் வகையில் நம் சமுதாயத்தைச் சீராக்க முற்பட்டு, நாட்டில் நல்லறிவு நிரம்பி, அதன் வழியே நலமெலாம் செழிக்க அனைவரும் இணைந்து பாடு படுவோமாக!

# மூதுரை

'மூதுரை' என்பதற்குப் பழைய உரை, பழைய சொல் அல்லது பழைய விளக்கம் எனப் பலவகையில் பொருள் கொள்ளலாம். 'முதியோர் உரை' எனக் கொள்வதும் பொருந்தும், மூதுரை என்றே ஒரு நூலும் உள்ளது. மூதாட்டியாகிய ஔவையார் உரைத்த முப்பது பாடல்களைக் கொண்ட நூலே - மூதுரை என்ற பெயரால் வழங்குகின்றது. அதற்கு 'வாக்குண்டாம்' என்ற பெயரும் உண்டு. ஔவையார் வயதானவரானதாலும் அவர் வாழ்க்கையில் பெற்ற அனுபவங் களைக் கொண்டே அந்தப் பாடல்களைச் செய்திருப்பதாலும் ஒவ்வொன்றும் மனித வாழ்வுக்கு ஏற்ற நீதி ஒவ்வொன்றை உணர்த்துவதாலும் அந்த நூல் மூதுரை எனப் பெற்றது. அதனைப் படிக்கின்ற—கேட்கின்ற மக்கள் அந்த நூல் கூறும் அறநெறியில் வாழக் கடமைப்பட்டவராகின்றனர். ஆம்! அந்த அறநெறி வழியே வாழ்ந்தால்தான் வையம் செம்மை யாகும். இல்லையானால்.........?

நாட்டில் அனுபவத்தால் முதியவர்கள் கூறும் சொற்கள் ஒவ்வொன்றும் எண்ணத்தக்கன. நன்கு படித்தவனைக் காட்டிலும் உலக வாழ்க்கையில் பட்டு, உழன்று, தெளிந்த பெரியவர்களே சிறந்தவர் என்பதனைத்தான் வள்ளுவர்,

**'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்'**

என்கின்றார். இதையே வலியுறுத்தும் வகையில் ஔவையார் கொன்றை வேந்தனில் 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று சுட்டி, பெரியவர்தம் வார்த்தைகளை மதித்து நடக்க வேண்டும் என வற்புறுத்துகிறார்.

திருவள்ளுவர் இரண்டு அதிகாரங்களில் மூத்தோர் பற்றிக் குறிக்கின்றார். 'பெரியாரைத் துணைக்கோடல்' என்று அரசியலிலும் 'பெரியாரைப் பிழையாமை' என்று அங்க இயலிலும் இரு அதிகாரங்கள் திருக்குறளில் உள்ளன.

ஆட்சி சிறக்க வேண்டுமானால் நாடாளுகின்ற அரசனானவன் பெரியாரை—முதியோரைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்றும், அப்படியே அரசின் அங்கமாகிய அமைச்சரும், நாடும் நாட்டுமக்களும் பிறரும் பெரியாரைப் பிழையாது அவர் காட்டிய வழியில் ஒழுக வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார் வள்ளுவர். தம் இருபது குறட்பாக்களிலும் அதற்கான காரணங்களை விளக்குகிறார். சான்றாண்மை மிக்கவராகி, பிறர் தீங்கு செயினும் பொறுத்தாள்பவராகி வையம் வாழ வழிகாட்டுபவராக இருப்பவரே பெரியவர் என்பது உலகறி உண்மை. நாட்டில் அத்தகைய நல்ல பெரியோர்கள் வாழ்ந் தால்தான் நாடு நன்கு விளங்கும் என்பதை அரசனாகிய 'கொற்கையாளி குலசேகரன்,' தன் வெற்றி வேற்கையில்

'சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே'

என்று காட்டி மூத்த அறிவுடைய சான்றோர் இல்லாத நாட்டில் வாழ்வதைக் காட்டிலும் குறவர் வாழும் காட்டில் வாழ்வதே சிறந்தது என்கிறார்.

சங்க காலப்புலவர் தம் நீண்ட வாழ்நாள் பெருக்கிற்கும் பிற நன்மைகளுக்கும் மூத்தோராகிய சான்றோரே காரணம் எனக் காட்டுவர்.

'யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையவரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆன்ற விந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'

என்று பிசிராந்தையார் என்ற புலவர் தனக்கும் தன் நாட்

டிற்கும் நலம் தரும் நல்லவர் முதிய சான்றோரே என்கின்றார். ஆம்! அவரும் ஒரு முதிய சான்றோர் அல்லவா?

எனவே அறிவாலும் சான்றாண்மையாலும் வயதாலும் மூத்தோர் வாழும் நாடே சிறந்த நாடு என்பதும், அந்நாட்டில் சமுதாய வாழ்வும் தனி மனித வாழ்வும் சிறக்கும் என்பதும் தெளிவாகின்றன. தன் தலைமயிர் வெளுக்காததற்கு மூத்தோராகிய சான்றோரே தலைக் காரணம் எனப் பிசிராந்தையார் சொல்லுகிறார் என்றால், பிற வாழ்க்கை நிலைகள் அப்பெரியோர்களால் சிறக்கும் நிலையினை விளக்கவும் வேண்டுமோ! எனவேதான் ஔவையார் நான் முன்னமே சுட்டியபடி 'மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்' என்று அவர்தம் வார்த்தைகளைச் சாவா மருந்தாக்கினார். உலக நீதி பாடிய உலகநாதரும் 'மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்' எனக் கூறுகின்றார். ஆம்! அவர்தம் மூதுரை, வழுக்கும் தரையில் நடக்கப் பயன்படும் ஊன்றுகோல் போன்று நம் வாழ்வில் வழுக்கி விழும்போது துணை நிற்கும் என்பது உறுதி.

திருவள்ளுவர் இம் மூத்தோரைப் பற்றி இரண்டு அதிகாரங்கள் கூறினார் என்று மேலே சுட்டினேன். அவர் காட்டியவற்றுள் இரண்டொன்றைக் காணல் ஏற்புடைத்தாகும் என எண்ணுகிறேன். நாடாளுகின்ற நல்ல அன்றைய அரசர்—இன்று ஆளும் அமைச்சர் மூத்தோர் சொல் கேட்டு அவர்கள் காட்டும் வழியினையே பின்பற்ற வேண்டும் என்றும், அத்தகையவரை அறவோரை—முதியோரை, ஆளுவோரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் ஆட்சிக்கு நல்லது என்றும் வற்புறுத்துவார்,

**'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்'**

என்று பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தில் சுட்டுகிறார். ஆம்! இந்தக் குறளை உள்ளத்தில் எழுதாது—அதன் பொருள் உற்றுணர்ந்து செயல்படாத காரணத்தினால் தான் அன்றும் இன்றும் பல பேரரசுகள் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து கெடுகின்றன. இது அர்சாங்கத்துக்கு மட்டுமன்றி, தனி மனிதனுக்கும் இன்று மிகவும் பொருந்தும். ஏன்! அரசுகளை உருவாக்குவதில் ஜனநாயக முறையில் தனி மனிதன்தானே முக்கிய இடம் பெறுகிறான்.

அத்தகைய நல்லவர்—மூத்தோர்தம் தொடர்பை விட்டால்—அவர் சொற் கேட்டு அவர்வழி நடக்காவிட்டால் என்ன நேரிடும் என்ற கேள்விக்கு வள்ளுவரே விடை தருகின் றார். உலகில் பலருடைய பகை கொண்டால் என்னாகும் என எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறார். 'இட்லர்' போன்றார் வாழ்வை எண்ணிப் பார்க்கலாம். அந்தத் தீமையைப் பத்தால் பெருக்கிக் கொள்ளச் சொல்கிறார். 'பத்து' என்பது வெறும் எண்ணைக் குறிப்பது அன்று. தமிழில் தனித்து வரும் எண் வரிசையில் உச்சியில் அமைவது; இதன் பிறகு கூட்டு எண்களே. எனவே 'பத்து' என்பது பலவாகக் கொள்ளும் எண்ணைக் குறிக்கும், ஆம்! அவ்வாறு பல்லோர் பகை பல மடங்கு பெருகினால் என்ன தீமை வருமோ அதனினும் அதிகமான தீமையினை, நல்லவர்—முதியவர் தொடர்பை விட்டால் நாடாளுபவர் தாமாகவே தேடிக் கொண்டு அழிவர் என்கிறார் வள்ளுவர். இது எவ்வளவு உண்மை என்பதை அன்றும் இன்றும் வரலாற்று வழியும் நாம் கண்கூடாகவும் காண்கிறோமல்லவா!

இவ்வாறே அங்க இயலிலும் வள்ளுவர் அரசரன்றி, பிற மக்களும் அமைச்சர் போன்ற அங்கமாக உள்ளவரும் உணர்ந்து கொள்ளுமாறு 'பெரியாரைப் பிழையாமை' என்ற

அதிகாரத்தினை அமைத்துள்ளார். அங்கே 'துணைக்கோடல்' என்று இன்றியமையா நிலையினை நாடாளுபவருக்குச் சொல்லிய வள்ளுவர், இங்கே பிழையாதிருக்க வேண்டும் என்கிறார். அவர்தம் துணை கொள்வதோடு அவரைப் பிழையாது போற்ற வேண்டிய உண்மையினையும் வற்புறுத்து கின்றார்.

பெரியாரொடு—மூத்தாரோடு சேர்ந்து வாழாதவர் எவ்வளவு சிறந்தவராயினும் சிறக்க முடியாது என்பதோடு, அவர் தம் சீற்றத்துக்கு உள்ளாயின் உய்தி இல்லை என்பதையும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

'எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்வில்லை
பெரியார் பிழைத்து ஒழுகுவார்'

என்றும்

'இறந்தமைந்த சால்புடையார் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்'

என்றும் வள்ளுவர் பெரியவர்களைப் பிழைத்து வாழ நினைப் பவர் வருந்த வேண்டிய நிலையினை நன்கு காட்டுகிறார். எரியால் சுடப்பட்டாலும் பிழைத்துக்கொள்ளலாம். ஆனால் முதியோர்தம் மூதுரை கொள்ளாது பிழைபடின் பிழைக்க வழி இல்லை என்பதோடு, தாம் எவ்வளவு சிறந்த பதவியில்—அரச வாழ்வில்—செல்ல நிலையில் உயர்ந்திருந்தாலும் பெரியார்—சிறந்தமைந்த செம்மையாளர் கோபத்துக்கு ஆளானால் பிழைக்க முடியாது என வற்புறுத்தி மூதுரை வழி நடக்க வழிகாட்டுகிறார்.

மூதுரை என்பது பற்றி முதலிலேயே விளக்கினேன். தமிழில் மூதுரை என்ற வாக்குண்டாம் ஔவையாரால் செய்யப்பெற்றதோடு மூதுரைக்கு விளக்கமாக அமைந்த 'பழமொழி' என்ற நூல் ஒன்றும் உண்டு. சங்க இலக்கியங்களுள்

பதினெண்கீழ்க் கணக்கும் ஒரு தொகுதி. அதில் வைத்து எண்ணப் பெறுவதே அப்பழமொழி. அது நானூறு பாடல் களைக் கொண்டது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழமொழி யினை—மூதுரையினைக் கொண்டு முடியும் நானூறு வெண் பாக்களைக் கொண்ட நூலே இது. இந்நூல் மட்டுமன்றி, திருக்குறள் தொடங்கி ஏலாதி வரையான பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் அனைத்தும் அறம் உணர்த்துவனவாய், பெரியோர் சொற்களைப் போற்றுவனவாய் அமைந்துள்ளன. தமிழில் மட்டுமன்றி வடமொழி, ஆங்கிலம் போன்ற பிற எல்லா மொழிகளிலும் இத்தகைய மூதுரைகள் உள்ளன. அவ்வந்நாட்டு மக்களின் முன்னோர்—முதியோர் சொல்லிய கருத்துக்கள் அனைத்தும் அவற்றுள் வடிக்கப்பெற்று, எக் காலத்தில் எழுந்ததாயினும், இன்று வரையில் சாகாவரம் பெற்று வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. அனைத்தும் மூதுரைகளேயாம்.

ஆயினும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழும் மனிதன் அத்தகைய மூதுரைகளைப் பின்பற்றத் தவறுகிறான்—தவறிவிட்டான். தத்தம் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் சொல்வதையே தட்டிக் கழிக்கின்றான். இவ்வாறு ஒதுக்கிய இதிகாசபுராண வரலாறுகளில் வரும் பலர் அழிவுற்றமையைக் கேட்டும், இன்றைய வாழ்வில் பெரியாரை மதியாது வழுக்கி வீழ்வாரைக் கண்டும், ஏனோ மூதுரையை மறந்து மனம் போன போக்கெல்லாம் போய்க் கொண்டிருக்கின்றான். அதனாலேயே உலகத்திலும் வீடு தோறும் பல போர்கள்—மாறாட்டங்கள்—குழப்பங்கள் உண்டாகின்றன. இந்த நிலையினை எண்ணி மனிதன் மூதுரையினை மதித்துப் போற்றிப் பின்பற்றுவனாயின் நாடு சிறக்கும், வீடு விளங்கும், உலகம் உய்யும். மனிதன் எண்ணித் திருந்துவானாக!

# வெஞ்சொலும் பொய்மையும் வேண்டா

மனிதன் மனிதனாக வாழ எத்தனையோ அறநூல்கள் வழிகாட்டுகின்றன. சமயத் தலைவர்களும் தத்தம் கடவுளரைப் பாடுங்காலத்து, எந்த நெறியில் நின்று வழி பட்டால் இறையருள் கிட்டும் என எண்ணிப் பார்க்கின்றனர். சமயத் தொண்டர்கள், வரும் துன்பங்களை யெல்லாம் புன்முறுவலோடு ஏற்று—தேவையாயின் அவற்றால் வாடி, பின் உளங்கலங்கா நிலையில் நின்று உலகில் அறம் காட்டி உயர்ந்து பின், சமயத் தலைவர் எனச் சமுதாயத்தால் போற்றப் பெறுகின்றனர். அவர்கள் காட்டிய அறம் பற்றிய தெய்வ நெறியைச் சமுதாயம் பின்பற்றுகிறது.

தமிழ் நாட்டில் சைவம் வளர்த்த பெருமை தேவாரம் பாடிய மூவரைச்சாரும். ஊர்தோறும் சென்று, மக்களொடு மக்களாய்ப் பழகி, அவர்தம் வாழ்வைத் தம் வாழ்வாக எண்ணி, அம்மூவரும் சமுதாயத்துக்குரிய அறநெறிகளை ஆங்காங்கே தத்தம் தேவாரப் பதிகங்களில் சுட்டிக் காட்டி யுள்ளனர் அம்மூவரும். மனிதவாழ்வுக்கு இறைவழிபாடு இன்றியமையாதது என்பதுடன் நில்லாது, இந்த இறைவழி பாட்டிற்கு வேறு சிலவும் இன்றியமையாதன என்கின்றனர். பெரிய காவியங்களும் கதைகளும் அந்த உண்மைகளைத் தத்தம் பாத்திரங்களின் மூலமும் அவற்றின் வாக்கின் மூலமும் காட்டுகின்றன. தேவாரம் பாடிய மூவரும் அந்த வகை யிலன்றி நேராகவே கடவுள் நெறிக்கு இன்னின்ன தேவை — இன்னின்ன விடத்தக்கன என வற்புறுத்திக் காட்டுகின்றனர். அவற்றுள்ளே இன்று இரண்டினைக் காண்போம்.

'இன்சொல் இளிதீன்றல் காண்பான் எவன் கொலோ வன் சொல் வழங்குவது' என வள்ளுவர் வினா எழுப்பி, கேட் பார்தம் சொந்த அனுபவத்தைச் சுட்டி, இன்சொல் இன்றேல் வாழ்வு சிறக்காது என வலியுறுத்திக் காட்டியுள்ளார். அப்பர

டிகளார் ஏழாம் நூற்றாண்டில் எத்தனையோ சமயமாறு பாடுகளுக்கிடையே எல்லையற்ற துன்பத்தை அனுபவித்து, கசிந்து கசிந்து உருகிப் பாடியவர். அவர் தம் துன்பத்துக்கு அஞ்சாது வாழ்ந்து, 'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்'' என்றும் 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை' என்றும் பாடியவர். அவர் அத்தனைத் துன்பங்களுக்கும் இடையில் வெஞ்சொல் விளம்பினார் என்று காட்ட இயலாது என எண்ணுகிறேன். அப்படியே தனக்குக் கொடுமை இழைத்த பாண்டியனிடம் தான்பெற்ற 'வெம்மை'யை எரியை சம்பந்தர், 'பையவே சென்று பாண்டியற் காகவே' என மெல்லச் செல்லுமாறு அன்பால் ஆணையிடுகிறார். அவர்கள் யாவரும் இறையருள் பெற்றவர்கள், இறைவனை அடைய வேண்டுமானால் 'வெஞ்சொல்' விலக்கப்பட வேண்டும் என உணர்ந்தவர்கள். அப்பரடிகள் அதை விளக்கமாக, ,வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடுற' எனக் காட்டுகிறார்' மேலும், உலகில் வாழவும் இன்சொல் இன்றியமையாதது என்பதனை 'வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார்' எனச் சுட்டிக் காட்டுகிறார். சம்பந்தர், இயமன் தூதுவர் உட்பட யாரையும் இன்சொலால் வெல்லலாம் என்ற உண்மையினை 'இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால், நயம் வந்தோத வல்லார் தமை நண்ணினால்' என்று பாடுகிறார். எனவே வாழ்வுக்கு—நல்வாழ்வுக்கு இன்றியமையாதது இன்சொல் என்பது தேற்றம்.

பொய்யா நெறியும் அத்தகையதே. இதுபற்றியும் பாடாத புலவர் இல்லை. பொய் நீங்கினாலன்றி, வேறு எத்தகைய வழிபாட்டாலும் இறைவனை அடைய முடியாது என்ற உண்மையினைச் சுந்தரர் அடிகள் காட்டுகின்றன. 'பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்துள்ளே, மெய்யே நின்றெரியும் விளக்கொத்த தேவர் பிரான்' என்பது அவர் வாக்கு. ஆம்! பொய்யாது அவன்புகழ்பாடின் அவ்விறைவன்

அவ்வாறு பாடுவார் உள்ளத்து ஒளிவிளக்காக அமைவான். அப்பரடிகளாரும், 'பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யனை' என்று சுட்டி, எல்லாவகையான பொய்மை களையும் கைவிடின் இறைவன் அத்தகையோர் உள்ளங்களில் ஒளிவிடுவான் என்கிறார். மேலும் பொய்யர் வீண் காலம் போக்கி வாழ்க்கையை வீணாக்குவர் என்ற உண்மையினை, 'பொய்யர் காலங்கள் போக்கிடுவார்களே' எனச் சுட்டுகிறார். எனவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் மறுமையில் இன்பம் பெற்று இறையருள் துய்ப்பதற்கும் வெஞ்சொல் நீக்கமும் பொய்மை நீக்கமும் இன்றியமையாதன என உணர்ந்து, இன் சொல் பேசி வாய்மையினைக் கடைப்பிடித்து வாழ்வோமாக!

# தாயுமானவர்

தமிழகத்தின் நடுவிலே காவிரிக்கரையிலே உள்ள திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் வீற்றிருந்தருளும் இறை வனுடைய பெயர் தாயுமானவர் என்பதாகும். ஒரு பெண்ணின் மகப்பேற்றுக்கெனத் துணைபுரிய வந்த தாய் வரமுடியா வகையில் காவிரியின் வெள்ளப் பெருக்கு தடை செய்ய, இந்த இறைவனே தாயாகச் சென்று மகப்பேறு கண்டு துணை செய்து தேற்றி வந்தமையால் இவ்விறைவனுக்குத் 'தாயுமானவர்' எனப் பெயர் வந்ததாகத் தலபுராணம் கூறும். திருச்சியிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் உள்ள இவ்விறை வனிடம் பற்றும் பாசமும் பக்தியும் கொண்டவர்கள் தம் பிள்ளைகளை அப்பெயரிட்டு அழைப்பர்! அத்தகைய முறையில் வந்தவரே மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்து தெய்வ இலக்கியம் பாடிய தாயுமானவராவர்.

சோழ நாட்டிலே திருமறைக்காடு எனும் வேதாரணியத்தில் வாழ்ந்த சைவ வேளாளர் மரபினைச் சார்ந்த கேடிலியப்பப் பிள்ளையின் மகனார் தாயுமானவர். பிள்ளை அவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய காரணத்தால் அக்காலத்தில் திருச்சியில் ஆட்சி புரிந்த விஜய இரகுநாத சொக்கலிங்க நாயக்கர் அவரை அழைத்து, தம் அரசாங்கத்தில் பெருங்கணக்கராக அமைத்துக் கொண்டார். பிள்ளையவர்களுக்குச் சிவசிதம்பரம் என்ற மகன் பிறந்த போதிலும், அவரை மகப்பேறு அற்ற தம் தமையனாருக்குத் தத்தாகக் கொடுத்து விட்டார். பின் திருச்சியில் தாயுமானவரை மகப் பேறு வேண்டி வழிபட்டபின் மற்றோர் ஆண் குழந்தை பிறக்க, அதற்குத் தாயுமானவர் எனப் பெயரிட்டார்.

தாயுமானவர் இளமையிலேயே கலை பல கற்று வடமொழியிலும் தமிழிலும் வல்லவராயினார். தந்தைக்குப்பின் இவர் அரசப் பணியில் இருந்தாரேனும். அவர் உள்ளம் இறைவன்பால் ஈர்க்கப்பெற, தனக்கு வழிகாட்ட ஞான குருவைத் தேடிக் கொண்டிருந்தார். இந்நிலையில் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு தேசிகரை ஒருநாள் இவர்காண அவரைப் பற்றிக் கொண்டு அவர் சீடராகி, மெய்யறிவும் யோக நிலையும் வளரப் பெற்றார். ஆசிரியரைப் பற்றி, 'மௌனகுரு வணக்கம்' என்ற பதிகமும் பாடியுள்ளார். அதில் தம் குரு திருமூலர் மரபில் வந்தவர் என்பதைக் குறித்துள்ளார்.

இவர்தம் யோக நிலை அறிந்த அரசனும் இவர் வழியே ஆவன செய்தானாயினும், அவன் சிலநாளில் மறைய, இவர் அங்கிருந்து தம் மாணவர் குழாத்துடன் புறப்பட்டு இராம நாதபுரம் அடைந்தார். தம் தமையனார் சொற்படி தமக்கு மணவாழ்வில் விருப்பின்றேனும், 'மட்டுவார் குழலி' என்ற மங்கையை மணந்து, சிலநாள் இல்லற வாழ்வில் இருந்து 'கனகசபாபதி' எனும் மகனையும் பெற்றார். பின் மனைவி மறைய தூய துறவறத்தை மேற்கொண்டார்.

பின் திருச்சிராப்பள்ளி மௌனகுரு மடத்தைச் சார்ந்து, கி.பி. 1644ம் ஆண்டு முதல் அதன் தலைவராக இருந்து ஞான தீட்டையுற்று, இறுதியில் இராமநாதபுரம் சென்று, அங்கு கி.பி. 1662 தைத் திங்கள் 28ம் நாள் விசாகத்தன்று இறை நிலையுற்றார். அவர் சமாதி அடைந்த இடத்தில் சமாதி ஒன்றும் மறைந்த நாள் குறித்த கல்வெட்டு ஒன்றும் உண்டு என்பர். (இவ்வரலாறு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக 1966ம் ஆண்டு வெளியீட்டிலிருந்து தொகுக்கப் பெற்றது)—

இவர்தம் படல்கள் உயர்ந்த தரத்தன. சிறப்பாகச் சைவ சமயத்தின் அடிப்படையில் இவர் பாடல்கள் அமையினும் சமரச நோக்குள்ளவையாகவும் வேதாந்த சித்தாந்த கருத்துக் கள் அமைந்தனவாகவும் பல பாடல்கள் உள்ளன. இவர்தம் பாடல் தொகுப்பில் அமைந்த முதற்பாடலாகிய 'அங்கிங் கெனாதபடி' என்ற பாடலே இவர்தம் சமரச உணர்வுக்கு எடுத்துக்காட்டாக அமையும். பலபாடல்கள் இறைவனைப் பற்றியன வாயினும் 'மலைவளர் காதலி' 'அகிலாண்ட நாயகி' 'பெரிய நாயகி' போன்ற பதிகங்கள் உமையம்மையாரைப் பற்றியனவாகவும் அமைகின்றன. இரண்டு அடிகளாலாகிய கண்ணிகள் பல இவர் இயற்றியுள்ளார். 'பராபரக்கண்ணி' அனைவரும் எளிமையில் படித்தறிந்து கொள்ளத்தக்கது. 'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே' (பராபர 155) போன்றவை அவர்தம் எளிமைக்குச் சான்றாவன.

இவர் ஐம்பத்தாறு தலைப்புகளில் பலவகைப் பாடல் களைப் பாடியுள்ளார். சில உயர்ந்த தத்துவக் கருத்துக் களைக் கொண்டவை. சில பாடல்கள் சித்தாந்தம் வேதாந்தம் என்ற இருவகையிலும் பொருள்கொள்ள அமைவன. இவர்தம் பாடல்களைத் திருவாசகத்துக்கு அடுத்துத் தமிழ் நாட்டவர் போற்றிப் பரவுவர்.

சைவத் தமிழ் இலக்கியங்களுள் மிகச் சிறந்த ஒரு சிலவற்றில் இவர்தம் பாடல்களும் இடம் பெறும். அதே போல சைவ அடியவர் வரிசையிலே தாயுமானவருக்கு முக்கிய இடம் உண்டு. இவர்தம் பாடல்கள் காலம் கடந்து வாழும் என்பது உறுதி.

# ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

'ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு ................. குன்றாத செல்வன்' என்று இறைவனைக் குறிக்கின்றார் மணிவாசகர். ஆம்! இறைவன் ஒருவன், அவனை வழிபடும் வழிகள் பல. இந்த உண்மையினை அவரே,

'தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'

என விளக்குகின்றார். 'நான் உன்னைச் 'சிவன்' என்ற பெயரால் அழைக்கின்றேன். ஆனால் உலகில்—எல்லா நாடு களிலும் அவரவர் வணங்கி வழிபடும் முறையின் இறைவனாக நீ இருக்கின்றாய்' என்கின்றார். இந்த உண்மையினை உணராத காரணத்தினால்தான் நம் நாடு சமயத்தால் பிளவு பட்டதோடன்றி இன்றும் சமயத்தின் பேரால் இங்கே மாறாட்டங்களும் போராட்டங்களும் நடைபெறுகின்றன.

மனிதன் நின்று, எண்ணி, செயலாற்றக் கடமைப் பட்டவன். அவ்வாறின்றி மனம் போன போக்கில் மதி இழந்த நிலையில்தான் வேறுபாடுகள் தோன்றுகின்றன. மனித நேயமும் ஒருமைப்பாட்டு உணர்வும் அறம், நட்பு இவற்றைக் கொண்டொழுகும் வாழ்வும் தேவை என்பதை நம் சான்றோர் ஒருவர் மனத்துக்கு உபதேசமாகக் காட்டுகிறார்.

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு, உயர் செல்வம் எல்லாம் அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார், வல்அறமும் நட்பும் நன்றென்றிரு, நடுநீங்காமலே நமக்கு இட்டபடி என்றென்றிரு மனமே உனக்கே உபதேசம் இதே' என்று தெய்வம் உண்மையினையும் அது ஒன்றே என்பதையும், பிற செல்வங்களை நம்பி வேறுபாடாகாத நல்வாழ்வும் ஏழைக்கு இரங்கும் உளமும், அறமும், நட்பும் இவையாவும் வேண்டப் படுவன என்றும் காட்டி மனத்தின் வழியே மனிதரை ஆற்றுப் படுத்துகிறார். ஆம்! இந்த 'ஒரே தெய்வ' உணர்வு உள்ளத்து அரும்புமானால் பிற வேறுபாடுகளும் மிருக உணர்வுகளும் காழ்ப்பும் கசப்பும் உலகில் இல்லையாகும். நாடு இந்த உண்மையை உணரும் நாளே உண்மையில் விடுதலை பெற்ற நாளாகும். திருமூலரும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று கூறியதையும் இங்கே நினைவு கொள்வோம்.

இன்றைய நிலையினை அன்றே எண்ணிய ஆன்றோர்கள் இவ்வாறு வேறுபட்டவர்கள் இறைவனைக் காண மாட்டார் கள் என்றே கூறுவர். 'அரனதிகன் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப் பரகதி சென்றடை வரிய பரிசே போல்' என்று தெளிந்த உண்மையை உவமையாகக் காட்டுகிறார் கம்பர். அன்று நாட்டில் வாழ்ந்த சைவ, வைணவ சமய அடிப்படையில் இது அமையினும் எல்லாச் சமயங்களுக்கும் இது பொருந்தும். இவ்வாறு வேறுபாடு கற்பித்து வாழும் மாக்களைக் கம்பர் அறிவிலார் என்கிறார். அத்துடன் அவர்களுக்குப் பரகதி கிடையாது என்கிறார். இந்த உண்மையினையே வேற்றுச் சமயத்தில் பட்டுழன்ற அப்பர்

> 'இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
> இரண்டாட்டா தொழிந்து ஈசன் திறமே பேணிக்
> கவராதே தொழு மடியார் நெஞ்சி னுள்ளே
> கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே'

என்று காட்டி, இந்தச் சமய வேறுபாட்டவால் தன் தெய்வம் உயர்ந்தது, என் தெய்வம் உயர்ந்தது என்று மயங்கி வாழும் மாக்கள் உள்ளத்தில் இறைவன் புக மாட்டான் என்றும், வேறு பாடு இன்றி இறைவனைப் போற்றுபவர் உள்ளத்திலேயே இறைவனைக் காண முடியும் என்றும் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே விளக்கியுள்ளார். பெரியபுராணத்துள் கல்லால் அடித்த வேற்றுச் சமயத்தவராகிய சாக்கிய நாயனா ருக்கு இறைவன் வீடு பேறு அளித்த வரலாற்றை இங்கே எண்ணலாம். எனவே இவ்வாறு காழ்ப்பற்ற பண்பட்ட உலகில் இன்று வேறுபாட்டைக் காண்கின்றோமே.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாயுமானார் இன்றைய நிலையை எண்ணித்தான் போலும் 'அங்கிங் கெனாத படி எங்கும் நிறையும் இறைவனைத் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது' என்கின்றார். ஆம்! இன்று உச்ச நீதிமன்றம் வரையில் சென்று 'என் தெய்வமா—உன் தெய்வமா' என்று வழக்கிடுவதைக் காண்கின்றோமே!

இன்றைய பரந்த பாரதத்தில் வாழும் நாம் இந்த வேறு பாடுகளை மறந்து மேலே கண்டபடி பல சான்றோர்கள் காட்டிய வாய்மொழிகளையே ஒளி விளக்கங்களாகக் கொண்டு, 'ஒன்றே தெய்வம்' என்ற உணர்விலே ஒன்றிய செயலிலே, வேறுபாடற்று வினையாற்றுவோமே யானால் நாடும் நானிலமும் நலம் பெறும். அத்தகைய உள ஒற்றுமை பெற்றுச் 'சேர வாரும் செகத்தீரே' என அனைவரையும் அழைத்து அமைதி பெறுகின்றேன்.

வாழ்க சமரசம். வளர்க ஒருமை உணர்வு.

# உயிர்களை ஒத்து நோக்குக

பிறவிகளுள் சிறந்தது மானிடப்பிறவியாகும். 'அரிதரிது மானுடராகப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். இந்த மனிதப் பிறவியில்தான் சென்றதையும் வருவதையும் சிந்தித்துச் செயல்புரியும் ஆற்றலை அவன் பெற்றுள்ளான். அவன் அவ்வாறு செயலாற்றும் திறத்தினாலேயே தன்னைத் தான் உயர்த்திக் கொள்ளவோ அன்றி தாழ்த்திக் கொள்ளவோ முடிகின்றது. மனிதனுடைய செயலே அவனை உலகில் நிலை பெற்று வாழவும் அன்றி நிலை கெட்டுத் தாழவும் செய்கிறது.

மனிதன் தான் வாழும் சுற்றுச் சார்பினால் தன் வாழ்வையும் செயலையும் பிறவற்றையும் அமைத்துக் கொள்ளுகிறான். மனிதன் அத்தகைய நிலையில் சில வேளைகளில் விலங்காவதும் உண்டு. திருவள்ளுவரும் பிற அறங்கூறும் அறிஞர்களும் மனிதன் செய்யலாகாத செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதோடு, அவற்றால் விளையும் பயன்களையும் தொட்டும் விளக்கியும் காட்டியுள்ளார். அப்படியே அறத்தாறு இது என விளக்கி, இவற்றைச் செய்யின் நாட்டிற்கும் உலகுக்கும் நன்மை உண்டாவதோடு, அச்செயலாற்றும் மனிதனுக்கும் நற்பெயரும் புகழும் பிற நலன்களும் உண்டாகும் என்றும் காட்டியுள்ளனர். ஆயினும் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அவற்றை எண்ணிப் பார்த்து, நல்லதைச் செய்து, அல்லதை விளக்க முற்படுவதில்லையே. அதனாலேயே வீட்டிலும் நாட்டிலும் ஊரிலும் உலகிலும் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் சண்டைகளும் போர்களும் உண்டாகின்றன. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற தாயுமானவர் சொற்படி—எண்ணப்படி எல்லாரும் வாழ நினைப்பார்களாயின்— வாழ்வார்களாயின் வீடும் நாடும் ஊரும் உலகும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்குமன்றோ ா 'ஆயினும் மனிதன் அந்த நிலையில் இல்லையே!

தன் செயல் நாட்டையும் மற்றவர்களையும் பாதிக்கின்றது என்பதோடு தன்னையும் பாதிக்கின்றது என்பதை மனிதன் உணருவதில்லை. உலகம் உள்ளளவும் வாழ்கின்றவர் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரே இருக்க, அல்லார் பலராக உள்ளமைக்குக் காரணம் மனிதன் மாற்று வழியே செல்கின்றான் என்பதைத் தானே காட்டுகின்றது. நின்று நினைத்துப் பார்த்து, தன் நிலை உணர்ந்து, ஒழுக்கமுடன் நடப்பானாயின் அவன் 'மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வான்' என்பது உறுதி.

'நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் —தன்னை
நிலை கலக்கிக் கீழ் இடுவானும்—தன்னை
மேன் மேல் உயர்த்தி நிறுப்பானும்—தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்'

என்ற அறிஞர் வாக்குப்படி தன் உயர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் தானே காரணம் என்பதை மனிதன் உணர்ந்தால் நல்லது—ஆனால் உணர்ந்தால் தானே!

எப்படியாவது வாழ வேண்டும் என்ற நினைவில் செய்யாதன செய்து, வஞ்சமும் பொய்யும் வழக்காறாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒருவன்—ஒருவேளை அந்தக் காலத்தில் நன்றாக வாழ்பவனாகக் காணப் பெறினும், அவன் வாழ்வு வற்றிய மர வாழ்வாக—அடிவேரற்ற அல்லல் வாழ்வாக அன்றோ அமையும். அவன் நிலை கெடின், அதே வேளையிலும் சாவுக்குப் பின்னும் அவனை மதிப்பார் யார்? எண்ணுவார் யார்? அவன் அவல வாழ்வு அவனோடு முடிந்து மறைந்த ஒன்றுதானே!

ஆனால் ஒருவன் மனித உணர்வோடு, உலக உயிர்களை ஒத்து நோக்கி நல்லன செய்து, நலம் புரிந்து அறங்காத்து, வழுவாத வாழ்க்கை நடத்துவானாயின் அவன் வாழும் காலத்தும் பிறகும்—ஏன்—உலகம் உள்ளளவும் போற்றப்படு

வானன்றோ! இதனாலேயே நான் மேலே காட்டிய பாடல் எழுந்தது.

தன்னைத் தலையாகச் செய்து— என்றும் வாழ விரும்பும் ஒருவன் 'எவ்வுயிரும் தன் உயிர் போல் எண்ணி', அருளறம் பூண்டு, தெய்வ உணர்வும் தெளிந்த சிந்தையும் உடையவனாகி, வையம் வாழத் தான் வாழும் வழுவிலா வாழ்க்கை வாழ்வானாயின் அவனை உலகம்' 'தெய்வத்துள்' வைத்துப் போற்றுமன்றோ! அதனால் இன்று உலகில் வாழும் நாம் அல்லன நீக்கி, அறம் போற்றி, நல்லன செய்ய முற்படுவோமானால் நாடும் உலகமும் சிறப்பதோடு, நாமும் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வோமே. அத்தகைய தெய்வ வாழ்வினை— வாழ்வாங்கு வாழும் வாழ்வினை, 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' என்ற உணர்வோடு கலந்த வாழ்வினை மேற்கொண்டு சிறக்க வேண்டும்.

## நலம் செழிக்க நல்ல வழி

உலகம் இன்பச் சோலையாக வாழ வழி வகுத்தவர் சிலர். எல்லாரும் வாழ வேண்டும் என எண்ணிச் செயலாற்றுபவர் சிலர். ஒருசிலர் வாழ இன்னின்ன முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென வற்புறுத்துவர். கடவுளை வணங்குபவர்களே யாயினும் வாழ்க்கைக்குரிய நற்பண்புகள் இல்லையானால், அவர்கள் கடவுளால் விரும்பப் படாதவர்கள் என்பர் பெரியோர். 'பொய் அனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யனை' என்பர் அப்பர். எனவே மனித நேயத்தோடு—அனைவரையும் ஒத்து நோக்கும் உணர்வோடு— எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் என்று எண்ணி யாருக்கும்—எதற்கும் தீங்கு செய்யாத நிலையில் வாழ்தலே மனிதப் பண்பாவதோடு கடவுளை அடையும் வழியுமாகும்.

கொடுத்தல் அறம்; ஆனால் வாங்குவது மாறுபட்டது. 'ஏற்பது இகழ்ச்சி' என்று கூறிய பின் ஔவையார் 'ஐயமிட்டுண்' என்கிறார். எனவே நாம் பிறனிடம் 'ஈ' எனக் கேளாது, மற்றவர் கேட்க நாம் வழங்குதலே மனிதப் பண்பாடு. இந்த நிலை நாட்டில் மலர்ந்தால் கொடுப் போர்க்கு இரப்பார் இல்லாத நிலை நாட்டில் சிறக்கு மன்றோ! அடுத்து, பிறர் பொருளை விரும்பாத பெருஞ் செயலே மனிதனுக்கு வேண்டுவது. 'அவா என்பது எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பீனும் வித்து' என்பார் வள்ளுவர். மெய் உணர்வு பெற்று, உள்ளதை உள்ளவாறு உற்றுணர்ந்து, போலியால் மயங்காது பெறும் உள உரமே மானுடர்க்கு இன்றியமையாதது. இன்று எல்லா வகையிலும் 'போலி'கள் மலிந்துள்ள உலகில் வாழும் மனிதன் மிக்க எச்சரிக்கையோடு வாழக் கடமைப் பட்டிருக்கிறான். இந்திய நாட்டு மக்கள் போலி வாழ்வில்—புற நிலை மயக்கத்தில்—மாறுபட்ட கலப்பில் இன்று மயங்கியதாலேயே நாட்டில் பல குழப்பங்கள் நிகழ்கின்றன. எனவே மெய் உணர்வு மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. மேலும் இந்த மனநிலை உண்டாயின் பிறரைத் தீங்கு சொல்ல அம்மனம் நினையாது. பிறரைச் சீ என்றும் நாயென்றும் பேயென்றும் பேசத் துணியாது. முதலில் மனிதன் வாக்கால் வரும் தவறுகளை நீக்க முற்பட வேண்டும்.

இந்த நிலையெல்லாம் எப்பொழுது உண்டாகும்? உள்ளம் தூய்மையாகவும் வாய்மை உடையதாகவும் இருந்தாலன்றி இவை அனைத்தும் கூடாதனவாகும். ஆகவே 'எதுவரினும் வருக அல்லது எது போயினும் போக' என்ற உணர்வில், உள்ளத்தே வாய்மையும் தூய்மையும் கொள்ளல் இன்றிய மையாதது. இந்த உண்மையைத் தான் பரந்த பாரத நாடு 'வாய்மையே வெல்லும்' என்று தன் தாரக மந்திரமாக—குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மற்றவர்க்குத் தீங்கு

பயவாத வாய்மை ஒருவருக்கு அமையுமானால் அவர் உள்ளம் தூய்மையாகும். அந்தத் தூய உள்ளத்திலே சாதி வேறுபாடோ, சமய வேறுபாடோ, நீதி வேறுபாடோ, மொழி வேறுபாடோ, நிற வேறுபாடோ பிற வேறுபாடுகளோ இல்லையாகும். ஆம்! அந்த உள்ளத்திலேயே ஆண்டவன் என்றும் குடி கொள்வான். அவ்வுள்ளமே சமரச ஞானம் கொள்ளும் உள்ளமாகும். இந்த உள்ளம் மனிதரிடை மலரின் உலகம் வாழ வேறு என்ன வேண்டும்? இவற்றையெல்லாம் எண்ணிய சமரச ஞானியராகிய அருட் பிரகாச வள்ளலார், சென்னை கந்த கோட்டத்து இறைவன் முன் நின்று, தான் அவனை என்றும் மறவா நிலையும் அவன் தன்னை என்றும் கைவிடா நிலையும் வேண்டி அந்நிலை பெற இவற்றை யெல்லாம் வேண்டித் தவம் கிடக்கிறார்.

இதோ அவர் வாக்கு.

'ஈயென்று நானொரு வரிடநின்று கேளாத
இயல்பும். என்னிட மொருவரீது
இடுவென்ற போதவர்க்கு இலை என்று சொல்லாமல்
இடுகின்ற திறமும், இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும், என்றும் உன்
நினைவு விடா நெறியும், அயலார்
நிதியொன்று நயவாத மனமும், மெய்ந் நிலை என்றும்
நெகிழாத திடமும், உலகில்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்கு சொல்லாத தெளிவும்,
திரமொன்று வாய்மையும் தூய்மையும் தந்து நின்
திருவடிக்கு ஆளாக்குவாய்.
தாயொன்று சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே.
தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே'

என்கிறார் வள்ளலார். ஆம். வள்ளலார் வாக்கைப் பின்பற்றி வாழின் நலம் செழிக்கும், வாழ்வு மலரும், நாம் நலம் பெறுவோம் என்று கூறி அமைகின்றேன்.

**வணக்கம்!**

## ஆசிரியர் அ. மு. ப அவர்கள் எழுதிய நூல்கள் — 85க்கு மேல் தற்போது உள்ளன

| | | |
|---|---|---|
| இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| கொய்த மலர்கள் | 4 | 50 |
| துன்பச்சூழல் (நாவல்) | 2 | 00 |
| மக்கட் செல்வம் | 2 | 00 |
| பெண் | 1 | 50 |
| மனிதன் எங்கே செல்கிறான் | 1 | 50 |
| தாயின் மணி வயிற்றில் | 1 | 00 |
| தொழில் வளம் | 5 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 3 | 00 |
| மலைவாழ் மக்கள் | 5 | 00 |
| சிறுவர்களுக்கு | 2 | 50 |
| வானொலி வழியே | 3 | 00 |
| நாலும் இரண்டும் | 2 | 50 |
| 19ம் நூற்றாண்டு உரைநடை | 8 | 00 |
| புதிய கல்விமுறை | 3 | 00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| சாத்தனார் | 6 | 00 |
| கவிதை உள்ளம் | 5 | 00 |
| மு. வ. தமிழ்த்தொண்டு | 5 | 00 |
| வையைத் தமிழ் | 3 | 50 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 5 | 00 |
| தமிழ்நாட்டு விழாக்கள் | 4 | 00 |
| காஞ்சி வாழ்க்கை | 5 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் | 20 | 00 |
| வழுவிலா மணிவாசகர் | 7 | 00 |
| **புதிய நூல்கள்** | | |
| ஏழுநாடுகளில் எழுப்து நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 16 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் (புதிய பதிப்பு) | 16 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| தாய்மை | 20 | 00 |
| கல்வி எனும் கண் | 12 | 00 |
| ஆனந்த முதல் ஆனந்த வரை | 40 | 00 |
| சான்றோர் வாக்கு (குறள் வழி) | 17 | 00 |
| **உடன் வர இருப்பன** | | |
| நல்லவை ஆற்றுமின்—(வானொலிப் பேச்சும் பிறவும்) | | |
| அருந்திறலாளர் அ. மு. ப. (மாணவர் தொகுத்தவை-1992) | 20 | 00 |